ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூலை 1, 2004 | புரட்சி 3 | முழக்கம் 25 | விலை : ரூ.2.50

## ஈரோடு மாவட்டக் கலந்துரையாடல் கூட்ட எழுச்சி • தி.க.விலிருந்து ஒதுங்கி இருந்த புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர் • 50 கிளைகளை உருவாக்கத் திட்டம்

# தாராபுரத்தில் 'தமிழர் உரிமை' முழக்க மாநாடு

**ஈரோடு மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. செப்டம்பர் மாதம் 19ம் தேதி - தாராபுரத்தில் தமிழர் உரிமை முழங்க மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டது; தாராபுரம் பகுதியில் திராவிடர் கழகத்திலிருந்து விலகி இருந்த தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்.**

*ஈரோடு மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் கோபி "கிரிராம் பேலஸ்" கூட்ட அரங்கில் 19.6.04 அன்று மாலை தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது.*

*தலைவர் தமது உரையில் புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தா சேகரிப்பு, கழக நூல்கள் வெளியீடு, விற்பனை, கழகத் தலைமை அலுவலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள், நிதி நிலை, தனியார் துறையில் இடஒதுக்கீடு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராக - தொடர் போராட்டம் நடத்துதல் ஆகியன குறித்து விரிவாகத் தெரிவித்தார்.*

*கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பொதுச்செயலாளர் கோவை இராமகிருஷ்ணன், பெரியார் காலத்திலிருந்து இயக்கம் பரவ எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், கண்ட களங்களையும், பிரச்சார உத்திகளையும் தோழர்கள் வியக்கும் வகையில் எடுத்துரைத்தார்.*

*முன்னதாக கூட்டத்திற்கு வருகை தந்தோரை மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன் வரவேற்றுப் பேசினார். மாநில நிதிக்குழு உறுப்பினர் க.பொன்னுசாமி, ஈரோடு கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இறுதியாக கோபி செயராமன் நன்றி கூறினார்.*

*கூட்டத்தில் சதுமுகை பழனிச்சாமி, குருவை நாத்திக ஜோதி, கவுந்தி மதி, விசயமங்கலம் விசு, கொளப்பளூர் வின்சென்ட், தாமோதரன், புதுரோடு சிதம்பரம், தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, எலத்தூர் செல்வக்குமார், கோபி சிதம்பரம், நேதா. ஆசைத்தம்பி, பரசுராமன், ஜீவா நாகப்பன், கெம்மநாய்க்கன்பாளையம் மூர்த்தி, சூரம்பட்டி பெரியார் ஜெகன், தாராபுரம் அழகப்பன் ஆகியோர் தங்களது கருத்துகளையும், 'பெரியார் முழக்கம்' சந்தா சேகரிப்பு, நூல் விற்பனைத் திட்டங்களையும் விரிவாகக் கூறினார்கள்.*

### கோபி. இளங்கோ கழகத்திற்கு ரூ.25,000 வழங்கினார்

**கூட்டத்தின் சிறப்புகள்**

1. *ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 50க்கும் மேற்பட்டோர் மிகுந்த ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.*
2. *ஈரோடு மாவட்டத்தின் தெற்குப் பகுதியான தாராபுரம் மற்றும் சுற்றுப்புறத்தைச் சார்ந்த 30-க்கும் மேற்பட்ட செயலார்வம் மிக்க தோழர்கள் சமீப காலமாக தி.க.விலிருந்து விலகி தனியாக செயல்பட்டு வந்தனர். தற்போது நம் இயக்கத்தின்பால் ஈடுபாடு கொண்டு, தம்மை இணைத்துக் கொள்ள முடிவெடுத்துள்ளனர்.*

   *அதுமட்டுமல்லாது வருகின்ற செப்டம்பர் மாதத்தில் தாராபுரத்தில் "தமிழர் உரிமை முழக்க மாநாடு" ஒன்றை நடத்தவும், அதில் மத்திய அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், சமூக சிந்தனையாளர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கம், இசையரங்கம், பேரணி, பொதுக்கூட்டம் என மிகப் பெரிய ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதையும், தாராபுரம் தோழர் அழகப்பன் தலைவர் மற்றும் செயலாளர் முன்னிலையில் கூட்டத்தில் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.*
3. *தாராபுரம் மாநாட்டில் 'குடியரசு 1926' நூல் வெளியிடப்படும் என கழகத் தலைவர் அறிவித்தார்.*
4. *ஈரோடு மாவட்டத்தின் சார்பில் 200 'பெரியார் முழக்கம்' சந்தாக்கள் சேர்ப்பதாகவும் 'சங் பரிவாரின் சதி வரலாறு' நூலை குறைந்தது 100 எண்கள் விற்பனை செய்யப்படும் எனவும் மாவட்டச் செயலாளர் உறுதியளித்தார்.*
5. *கழக வளர்ச்சி நிதியாக மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன்*

(4ம் பக்கம்)

# 'ஆன்மீகச் சிறுவனி'ன் மோசடிகளை தோலுரித்து பகுத்தறிவுச் சிறுமி, தமிழ்த் தென்றல் பிரச்சாரம்

### சேலத்தில் களமிறங்குகிறது கழகம்

*13 வயது பார்ப்பன சிறுவன் ஒருவரைக் 'கடவுள் அவதாரமாக' - பார்ப்பனர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் தங்களது மகனை வைத்து, பிழைப்பு நடத்த முயற்சிக்கிறது ஒரு கூட்டம் என்று, காவல் நிலையத்தில் புகார் கூறியிருக்கிறார்கள். சேலம் அம்மாப்பேட்டையைச் சார்ந்த அந்தப் பார்ப்பன சிறுவனை காஞ்சி சங்கர மடத்தில் வேதம் படிக்க பெற்றோர்கள் அனுப்பினர். சில ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களும், அந்தக் கொள்கைகளில் ஆர்வமுள்ள தொழிலதிபர்களும் பின்னால் இருந்து கொண்டு, சிறுவனைப் பெற்றோரிடமிருந்து பிரித்து, சிறுவனை 'ஆன்மீக' வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ளனர். இதற்காக சத்ய தர்ம சேவா அறக்கட்டளை என்ற அறக்கட்டளை ஒன்றையும் துவக்கி இருக்கிறார்கள். சிறுவர்கள் பாதுகாப்பு சட்டப்படி, இச்சிறுவனின் படிப்பைப் பாழடித்து, ஆன்மீக வியாபாரத்துக்குப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; ஆனால், சட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. தனது மகனை மீட்டுத் தருமாறு பெற்றோர்கள் புகார் தந்தும்கூட, நடவடிக்கை எதுவும் இல்லை; இந்த நிலையில் - இந்த மோசடிகளை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்த, சேலம் மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகம் களம் இறங்கியிருக்கிறது.*

*சிறுவர்கள் பாதுகாப்பு சட்டப்படி - இந்த சிறுவனை மீட்பதோடு, இச்சிறுவனை வைத்து ஆன்மீக வியாபாரம் செய்யும் நபர்களைக் கைது செய்து வழக்குத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தி, சேலத்தில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களையும், பொதுக் கூட்டத்தையும், தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்த இருக்கிறது. 13 வயது பகுத்தறிவுச் சிறுமி தமிழ்த் தென்றல், பார்ப்பன சிறுவனின் ஆன்மீக மோசடிகளை அம்பலப்படுத்தி உரையாற்றுகிறார். கழகப் பேச்சாளர் கோபி. வேலுச்சாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரும் கூட்டங்களில் பேசுகிறார்கள். 29-ம் தேதி, சேலம் சந்திப்பு, போஸ் மைதானம் ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்களும், மாலை தாதகாபட்டி கேட்டில் பொதுக் கூட்டமும் நடைபெறுகிறது.*

*சிறுவனின் ஆன்மீக மோசடிகளை அம்பலப்படுத்தும் துண்டறிக்கைகளை கழகத் தோழர்கள் நகரம் முழுதும் வழங்கி வருகிறார்கள். இந்த நடவடிக்கைகள் சேலம் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.*

தலையங்கம்

## “கார்த்திகேயன்கள்” தோன்றுவதைத் தடுக்க முடியாது!

ஆகமக் கோயில்களில் - பார்ப்பனரல்லாதார் கருவறைக்குள் நுழைந்து - அர்ச்சனை செய்தால் ‘சாமி’ தீட்டாகி விடும் என்ற இழிநிலையை எதிர்த்து கழகம் போர்க்கொடி உயர்த்தியது. கடந்த ஜனவரி 30-ம் தேதி - காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலுக்குள் அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் ஆகும் உரிமையை வலியுறுத்தி, கருவறை நுழைவுப் போராட்டத்தில் ஈடுபட்டு 860 கழகத் தோழர்கள் கைதானார்கள். தமிழர்கள் மீது சட்டப்படி சுமத்தப்பட்டுள்ள இழிவை எதிர்த்து -தந்தைபெரியார் தனது வாழ்நாளின் இறுதியில் அறிவித்த போராட்டம் இது. 1973-ல் தந்தை பெரியார் மறைவுக்குப் பிறகு, வலியுறுத்தப்படாத கோரிக்கையாகவே அது இருந்த நிலையில், தந்தை பெரியார் திராவிடர் கழகம், இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்தது. இதனைத் தொடர்ந்து இப்போது திராவிடர் கழகமும், இதே கோரிக்கையை வலியுறுத்தி, தமிழகம் முழுதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. திராவிடர் கழகத்தின் இந்த முயற்சியை தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆதரித்துப் பாராட்டுகிறது.

இந்த நிலையில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் கோயில் நுழைவுப் போராட்டம் நடத்திய காஞ்சி நகரிலிருந்து, ஒரு செய்தி வந்திருக்கிறது. கடந்த ஜூன்26ம் தேதி இரவு, காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் - பார்ப்பனரல்லாத தமிழின இளைஞர் ஒருவர் கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் சென்று, அங்கே இருந்த லிங்கத்தைக் கட்டிப் பிடித்து வழிபட்டிருக்கிறார்.

வடமொழியில் அர்ச்சனை நடத்திக் கொண்டிருந்த ரமேஷ் என்ற பார்ப்பன அர்ச்சகர், அந்த இளைஞர், கர்ப்பக் கிரகத்துள் செல்லும்போது, பலவந்தமாகத் தடுத்திருக்கிறார். அந்த இளைஞர் - பார்ப்பனரைத் திருப்பித் தாக்காமல், அவரது ‘பூணுலை’ மட்டும் அறுத்து எறிந்துவிட்டு, கருவறைக்குள் நுழைந்திருக்கிறார். மான உணர்வோடு செயல்பட்டுள்ள இந்த இளைஞனின் பெயர் கார்த்திகேயன்; பார்ப்பன ஏடுகள், உடனே ‘மனநிலை பாதிக்கப்பட்டவர்’ என்று சித்தரிக்கின்றன. அந்த இளைஞரைக் கைது செய்து காவல்துறையினர் வழக்குப் போட்டுள்ளார்களாம். பிரச்சினை இதோடு முடிந்து விடவில்லை. அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை, ஏகாம்பர நாதர் கோயிலில் ‘தீட்டை’க் கழிக்க - பார்ப்பனர்கள் பரிகார பூஜைகளை நடத்தியிருக்கிறார்கள். கர்ப்பக் கிரகத்துக்குள் பார்ப்பனரல்லாத ஒருவர் சென்று மூல விக்ரகத்தைக் கட்டிப் பிடித்ததால் தீட்டாகி விட்டதாம்!

கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் பார்ப்பனரல்லாத தமிழர்கள் எவரும் தீண்டப்படாதவர்களே என்பதை, பார்ப்பனர்கள், இதன் மூலம் மீண்டும் அறிவித்திருக்கிறார்கள்.

கர்ப்பக்கிரகத்துக்குள்ளே மரபுகளைத் தகர்த்தது, தண்டனைக்குரிய குற்றம் என்றால், பழனி முருகன் கர்ப்பக்கிரகத்துக்குள்ளே, போட்டி முருகன் சிலை வைத்து, ‘பிரதிஷ்டை’ செய்த காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரன் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமே? சங்கராச்சாரி வைத்த சிலையை - இப்போது அறநிலையத் துறையே அகற்றிவிட்டது என்றால், ஏற்கனவே சிலை வைத்தது தவறு என்பதை இவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பது தானே அர்த்தம்! கார்த்திகேயன் மீது பாய்கிற சட்டம், ஜெயேந்திரன் மீது ஏன் பாய மறுக்கிறது?

ஸ்மார்த்தப் பார்ப்பனர்களான சங்கராச்சாரிகள் - கோயிலுக்குள் கொடிக் கம்பங்களைத் தாண்டிச் செல்லக் கூடாது என்று ‘விதிகள்’ இருந்தும், அவைகளை எல்லாம் காலில் போட்டு மிதித்து விட்டு, கர்ப்பக் கிரகத்துக்குள் நுழைந்து சங்கராச்சாரிகள் பூஜைகள் நடத்தலாமா?

வடநாட்டில் காசி உட்படப் பல முக்கிய கோயில்களில், பக்தர்கள் நேராகக் கருவறைக்குள் சென்று மூல விக்ரத்தைக் கட்டிப் பிடித்து “ஆலிங்கனம்” செய்யலாம் என்ற உரிமை இருக்கும் போது, இங்கு மட்டும் அதைத் “தீட்டாக்கி” வைத்திருப்பது ஏன்?

இப்படிக் கர்ப்பக்கிரகத்துக்குள் ஒரே சாதியினர்தான் அர்ச்சகராக முடியும் என்ற ‘சம்பிரதாயங்கள்’ எல்லாம் அனைவருக்கும் சமத்துவத்தை வழங்கும் அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு ஏற்றுக் கொள்ள இயலாதவை என்று உச்ச நீதிமன்றமே 2002-ம் ஆண்டில் தீர்ப்பளித்துவிட்ட பிறகு, இத் தீர்ப்புகளை மதிக்காது ‘தீண்டாமை’யைத் திணித்துக் கொண்டிருப்பது, நீதிமன்றத்தையே அவமதிப்பது ஆகாதா, என்று கேட்கிறோம். எனவே தான், இனியும் காலம் தாழ்த்தாமல் தமிழ்நாட்டில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கும் நடவடிக்கைகளை எடுத்து, கர்ப்பக் கிரகத்துக்குள் பார்ப்பனர்கள் கட்டிக் காப்பாற்றி வரும் ‘தீண்டாமைக்கு’ ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று தமிழக அரசை வற்புறுத்துகிறோம்.

இல்லாவிட்டால் - மானமுள்ள “கார்த்திகேயன்கள்” தமிழகம் முழுதும் தோன்றுவதைத் தடுக்க முடியாது.

# ‘கீதை’யின் வஞ்சகப் பின்னணி!

**(பிரேம்நாத் பசாஸ் எழுதிய ‘இந்திய வரலாற்றில் பகவத்கீதை’ நூலின் சுருக்கமான உள்ளடக்கம் - சென்ற இதழ் தொடர்ச்சி)**

- கீதையின் காலம் குறித்தும் - அது ஒருவரால் தான் இயற்றப்பட்டது என்பது குறித்தும் - குழப்பமான கருத்துகள் நிலவுகின்றன.
- “சாதியக் கட்டமைப்பின் இறுக்கம் நொறுங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் மீண்டும் சாதியக் கட்டுமானத்தை வலிமைப்படுத்தவே கீதை வந்தது என்கிறார், ஆய்வாளர் டி.பி.ஹில்.
- பாரதப் போரில் அர்ச்சுணனுக்கு, தேரோட்டுபவனாக இருந்த கிருஷ்ணன், அர்ச்சுனனுக்கு கூறிய அறிவுரைதான் கீதை என்ற கருத்தை ஏற்க இயலாது. போர்க்களத்தில் போர்ச் சூழல் பற்றிய உரையாடல்கள் தான் நடந்திருக்க முடியுமே தவிர வேறு பல தத்துவங்கள் பற்றிப் பேச, போர்க்களம் உரிய இடமாக இருக்காது. எனவே கீதையின் உள்ளடக்கம், பிற்காலத்தில் விரிவுபடுத்தி எழுதப்பட்டது என்பது பல ஆய்வாளர் களின் கருத்து. ஆனால் பகவத்கீதை இறை வனால் ‘அருளப்பட்டது’ என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.
- கீதை - ஒரு வரலாற்று நிகழ்வு என்பது சந்தேகத்துக்குரியது என்கிறார் காந்தியார். கீதையில் இடைச் செருகல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார் டாக்டர் இராதாகிருஷ்ணன். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கீதையை எழுதினார்கள் என்பதை மட்டும் அவர் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்.
- கீதை எழுதப்பட்ட காலம் கி.மு.500 முதல் கி.பி. 300 வரை என்கிறார்கள். அதாவது 800 ஆண்டுகால இடைவெளியில் கீதை எழுதப்பட்டதாம். காலத்தைத் தவறாக நிர்ணயிக்க முயலுகிறார்கள் என்று சந்தேகத்தையே இது உருவாக்குகிறது. உண்மையில் கி.பி.400க்குப் பிறகே கீதை எழுதப்பட்டுள்ளது என்பது பல ஆய்வாளர்களின் கருத்து.
- இந்தியாவின் முதல் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் வேண்டுகோளை ஏற்று, கி.பி.1785-ல் சார்லஸ் வில்கின்ஸ் என்பவர் முதன்முதலாக கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பல மேலை நாட்டு ஆய்வாளர்கள், இதற்குப் பிறகு தான் கீதையை ஆராய்ச்சி செய்யத் துவங்கினர்.
- பவுத்த மதம் தோன்றுவதற்கு முன்பே கீதை எழுதப்பட்டுவிட்டது என்ற நேருவின் கருத்தை, வரலாற்ற ஆய்வாளர் டி.டி. கோசாம்பி மறுக்கிறார். “காந்தியின் ஆசிரமத்தில் நாள் தோறும், கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள சுலோகங்கள் 55 முதல் 82 வரை பசனைப் பாடல்களாகப் பாடப்பட்டு வந்தன. இவை பவத்தக் கருத்துக்களையே எதிராக வைக் கின்றன. பவுத்தக் கோட்பாடுகளைப் பற்றிய புரிதல் இல்லாமல், இந்த சுலோகங்களை எழுதியிருக்கவே முடியாது. பவுத்தம் கூறிய ‘கருமவினையிலிருந்து விடுபடுதல்’ என்ற தத்துவத்தையே, இந்த சுலோகங்கள் கூறுகின்றன” என்கிறார் ஆய்வாளர் டி.டி.கோசாம்பி.
- கடந்த 16 நூற்றாண்டுகளாக பகவத் கீதை இந்துக்களால், பார்ப்பனர்களால் பக்தி யுடன் படிக்கப்பட்டு வருகிறது. இருந்தும், இந்தக்களின் ஒழுக்க நெறியை கீதை ஏன் வளர்க்கவில்லை?
- ரிக் வேத காலத்தில் கருநிறம் கொண்ட ‘அரக்கனாக’ ஆரியர்களால் ஒதுக்கப்பட்ட கிருஷ்ணன், பகவத் கீதையில் விஷ்ணுவின் அவதாரமாக உயர்த்தப்படுகிறான். என்ன காரணம்? ஆரியரல்லாதோருக்கு முக்கியத்துவம் கொடுத்து பார்ப்பனியத்தை மக்களிடையே பரவலாக்குவதற்கான சூழ்ச்சியே, இது
- நூலாசிரியர் பிரேம்நாத் பசாஸ் கூறுகிறார்: “சத்திரியர்கள் தான் பவுத்தப் புரட்சியை முன்னின்று நடத்தினர். பவுத்தப் புரட்சியை நசுக்கும் முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கக் கூடியவர்களும் சத்திரியர்கள் தான். எனவே புதிய பார்ப்பனியத்தின் பாடலை (கீதையை) சத்திரியர் வாயில் பாட வைத் தனர். அதுவே புரட்சியைப் புறக்காணு வதற்குப் போதுமானதாக இருந்தது.

  பார்ப்பனியத்திடம் பவுத்தம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்ட அந்தச் சூழலில், கீதை ஆசிரியன், அர்ச்சுனனது பாத்திரத்தில் சித்தரிக்கும் இளைஞனைப் போன்ற படித்த, படிக்காத எண்ணற்ற இளைஞர்கள் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும். அந்த இளைஞர்களைக் கவர்ந்து இழுத்து, தங்கள் வலையில் சிக்க வைக்கவும், வேதாந்த மதத்தில் பிடிப்புள்ளவர்களாக மாற்றும் வஞ்சக நோக்கத்துடனும் தான் பகவத்கீதை இயற்றப்பட்டது” என்கிறார் நூலாசிரியர் பசாஸ்.
- “ஈவிரக்கமற்ற குரூரம், தார்மீக மதிப்புகள் அனைத்தையும் கைவிடுதல், மனித நேயமற்ற செயல்களில் ஈடுபடுதல், நாகரீகமின்றி நடந்து கொள்ளுதல், மூர்க்கத்தனம் ஆகிய அனைத்தும் மகாபாரதம் போரின்போது கடைபிடிக்கப்பட்ட தீ நெறிகளாகும். இத் தீய நெறிகள்தான் மனித உள்ளத்தில் அவநம்பிக்கையும், உருவாக்கக் கூடியவையாக இருந்தன. இந்த அவநம்பிக்கையும் சரணா கதி உணர்வும், மறு உலக நம்பிக்கையும் தான் கீதை உரைக்கும் தத்துவத்தின் அடிப்படைகளாகும்” என்று அழுத்தமாகக் கூறுகிறார் நூலாசிரியர் பசாஸ். (தொடரும்)

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சமூக விழாவாக நடந்த மகராசன் -அம்சம் மணவிழா

ஆய்வு மாணவர்களான மகாராசன்-அம்சம் ஆகியோர் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 27.6.2004 அன்று மதுரை ‘ஆர்.சுப்ரமணியம் - மீனாட்சியம்மாள்’ திருமண அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. மணவிழாவுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கி சுயமரியாதைத் திருமணத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினார். மணமகன் மகாராசன் ‘ஏர்’ எனும் இலக்கிய இதழை நடத்தி வருகிறார். ‘கலகக்காரர் தோழர் பெரியார்’ நாடகத்திலும் நடித்தவர். மணவிழாவை சொல்லாய்வறிஞர் ப. அருளி, நடத்தி வைத்து தந்தை பெரியாரின் தன்னலமற்றத் தொண்டுகளை உணர்வுகளோடு எடுத்துரைத்தார். மணவிழாவிலேயே தோழர் கருநாவின் ‘குருதியில் படர்ந்த உயிர்ப்பூ’ என்ற கவிதை நூலை - கவிஞர் அறிவுமதி வெளியிட - பேராசிரியர் சீனிவாசன் பெற்றுக் கொண்டார். வழக்குரைஞர் பொற்கொடி, பேராசிரியர் தொ.பரமசிவம், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். உறுதிமொழி ஏற்று மாலை மாற்றிக் கொண்ட மணமக்கள் மேடையிலிருந்து கீழே இறங்கி, ஒவ்வொருவர் இருக்கைக்கும் சென்று, வாழ்த்துக்களைப் பெற்ற காட்சி சிறப்பாக இருந்தது.

தமிழர் சமூகத்தின் உரிமைகளுக்கு நாங்கள் இருவரும் தொடர்ந்து பாடுபடுவோம் என்று மணமக்கள் இருவரும் கை கோர்த்து உறுதி ஏற்று தங்களது நன்றியைத் தெரிவித்தனர்.

இந்த மணவிழா வழமையான உறவினர்களின் விழாவாக மட்டும் இல்லாமல், சமூக விழாவாக நடந்தது.

## பகுத்தறிவு சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா: கலைஞர் பங்கேற்கிறார்

பேராசிரியர் டாக்டர் மா.நன்னன், மறைந்த தனது மகன் அண்ணல் நினைவாக நடத்திய பகுத்தறிவு சிறுகதைப் போட்டிகளில், தேர்வு பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா, ஜூன் 30-ம் தேதி மாலை 6 மணியளவில் வடசென்னை தியாகராயர் கல்லூரியில் உள்ள தியாகராயர் அரங்கில் நடைபெறுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி கலைஞர் உரையாற்றுகிறார். பேராசிரயர் அன்பழகன் சிறப்புரையாற்றுகிறார். போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ள ‘திருவாசகம்’ எனும் சிறுகதையை எழுதிய தோழர் கா.மு.சிதம்பரத்துக்கு ரூ.10,000மும், இரண்டாவது பரிசு பெற்றுள்ள ஆறு. இராமநாதன் எழுதியுள்ள ‘நொண்டிப்பிள்ளையார்’ கதைக்கு ரூ.6000மும், எஸ்.ரவிக்குமார் எழுதியுள்ள ‘பெயர் மாற்றம்’ எனும் சிறுகதைக்கு ரூ.4000மும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. விழாவில் டாக்டர் நன்னன் தொகுத்துள்ள ‘பெரியார் அடங்கல்’ எனும் தொகுப்பு நூலும், ‘உரை நடையா? குறை நடையா?’ என்ற நன்னன் எழுதிய நூலும், பகுத்தறிவுச் சிறுகதைகளின் தொகுப்பு நூலும் வெளியிடப்படவிருக்கின்றன.

சிறுகதைப் போட்டியைத் தொடர்ந்து பகுத்தறிவுப் புதினங்களுக்கான போட்டி ஒன்றையும் விழாவில் டாக்டர் நன்னன் அறிவிக்க இருக்கிறார்.

# வெள்ளிக் கிழமை விளக்கு வைத்த நேரம்!

## சித்திரபுத்திரன்

**('குடிஅரசு' ஏட்டில் தந்தை பெரியார் 'சித்திரபுத்திரன்' என்ற பெயரில் - 'கிண்டல்' நடையில் நல்ல இலக்கியங்களைப் படைத்திருக்கிறார். நகைச்சுவை ததும்பிடும் தந்தைபெரியாரின் 'நடைச் சித்திரத்தை' கழக இளைஞர்களின் சிந்தனைக்கு வைக்கிறோம்)**

**நகை வியாபாரி:** *ஐயா! தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கி வந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத் தெரிவித்து விட்டால் அதை வேறு ஒருவர் வேண்டுமென்று சொல்லி மத்தியானமிருந்த கடையில் காத்துக் கொண்டிருக்கிறார். அவருக்காவது கொடுத்து விடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவு செய்து உடனே தெரிவித்து விடுங்கள்.*

**வைதீகர்:** *செட்டியாரே! அந்த நகை தேவையில்லை. வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குறுக்கே போச்சுது. அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையில் உள்ள காசை எண்ணிப் பார்த்தார்கள். அதில் 68 காசுகளிருந்தது. எட்டு எண்ணிக்கை கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆகிவருவதில்லை. அதனால் அவர்களும் உடனே கீழே போட்டு விட்டார்கள். ஆனதனால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.*

**ந.வி.:** *அப்படியானால் தயவுசெய்து கொடுத்து விடுங்கள். வேறு ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார்.*

**வைதீ:** *ஆஹா, கொடுத்து விடுவதில் ஆட்சேபணையில்லை. காலையில் நேரத்தில் வாருங்கள் கொடுத்து விடுகின்றேன்.*

**ந.வி.:** *அவர் இன்று இராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர். அதனால் தயவுசெய்து இப்பொழுதே கொடுத்து விடுங்கள்.*

**வைதீ:** *செட்டியாரே, தாங்களென்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள். வெள்ளிக்கிழமை அதுவும் விளக்கு வைத்த நேரம். இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லட்சுமி அல்லவா?*

**ந.வி.:** *என்ன அய்யா, வியாபாரத்திற்காக பெண்டுகளுக்குக் காட்டி விட்டுக் கொண்டு வருகிறேன் என்று எடுத்துக் கொண்டுவந்த நகையை வேறு ஒருவர் அவசரமாகக் கேட்கின்றார் என்று வந்து கேட்டால், வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம் என்கிறீர்களே; இது என்ன ஒழுங்கு? ஊரார் நகைக்கு நாள் என்ன,நேரமென்ன என்பது எனக்கு விளங்கவில்லையே?*

**வைதீ :** *(தனக்குள்ளாகவே இந்த இழவு நகையை நாம் என் இந்த மனிதனிடம் வாங்கி வந்தோம் என்று நினைத்துக் கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்க வேண்டும். உம்ம கடைக்கு வந்ததே பிசகு; தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும் போதே மணி பத்தரை இருக்கும். நல்ல ராகுகாலத்தில் எடுத்து வந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த்தான் தீரும். எனக்குப் புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்ய மாட்டேன். தயவுசெய்து நாளைக்கு வாருங்கள்.*

**ந.வி. :** *இது என்ன ஐயா தமாஷ் செய்கிறீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால், நாள் கோள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். ஊரார் நகைக்கு இதெல்லாம் பார்க்கச் சொல்லி உங்களுக்கெவன் புத்தி சொல்லிக் கொடுத்தான்? அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள். அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையைக் கொடுங்கள் நேரமாகுது.*

**வைதீ:** *நீங்கள் "குடிஅரசு" பத்திரிகைக்கட்சியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரத்தையும் கேலி செய்கின்றீர்களே; அந்தக் கூட்டத்திற்குத் தான் நல்லது இல்லை. கெட்டதில்லை. மேல் இல்லை கீழ் இல்லை, கோவில் இல்லை, குளமில்லை. சாஸ்திரமில்லை, புராணமில்லை, பறையனும் பாப்பானும் ஒண்ணு என்று ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக் கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல் பேசுகின்றீர்களே.*

**ந.வி.:** *நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்துவிடும். பவுன் விலை இறங்கப் போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்து விடும். வேறொரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார். இனி தாமதம் செய்யாதீர். இருட்டாகப் போகிறது. சீக்கிரம் எடுத்துக் கொண்டு வாரும்.*

**வைதீ:** *வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார். என்ன,ஏன் பேசவில்லை? செட்டியார் காசு மாலை கேட்கின்றார்.*

**அம்மா:** *வெகுநேர்த்தி. இன்றைக்கு வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம். லட்சுமியை வீட்டை விட்டு வெளியில் கொடுக்கலாமா?*

**புருஷன்:** *எல்லாம் நான் சொல்லிப் பார்த்தாய் விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்திக் கொண்டு வெளியில் காத்துக் கொண்டிருக்கிறார்.*

**அம்மா:** *(பலமாய் சத்தம் பாட்டுக் கொண்டு வெளியில் வருகிறபோது பேசிக்கொண்டு வருவதாவது) "செட்டியாருக்குத்தான் புத்தியில்லை. உங்களுக்குமா புத்தியில்லை. அவர் என்ன செட்டியா, மட்டியா? வீடு வாசல் வைத்துப் பிழைத்த மனிதனா? நாடோடித்தடம் போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்த நேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறாரா? நான் போய் கேட்கிறேன்" (என்று வெளியில் வந்து) என்ன செட்டியாரே உமக்குப் புத்தியில்லையா? இப்பொழுதுதான் ஏதோ கொஞ்சம் ஓஹோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கிறது. அதுக்குள் நீர் எமனாய் வந்துவிட்டீர். நீர் கொள்ளையில் போய் விடுவீரா? அல்லது ஒரு மனிதன் நகை வாங்க வந்தவன் காத்திருக்கிறான் என்கிறீரே அவன்தான் கொள்ளையில் போய் விடுவானா? உனக்குத்தான் புத்தியில்லாவிட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா. வெள்ளிக்கிழமை நகையைப் போய் கேட்கச் சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச் சொல்லி இருக்கிறானே. அத்தனை அவசரம் என்ன ?*

*(இச் சமயத்தில் மகன் வந்து விட்டான்)*

**மகன்:** *என்ன அம்மா கூச்சல் போடுகிறாய். இவர் யார்?*

**தாயார்:** *இவரா. இவர் ஒரு நகை வியாபாரியாம். இவர் தலையில் நெருப்பைக் கொட்ட, வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசு மாலையைக் கொண்டு வந்து கொடுக்கவேண்டுமாம். ரகளைக்கு நிற்கிறார்.*

**மகன்:** *அதெல்லாம் இருக்கட்டும்; ஜாஸ்தி பேசாதே. நமக்குக் காசு மாலையேது? நம் வீட்டில் காசு மாலை இல்லையே. நேற்றுத் தானே அப்பா ஒரு காசுமாலை வாங்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வாங்கி ஆய்விட்டது காசுமாலை?*

**தாயார்:** *உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ. இன்று காலையில் கடைக்குப் போனார். இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது. அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கி வந்தார். நேற்று நினைக்கும் போதே ராகு காலம். இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும் போதும் ராகுகாலம். வழியில் வரும்போதும் பூனை குறுக்கே போச்சுதாம். அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலைசுத்தியெறிந்துவிட்டு வர வேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது. நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி எண்ணிப் பார்த்தேன். காசு அறுபத்தி எட்டாயிருந்தது. உடனே தலையைச் சுற்றி எறிந்துவிட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்து விட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுகிறார். யாரோ வேறே கிராக்கி காத்துக் கொண்டிருக்கின்றதாம். வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரம். முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.*

**மகன்:** *அய்யயோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்கிறது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றதே. வெள்ளியாவது, சனியாவது? ராகுவாவது, கேது ஆவது? ஊரார் வீட்டு நகையை வாங்கிக் கொண்டு வந்து பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொண்டு வெள்ளியுஞ், சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிடு. இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?*

*அதற்குள் அப்பா வந்து விட்டார்.*

**அப்பா:** *என்னடா பயலே! பலே! அதிகப் பிரசங்கியாய்ப் போய்விட்டே! நான் அப்போதே உன்னை "குடிஅரசு" பத்திரிகையைப் படிக்க வேண்டாம். கெட்டுப் போவாய் என்ற சொன்னேனா இல்லையா? அதுபோலவே படித்துக் கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம், கர்மம். இந்த இழவுப் பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம் நாஸ்திகமாக்கி விட்டது.*

**மகன்:** *"வெகு நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியைப் பிடுங்கிக் கொண்டு போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்.*

**புருஷனும் பெண்ஜாதியும் :-** *ராகுகாலத்தில் அந்த செட்டியிடம் நகை வாங்கி வந்ததே பிசகான காரியம். இதுவும் வரும் இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டும்... லே என்று ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.* ●

## போபால் விஷவாயு - கடைசி நேரத்தில் சிக்கல் தீர்ந்தது

*1984-ல் போபாலில் - 'யூனியன் கார்பைடு' எனும் அமெரிக்க கம்பெனியிலிருந்து வெளியேறிய விஷ வாயுவால் பல்லாயிரம் பேர் மாண்டனர்; பலர் ஊனமாயினர்; அந்தத் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதிகள் விஷ வாயுவால் பாதிக்கப்பட்டு - நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளதை எதிர்த்து, அமெரிக்க நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம் - போபாலில் விஷவாயுவால் இன்னும் பாதிக்கப்படும் பகுதிகளைத் தூய்மையாக்கித் தரவேண்டும் என்று யூனியன் கார்பைடு நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. இதற்கு இந்திய அரசு வரும் 30-ம் தேதிக்குள் தனது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கெடு விதித்திருந்தது. "பெரியார் முழக்கம்" இதழில் ஏற்கனவே இதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தோம். தமிழில் 'பெரியார் முழக்கம்' மட்டுமே இந்த செய்தியை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஒப்புதலைத் தர வேண்டியது, மத்திய சட்ட அமைச்சகமா அல்லது மத்திய ரசாயன மற்றும் உரத் துறை அமைச்சகமா என்று இரு அமைச்சகங்களும் போட்டிப் போட்டுக் கொண்டு பொறுப்பைத் தட்டிக் கழித்து வந்தன. நீதிமன்றத்தின் கெடு முடிவடைகிற நேரத்தில், இந்த சச்சரவுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிவு செய்தார், மத்திய ரசாயனத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான். ஜூன் 22ம் தேதி, ராம் விலாஸ் பஸ்வான், சட்ட அமைச்சகத்துடன் கலந்து பேசி, தனது அமைச்சகத்தின் சார்பில் ஒப்புதலை அளிக்க முடிவெடுத்துள்ளார்.*

## 'சித்திரவதை': சர்வதேச கோட்பாடுகளை மதிக்காத 'இந்தியா'

*ஜூன் 26 - சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச நாளாகும்; அய்க்கிய நாடுகள் மன்றம் - சித்திரவதையைத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக அறிவித்துள்ளது. நமது நாட்டில் காவல் நிலையத்திலும், பெண்களுக்கு எதிராகவும், தீண்டாமை வடிவில் தலித் மக்களுக்கு எதிராகவும் சித்திரவதைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பள்ளிகளில் குழந்தைகளை ஆசிரியர்கள் அடித்து துன்புறுத்துவதுகூட ஒரு சித்திரவதை தான். சித்திரவதைக்கு எதிரான அய்.நா.வின் சர்வதேச பிரகடனத்தை, இந்தியா நாடாளுமன்றத்தின் மூலம் அங்கீகாரம் தந்து ஏற்றுக் கெள்ள மறுத்து வருகிறது. எனவே, இந்தியா சித்திரவதைக்கு எதிரான சர்வதேச பிரகடனத்தை ஏற்றுக் கொண்டு, சித்திரவதைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற முழக்கத்தைமுன் வைத்து - தமிழ்நாடு மக்கள் கண்காணிப்பகம் தீவிரமாக பிரச்சார இயக்கங்களை நடத்தி வருகிறது. மாவட்டம் தோறும் பயிலரங்குகளை நடத்தி முடித்துவிட்டு, இப்போது தமிழ்நாடு முழுதும் ஒரு மாத காலம் தொடர்ந்து, கலை நிகழ்ச்சிகள் மூலம், சித்திரவதைகளுக்கு எதிரான மனதி உரிமைப் பிரச்சார இயக்கத்தையும் தொடங்குகிறது. இதையொட்டி - ஜூன் 26 அன்று சென்னை ராஜா அண்ணா மலை அரங்கில் மாநாடும் நடைபெற்றது.*

## பாட நூல்கள் திரும்பப் பெறப்படுமா?

*முன்னாள் பார்ப்பன அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியால் மாற்றியமைக்கப்பட்ட வரலாற்றுப் பாட நூல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனைக் குழு ஒன்றை மத்திய மனித வளத்துறை அமைச்சர் அர்ஜூன் சிங் நியமித்தார். மூன்று நாட்கள் வரலாற்றுப் பாட நூல்களைப் பரிசீலனை செய்த குழு, இந்நூலில் திருத்தங்கள் செய்வது இயலாது, எல்லா கருத்துகளுமே மிகத் தவறாக எழுதப்பட்டுள்ளன - எனவே நூலையே திரும்பப் பெற வேண்டும் என்று, கருத்து கூறியுள்ளது. திடீரென நூலைத் திரும்பப் பெற்றால், மாணவர்கள் கல்வி பாதிக்கும் என்று அமைச்சர் கருதுகிறார். 2002க்குப் பிறகு "என்சிஈஆர்டி' அமைப்பு வெளியிட்ட வரலாற்றுப் பாடநூல்களுக்கு பதிலாக - இதே பாடத் திட்ட அடிப்படையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த நூல்களைப் பயன்படுத்தலாம் என்று குழு யோசனை கூறியுள்ளது. மத்திய அமைச்சர் அர்ஜூன் சிங் என்ன செய்யப் போகிறார்?*

# பொதுச்செயலாளர் இராமகிருட்டிணன் எழுச்சி உரை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது சொந்தப் பொறுப்பிலிருந்து ரூ.25,000 தலைவரிடம் வழங் கினார்.

6. மேலும் கழக வளர்ச்சிக்கு, மாதாந் திர நன்கொடையாக மாவட்டச் செயலாளர் இளங்கோவன் ஆயிரம் ரூபாயும், நடத்துநர் கோபி நாகப்பன் ரூ.250-ம் வழங்குவதாக அறிவித்தனர்.
7. அடுத்த ஆண்டுக்குள் ஈரோடு மாவட்டத்தில் குறைந்தது 50 கிளை களை உருவாக்குவதாக மாவட்டச் செயலாளர் உறுதியளித்தார்.

### புதிய பொறுப்பாளர்கள்

கீழ்க்கண்ட புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவர் : கா.நாத்திக ஜோதி, குருவரெட்டியூர்

மாவட்ட அமைப்பாளர் : சி.கந்த சாமி, ஈரோடு

மாவட்ட இளைஞரணி செய லாளர் : புதுரோடு சிதம்பரம்

சத்திய மங்கலம் ஒன்றியச் செய லாளர் : புதுரோடு இராசேந்திரன்

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா அதிக அளவில் சேகரித்து அனுப்பு வதெனத் தீர்மானிக்கப்பட்டது.
2. இயக்க நூல்களை அதிக அளவில் விநியோகம் செய்யவும், தலைமைக் கழக வளர்ச்சி நிதியை அதிகம் வசூலித்து அனுப்பவும் தீர்மானிக் கப்பட்டது.
3. ஈரோடு மாவட்டத்தில் புதிய கிளைக் கழகங்கள் அமைத்து, இயக் கத்தை வலுப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டது.

கூட்டத்தில் தோழர்கள் பத்ரி நாராயணன், மேட்டூர் சரவணன் ஆகியோர் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

# சிந்தனையைத் தூண்டும் விவாதங்களுடன் நடந்த 'சங்கொலி' திருநாவுக்கரசு இல்ல மணவிழா

ம.தி.மு.க. வார ஏடு 'சங்கொலி'யின் பொறுப்பாசிரியரும், திராவிடர் இயக்க ஆய்வாளருமான தோழர் திருநாவுக்கரசு - கோடிசுவரி இணையரின் மகள் மணிமேகலை - இளஞ்செழியன் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு 25.6.2004 அன்று காலை 10 மணியளவில் ஏ.வி.எம். இராஜேசுவரி திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ. மணவிழாவை நடத்தி வைத்தார். பழ.நெடுமாறன், கழக ஆட்சிக்குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி அமைப்புச் செயலாளர் ஆனைமுத்து, முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், செஞ்சி இராமச்சந்திரன், மணியரசன் (த.தே.பொ.க.), ஆய்வாளர் எஸ்.வி.ஆர் உட்படப் பலரும் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.

ஆனைமுத்து தனது உரையில் இரண்டு முக்கிய கருத்துக்களை முன் வைத்தார். சுயமரியாதை இயக்கம் - திராவிடர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட அடிப்படை லட்சியத்திலிருந்து - திராவிட கட்சிகள் விலகிப் போய்க் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்ட ஆனைமுத்து, தமிழ்நாட்டில் நீண்டகாலம் திராவிட கட்சிகள் அதிகாரத்தில் இருந்தும், திராவிடர் இயக்க வரலாற்றைப் பாடத்திட்டமாக ஏன் வைக்கவில்லை என்ற நியாயமான கேள்வியை எழுப்பினார். இப்போது நடக்கும் திருமணங்கள் எல்லாம் வைதீக திருமணங்களாகவே நடப்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டிய அவர், சுயமரியாதைத் திருமணம், செல்லுபடியாகும் என்ற நிலை தான் தமிழகத்தில் இருக்கிறது. இனி, சுயமரியாதை திருமணம் மட்டுமே தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரப்படி செல்லத்தக்கது என்ற நிலை வர வேண்டும் என்று வலியுறுத்தினார். இது பற்றி தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் மணியரசன் குறிப்பிடுகையில், திராவிடர் இயக்கம், பொது வுடைமை இயக்கத்தைச் சார்ந்தவர்களே கூட இப்போது சுயமரியாதைத் திருமணங்களைக் கைவிட்டு, பார்ப்பன பண்பாட்டை நோக்கிச் ன்று கொண்டிருக்கும் நிலை வந்துவிட்டது, இந்தப் பண்பாட்டு சீரழிவை மீட்டெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழகச் சூழலில் - இந்தக் கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் பெற்றவையாகும். மணவிழாவை நடத்தி வைத்து, இறுதியாக உரையாற்றிய வைகோ திராவிடர் இயக்கத்தின் கொள்கை எதிரிகள் மிகவும் வலிமையாகவே இருக்கிறார்கள். பண்பாட்டு, கலாச்சாரத்தில் நாம் அவர்களை மிகவும் தீவிரமாக எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். தேர்தலில் அவர்கள் தோல்வியை சந்தித்தாலும், வேர்கள் அப்படியே தான் இருக்கின்றன. ஒரு காலத்தில் அறிவுப் புரட்சியை உருவாக்க ஏராளமான திராவிடர் இயக்க இதழ்கள் வந்த நிலை இப்போது மாறி விட்டது. நாம் உறுதியோடு - திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான மொழி-இன பண்பாட்டு உரிமைகளுக்காக - அதை நசுக்க முயல்வோரை எதிர்த்து செயல்படுவோம்" என்று சூளுரைத்தார். தமிழின உணர்வாளர்களின் விழாவாகவே மணவிழா எழுச்சியுடன் நடந்தது. •

## திருச்சி மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்

திருச்சி மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழக ஆலோசனைக் கூட்டம் 13.6.2004 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு திருச்சி சிந்தாமணி பாலகிருட்டினன் நகரில் தோழியர் இரா.விசயலட்சுமி தலைமையில் நடைபெற்றது. கழகப் பிரச்சாரம், கழக நூல் விற்பனை, கழக ஏட்டுக்கு சந்தா சேர்த்தல் ஆகிய பணிகளைத் தீவிரமாக்க தீர்மானிக்கப் பட்டது.

மக்கள் விரோத செயல் திட்டங்களை ஜெயலலிதா ஆட்சி கைவிட்டதை வர வேற்றும், திருச்சி மாநகராட்சி, உயர்த்தி யுள்ள குடிநீர் கட்டண உயர்வு மற்றும் மாநகராட்சி கடை வாடகை உயர்வைக் கைவிடக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

த. செந்தில் குமார், கிருட்டினகுமாரி, அன்பு செல்வம், அன்பரசி, திராவிடமணி மற்றும் திரளாக கழகத் தோழர்கள் கலந்து கொண்டு பேசினர். திருச்சி மாவட்ட அமைப்பாளர் செ.த. இராசேந்திரன் நன்றி கூறினார்.

## வழக்கறிஞர் துரைசாமி இல்லத் திருமணம்

கழக ஆட்சிக்குழு உறுப்பின ரும் - வழக்கறிஞருமான எஸ்.துரை சாமி அவர்களின் அண்ணன் மகள் எஸ்.பிரேமா, எம்.காம்., முனைவர் எம்.செல்வராஜ், எம்.எஸ்சி., பி.எச்.டி. ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு எதிர் வரும் ஜூலை 4ம் தேதி நடைபெற இருக்கிறது. காங்கேயம் பி.எஸ்ஜி பொன் னம்மா; திருமண மண்டபத்தில் (கோவை-திருச்சி சாலை) பகல் 11.30 மணியிலிருந்து 2 மணி வரை மண மக்கள் வரவேற்பு நிகழும்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

## தனியார் துறை ஒதுக்கீடு - புதிய வெளிச்சங்கள்(2)

# அமெரிக்க தொலைக்காட்சிகளில் கறுப்பர் உரிமை!

**த**னியார் தொழில் நிறுவனங்களில் மட்டுமல்லாது, பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், திரைப்படங்களில், கறுப்பர் உட்பட மைனாரிட்டிகளுக்கு உரிய பங்களிப்பு இருக்க வேண்டும் என்று அமெரிக்காவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை கடந்த இதழில் சுட்டிக் காட்டினோம்.

ஒருகாலத்தில் அமெரிக்கத் திரைப்படங்களுக்கும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் எழுத்தாளர்களாக ஆதிக்கம் செலுத்தியவர்கள் எல்லாம் வெள்ளையர்கள் தான். இந்தத் துறைகளில் கறுப்பர்கள் 7 சதவீதம் மட்டுமே இருப்பதையும், வெள்ளையர்கள் 80 சதவீதம் இருப்பதையும், கண்டறிந்த அமெரிக்க எழுத்தாளர் அமைப்பு (Writers Guild ofAmerica-WGA) 1992 முதல் 1998 வரை 6 ஆண்டுகாலம் கறுப்பர்களின் பங்களிப்புக்காக, இயக்கங்களை நடத்தியது. அதனால் கறுப்பர்களின் பங்களிப்பு 66 சதவீதமளவுக்கு உயர்ந்தது. இங்கே பார்ப்பனர்களோ, பார்ப்பனிய சேவகர்களாக செயல்படும் உயர்சாதியினரோ, இத்தகைய சமூக உணர்வுள்ளவர்களாக இருக்கிறார்களா? இந்தியாவின் தொலைக்காட்சிகளில் பார்ப்பன ஆதிக்கமும், பார்ப்பனப் பண்பாடுகளுமே மிகுந்து கிடக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் தலித்துகள் எவரையாவது காட்ட முடியுமா? தமிழ்நாட்டில் பெரும்பான்மை மக்கள் கறுப்பு நிறமுடைய விவசாயிகள், உழைக்கும் மக்கள் தான்! ஆனால் தொலைக்காட்சியில் நடிக்க வேண்டுமானால் 'சிவப்புத் தோலாக'வே இருக்க வேண்டும் என்ற நிலை தான்! கறுப்பர்களின் முன்னேற்றத்துக்காக அமெரிக்காவில் செயல்பட்டு வரும் அமைப்பு (The National Association for the Advancement of Coloured People - NAACP) இது, அமெரிக்கத் தொலைக்காட்சிகளில் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியது. கறுப்பின மக்கள் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் புறக்கணிப்பார்கள் என்று அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் நான்கு முன்னணி தொலைக்காட்சி நிறுவனங்களான என்.பி.சி., ஏ.பி.சி., சி.பி.எஸ்., ஃபாக்ஸ் ஆகியவை, மேற்குறிப்பிட்ட கறுப்பர் உரிமைக் கழகத்துடன் (NAACP) ஒரு உடன்பாடு செய்து கொண்டன. அதற்கு பெயர் கறுப்பர்கள் பிரதிநிதித்துவ உடன்பாடு (Diversity Agreement) இதன்படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கறுப்பர்கள் மற்றும் மைனாரிட்டியினருக்கு உரிய பிரதிநிதித்துவம் தரவேண்டும். அது மட்டுமல்ல தங்களது தொழில் தொடர்பான வர்த்தகங்களுக்கும், சேவைகளுக்கும், கறுப்பர்கள் நடத்தும் நிறுவனங்களைப் பயன்படுத்த வேண்டும். தொலைக்காட்சி நிறுவனங்களின் நிர்வாக வேலை வாய்ப்புகளிலும், கறுப்பர்களுக்கு உரிய பங்களிப்பதோடு, அவர்களுக்கு ஊதியத்தோடு, போனஸ் உட்பட பல்வேறு சலுகைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அந்த ஒப்பந்தம் கூறுகிறது. இப்போதும் அந்த ஒப்பந்தம், அங்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

### தென்னாப்பிரிக்காவில்

இதே போல், தனியார் துறைகளில் கறுப்பர்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களை இயற்றி அமுல்படுத்தி வரும் நாடு தென்னாப்பிரிக்கா. அதற்கான பல்வேறு சட்டங்களில் முக்கியமானது சமத்துவ வேலை வாய்ப்பு சட்டமாகும். (Employment Equity Act - EEA) இந்தச் சட்டத்தின்படி அனைத்து தனியார் நிறுவனங்களிலும் கறுப்பர்கள், பெண்கள், ஊனமுற்றோருக்கு பாரபட்சம் காட்டாமல், வேலை வாய்ப்புகளில் உரிய பங்கு தரப்பட வேண்டும். சம வாய்ப்புச் சட்டங்களை சரியாக அமுல்படுத்தி வந்தால் மட்டுமே, இந்நிறுவனங்களுக்கு அரசின் சலுகைகளோ, ஒப்பந்த வேலைகளோ தரப்படும்.

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் எண்ணிக்கை 1991-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 20.59 கோடி. 2201 கணக்கெடுப்பின்படி - இந்த எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது. இதன் அதிகாரபூர்வ புள்ளி விவரங்களை மத்திய அரசு இன்னும் அறிவிக்கவில்லை. சதவீத எண்ணிக்கையில் மதிப்பிட்டால், இந்தியாவில் தலித் மக்கள் 24.32 சதவீதம். இதன்படி இந்தியாவில் உள்ள தனியார் தொழில் நிறுவனங்களில் நான்கு பேருக்கு ஒருவராக தலித் இருக்க வேண்டும். 13 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி, வீடுகளில் நடத்தப்படும் சிறு தொழில்களில் 3.45 சதவீதமும், தொழில் நிறுவனங்களில் (பேக்டரி) 7.11 சதவீதமும், கட்டுமானத் தொழில் துறையில் 3.12 சதவீதமும், சேவைத் தொடர்பான தொழில் துறைகளில் 4.14 சதவீதமும், போக்குவரத்து மற்றம் கிடங்குகள் துறையில் 3.21 சதவீதமும் தான் 'தலித்' மக்கள் இருக்கிறார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் அமெரிக்காவைப் பின்பற்றத் துடிக்கும் பார்ப்பனர்களும், பனியாக்களும், இந்த இடஒதுக்கீட்டில் மட்டும் அமெரிக்காவைப் பார்க்க மறுப்பது ஏன்? இந்திய முதலாளிகள் கூட்டமைப்பும், பார்ப்பனர்கள் கூறும் தனியார் துறை ஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்ப்பது என்ன நியாயம்?

உலகின் முன்னணியில் நிற்கும் தொழில் நிறுவனங்களும், அதில் கறுப்பர் களின் பங்களிப்பும் புள்ளி விவர ஆதாரங்களுடன் அடுத்த இதழில் எழுதுவோம்.

(தொடரும்)

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 1st July 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூலை 8, 2004 | புரட்சி 3 | முழக்கம் 26 | விலை : ரூ.2.50

### சிறுவர்கள் உரிமை சட்டப்படி நடவடிக்கை:

# குட்டி சாமியாரை இயக்குவது யார்?

## மாபெரும் சேலம் கூட்டத்தில் கழகத் தலைவர் அறைகூவல்!

'குட்டிச் சாமியார்' என்று பரபரப்பாகப் பேசப்படும் பார்ப்பன சிறுவனை 'மூலதனமாக்கி' - பணம் குவிக்கத் திட்டமிட்டு வரும் கூட்டத்தின் மீது, சிறுவர்கள் பாதுகாப்பு சட்டத்தின்படி கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தியுள்ளார்.

குட்டி சாமியாரின் பின்னணியில் நிற்கும் மோசடிக் கும்பலுக்கு எதிராகவும் - மூடநம்பிக்கைளை விளக்கியும், தந்தை பெரியார் திராவிடர் கழகம் களம் இறங்கியுள்ளது. முதல்கட்டமாக, கடந்த 29ம் தேதி சேலம் நகரில் கழகம் நடத்திய விளக்கக் கூட்டங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மாலை 5 மணியளவில் சேலம் ஜங்ஷன் மற்றும் சேலம் போஸ் மைதானம் ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடந்தன. தொடர்ந்து, சேலம் தாதகாப்பட்டியில் தோழர் மா. பாலு தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடந்தது. கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு, குட்டி சாமியாரின் மோசடிப் பின்னணிகளை அம்பலப்படுத்தினார்.

கூட்டங்களுக்கு - பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். கூட்டங்களில் 12 வயது பகுத்தறிவுச் சிறுமி தமிழ்த் தென்றல் அழகு தமிழில், சரளமாக, ஆதாரங்களை அடுக்கடுக்காக எடுத்துக்காட்டி ஆற்றிய உரை, கூட்டத்தினை உணர்ச்சி வயப்படுத்தியது.1330 திருக்குறளையும், ஒப்பிக்கும் ஆற்றல் பெற்றவர் தமிழ்த் தென்றல், பார்ப்பனர்கள் மட்டுமே படிக்க முடியும் என்று கூறிக் கொள்ளும் வேத சுலோகங்களை மனப்பாடமாக ஒப்பிப்பார் அறிவுக்குப் பொருந்தாத வேத சுலோகங்களை சமஸ்கிருத மொழியிலேயே சரளமாக எடுத்துக் காட்டி, அதன் பொருளை தமிழ்த் தென்றல் புட்டு புட்டு வைத்த போது, கூட்டத்தினர் கைதட்டி வரவேற்றனர்.

"இவையெல்லாம் எனக்குத் தெரிந்ததாலேயே நானும் ஒரு சாமியார் வேடம் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றிப் பணம் சேர்க்க முடியும். ஆனால், நாங்கள் அதற்கு வரவில்லை; அப்படிச் செய்யும் மோசடிக்காரர்களை அம்பலப்படுத்த வந்திருக்கிறோம்" என்று தமிழ்த் தென்றல் கூறியபோது கூட்டத்தினர் பலத்த கரவொலி செய்து வரவேற்றனர். தொடர்ந்து - கழகத் தலைவர் கொளத்தூர் மணி, குட்டிசாமியாராக இப்போது வலம் வந்து கொண்டிருப்பவர் - அடுத்த சில பல ஆண்டுகளில் 'குட்டிகளுடன் சாமியார்' ஆகிவிடுவார் என்று கூறிய போது - மக்கள் ஆரவரித்தனர். "சிறுவர்களைத் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவது கூடாது என்று சட்டம் இருக்கிறது. சிறுவனின் உழைப்பைப் பயன்படுத்தி, பணம் சேர்க்கும் முயற்சிகளில், ஒரு கூட்டம் இறங்கியுள்ளது. அவர்களிடமிருந்து, சிறுவனை மீட்டு, சிறுவர்கள் பாதுகாப்பு இல்லத்தில் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும். சிறுவனுக்கு 'ஆன்மீக வேடம்' போட்டு, தொழிலில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றம். இந்த சட்ட விரோதக் கும்பலைக் கைது செய்து வழக்குத் தொடர வேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார். நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகளே சிறுவனின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறலாமா என்று, கழகத் தலைவர் கேட்டபோது, வெட்கம் வெட்கம் என்று கூட்டத்தினர் குரல் கொடுத்தனர்.

### நடந்தது என்ன?

"சிறுவனை வைத்து வியாபாரம் நடத்துவதில் - ஒரு போட்டியே நடந்து கொண்டிருக்கிறது. முதலில் இந்த சிறுவனுக்கு இடமளித்தவர் சந்திர சேகரன். இவருடைய தோட்டத்தில் சிறுவனுக்கு முதலில் - ஒரு குடில் அமைத்துத் தந்தார்கள். சிறுவனிடம் சக்தி இருப்பதாக பிரச்சாரம் செய்ய, பக்தர் கூட்டமும் வருமானமும் வரத் தொடங்கியது. குறிப்பாக செட்டியார் சாதிப் பிரிவைச் சார்ந்த சிலர், இளைஞரை வைத்து 'ஆன்மீக வியாபாரம்' நடத்தினர். நகைக் கடை உரிமையாளர் ஏ.வி.ஆர். சுதர்சனம் செட்டியார் 60-ம் கல்யாணம் - வாசவி மகால் திருமண மண்டபத்தில் நடந்தது. அங்கு வந்த சிறுவனை பா.ஜ.க.வின் மாநிலப் பொறுப்பில் இருக்கும் பார்ப்பனர் ஆடிட்டர் ரமேஷ், தனது ஆட்களை வைத்து சிறுவனை கடத்தினார். கடத்தலில் ஈடுபட்டவர்கள் எல்லோரும் பா.ஜ.க.வைச் சார்ந்தவர்கள். பெற்றோர்கள் காவல்துறையின் உதவியை நாடினர். காவல்துறை எழுத்துபூர்வமாகப் புகாரைப் பெறாமல் சமரசம் பேச முயன்றது. பா.ஜ.க. பொறுப்பாளர் ஆடிட்டர் ரமேசு - சிறுவனை அழைத்துக் கொண்டு சேலம் மாநகர காவல் துறையின் அலுவலகத்துக்கு வந்தார். அங்கு தெற்கு சரக துணை ஆணையர் மற்றும் காவல் நிலைய ஆய்வாளர் உட்பட பல போலீசார், சிறுவன் பரணீதரன் காலில் விழுந்து 'ஆசீர்வாதம்' வாங்கினார்களாம். "பிராமணச் சிறுவனும் - தீட்சை வாங்கிய பிறகு, பிராமணர்களுக்கு ஆசி வழங்காமல், சூத்திரர்களிடம் இருக்கக் கூடாது" என்று பார்ப்பன பா.ஜ.க. ஆடிட்டர் ரமேசு கூறியுள்ளார். அதே ஆடிட்டர் ரமேசு, அயோத்தியா பட்டிணத்தில் உள்ள தனது நண்பர் ஒருவரின் இடத்தில் சிறுவனுக்குக் குடில் அமைத்துத் தந்துள்ளார். அறக்கட்டளை ஒன்றை உருவாக்கிக் கொண்டு சிறுவனை வைத்து பணம் சம்பாதித்து வருகிறார்கள். சிறுவனின் பெற்றோர்களை சமாதானப்படுத்த, மதுரை ஆதினத்தை அழைத்தார்கள்; அவர் தலையிட்டுப் பேசி, சிறுவனுடன் பெற்றோர்கள் தங்கியிருக்கும்படி சமாதான ஏற்பாடு ஒன்றை செய்துள்ளார். சிறுவன் பரணீதரனைப் பற்றி பல கட்டுக் கதைகளைப் பரப்பி, மூடத்தனத்தைப் பயன்படுத்தி, மக்களைச் சுரண்டி பணம் பறித்து வருகிறார்கள்" என்ற உண்மைகள், பொதுக் கூட்டத்தில் விளக்கிப் பேசப்பட்டன.

"இதில் பா.ஜ.க.வினர் நேரடியாகத் தொடர்பு கொண்டு, செயல்படுவது உண்மையா இல்லையா? சிறுவனைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் பா.ஜ.க.வினர் என்பதை மறுக்க முடியுமா" ஆன்மீகத்தை வைத்து அரசியல் நடத்தும் பா.ஜ.க. - பணம் சுரண்டுவதற்கும் தயாராகிவிட்டது வெட்கக் கேடானது அல்லவா? என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேட்டார்; "சேலம் குட்டி சாமியார்; உண்மை என்ன?" என்ற தலைப்பில் தந்தை பெரியார் திராவிடர் கழகம், பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு மக்களிடம் வழங்கியது, இந்தத் துண்டுப் பிரசுரங்கள், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

குட்டி சாமியார் பற்றி - விஜய் தொலைக்காட்சி, கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பேட்டியை வெளியிட்டது. ●

---

**சேலத்தில் பரபரப்பை ஏற்படுத்திய துண்டறிக்கை**

## சேலம் "குட்டி சாமியார்" உண்மை என்ன?

1. 13 வயதுக்குள் எல்லா வேதங்களையும் கரைத்துக் குடித்துவிட்டான் என்பது உண்மையா. அல்லது அவன் பேசுவது புரியாதவர்கள் பரப்பும் பொய்யா? அல்லது விவரம் தெரிந்த வில்லங்க மனிதர்கள் கிளப்பிவிட்ட புரளியா?
2. சாதாரண பட்டறை தொழிலாளியான சிறுவனின் தந்தை 4 கார்களில் ஆட்களை அழைத்து வந்து கடத்த பொருளாதார உதவி செய்தது யார்? உதவி செய்தவரின் நோக்கம் என்ன?
3. கடத்தலில் ஈடுபட்ட கும்பலில் ஒருவர் அழகாபுரம் பா.ஜ.க. இளைஞர் அணி தலைவர் என்பதும், ஒருவர் மாநில பா.ஜ.க. இளைஞர் அணி தலைவர் என்பதும், ஒருவர் பா.ஜ.க. மாவட்ட எஸ்.சி., எஸ்.டி. பிரிவின் பொதுச் செயலாளர் என்பதும் இவர்களது வழக்கறிஞர் எம்.எஸ்.நாராயணன் பா.ஜ.க.வின் மாநில நிதிக்குழு பொறுப்பாளர் ஆடிட்டர் ரமேஷின் மாமா என்பதும் உண்மையா?
4. கடத்தலுக்கு பயன்படுத்திய ஒரு வண்டி குவாலிஸ் கார் ஆடிட்டர் ரமேஷின் மாமா மகனுடைய து (பி.எஸ்.ஆனந்த் ஹரி விக்னேஷ் பங்குதாரர்) என்பது உண்மையா?
5. காவல்துறை விசாரணையின் போது ஆடிட்டர் ரமேஷ், அந்த சிறுவனிடம் "பிராமணன் ஆகிய நீ தீட்சை வாங்கி "பிராமணர்"களுக்கு பயன்படாமல் சத்திரிய, சூத்திரர்களுடன் இருக்கக் கூடாது" என்று மிரட்டியது உண்மையா?
6. கடத்தலுக்குட்பட்ட வயது வராத சிறுவனை சட்டப்படி பெற்றோர்களிடமோ அல்லது சிறுவர் சீர்திருத்த பள்ளிக்கோ அனுப்பாமல் சட்ட விரோதமாக ஆசிரமத்திற்கு அனுப்பி வைத்ததன் பின்னணி என்ன?
7. அயோத்தியாபட்டனத்தில் குடில் அமைத்துள்ள இடம் ஆடிட்டர் ரமேஷின் நண்பருடையது என்பது உண்மையா?
8. மான்தோல், பதிவு எண் எழுதப்படாத வண்டி என்ற சில்லறைச் செய்திகளை ஊதி பெருக்கவைத்து வெளியிடுவதன் பின்னணியில் இருப்பது யார்?
9. சத்திய தர்ம சேவா அறக்கட்டளையும், ஆடிட்டர் ரமேஷும் குட்டி சாமியார் வருமானத்தை பிரித்துக் கொள்வது பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதாக உலவும் வதந்தி உண்மையா?
10. நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்ற சிறுவனின் தந்தை பட்டாபிராமனை அம்போ என்று விட்டுவிட்டார்கள் என்று புலம்புவது உண்மையா?
11. வேதத்தைக் கரைத்து குடித்த குட்டி சாமியார் அப்பாவை போடா, வாடா என்றும் அம்மாவை போடி, வாடி என்றும் திட்டியது ஆன்மீக போற்றலா, பண வசூல் சிக்கலா?

பொதுமக்களே – சிந்திப்பீர்! – **தந்தை பெரியார் திராவிடர்கழகம், சேலம்**

தலையங்கம்

## ஆர்.எஸ்.எஸ். ஆளுநர்களை நீக்கியதில் என்ன தவறு?

சோனியா பிரதமராவதை அனுமதிக்கவே முடியாது என்று முதலில் மிரட்டியது பா.ஜ.க. சோனியாவின் 'பதவி துறப்பு' முடிவால், பா.ஜ.க.வின் திட்டம் முடங்கிப் போனது. இப்போது கிரிமினல் வழக்குகள் பதிவாகியுள்ள அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று, நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து வருகிறது பா.ஜ.க. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, அத்வானி, பெர்னாண்டஸ் போன்றவர்களும் கடந்த காலத்தில் கிரிமினல் மற்றும் ஊழல் விசாரணைகளுக்கு உட்பட்டவர்கள் தான். இதே பா.ஜ.க. தான், லஞ்சம் வாங்கிய முன்னாள் அமைச்சர் திலிப்சிங் ஜீதேவை - இப்போது மாநிலங்களவை உறுப்பினராக்கியுள்ளது. இவர் லஞ்சப் பணம் வாங்கும் காட்சி, ரகசியமாக வீடியோ படமாக்கப்பட்டு, அம்பலப்படுத்தப் பட்டது. மக்கள் ஆதரவோடு – பதவிக்கு வந்த புதிய ஆட்சியை, மக்களால் தோற்கடிக்கப்பட்ட மதவெறி சக்திகள், செயல்படவிடாமல் தடுப்பது, இவர்களின் மக்கள் விரோத மனநிலையைத் தான் படம் பிடித்துக் காட்டுகிறது.

குடியரசுத் தலைவர் உரைக்கே நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்தவர்கள், இப்போது பட்ஜெட்கூட்டத் தொடரையும் நடக்கவிடாமல் முடக்கி வருவது, வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும்.

இப்போது – இவர்கள் கையில் கிடைத்திருக்கும் மற்றொரு 'துருப்பு சீட்டு' – ஆளுநர்கள் நீக்கப்பட்டதாகும். பொதுவாக மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், ஆளுநர்கள் தாமாகவே பதவி விலகுவது மரபாகும். கடந்த தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியில் – தீவிர சங்பரிவார் தலைவர்கள் எல்லாம் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். மத்தியில் அமைந்துள்ள மதச்சார்பற்ற ஆட்சி – 'இந்துத்துவா' கொள்கை வெறியில் ஊறிப்போன, ஆளுநர்களை பதவி விலகுமாறு கேட்டது. அவர்கள் பதவி விலக மறுத்ததால், குடியரசுத் தலைவர் மூலம் உ.பி., குஜராத், கோவா, அரியானா ஆளுநர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அரசியல் சட்டப்படி, குடியரசுத் தலைவரின் நம்பிக்கையைப் பெறாதபோது, ஆளுநர்களைப் பதவி நீக்கம் செய்யும் உரிமை, குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1998–ல் இதே பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த போது, ஆளுநர்களை பதவி விலகும்படி கோரியது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மதச்சார்பற்றக் கொள்கைக்கு மாறான கொள்கைகளைக் கொண்டவர்கள் என்பதால் –ஆளுநர்கள் பதவியில் தொடர்வது நிர்வாகச் சிக்கலை உருவாக்கும் என்று உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் கூறியிருப்பது மிகச் சரியான கருத்து என்றே நாம் கருதுகிறோம். உள்துறை அமைச்சரின் இந்தக் கருத்தை எதிர்த்து, பல பார்ப்பன ஏடுகள் கட்டுரைகளும், தலையங்கங்களும் எழுதி வருகின்றன.

ஆளும் கட்சிக்கு மாறுபாடான கொள்கை கொண்டவர்கள் ஆளுநராக நீடிக்கக் கூடாது என்பது ஜனநாயகம் தானா என்று கேட்கிறார்கள். ஆனால் ஒரு அடிப்படையான உண்மையை மறைக்கிறார்கள்; ஆர்.எஸ்.எஸ். கொள்கை என்பது இந்தியாவில் பல்வேறு அமைப்புகள் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதே அந்த அடிப்படையான உண்மை. இந்தியாவின் அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே – ஆளுநர்களாக வரமுடியும் என்ற கருத்தைஏற்றுக் கொண்டவர்களின் சிந்தனைக்கு நாம் கீழ்க்கண்ட கேள்விகளை முன் வைக்கிறோம்.

1. 'இந்தியா' என்ற சொல்லையே ஆர்.எஸ்.எஸ். ஏற்பதில்லை; 'பாரதிய' என்ற சொல்லையே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.
2. இந்தியாவின் தேசியக் கொடியை ஆர்.எஸ்.எஸ். அங்கீகரிப்பது இல்லை. இன்றைக்கும் ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சிகளில் தேசியக்கொடிக்கு பதிலாக காவிக் கொடியே ஏற்றப்படுகிறது. காவிக் கொடியை மட்டுமே அவர்கள் மதிப்பார்கள்.
3. இந்தியாவின் தற்போதைய எல்லைப் பரப்பை ஆர்.எஸ்.எஸ். அங்கீகரிக்கவில்லை. எல்லை அடிப்படையிலான ஒரு 'தேசத்தை' ஏற்க மறுக்கும் ஆர்.எஸ்.எஸ். – பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை என்ற அகன்ற இந்துராஜ்யத்தை வலியுறுத்துகிறது.
4. இந்தியா என்பது பலமொழி, பல மதம், பல கலாச் சாரங்களைக் கொண்ட நாடு என்பதை ஆர்.எஸ்.எஸ். ஏற்கவில்லை; இந்துக்களைத்தவிர, மற்றவர்கள் அன்னியர்களே என்று கூறுகிறது.
5. 'தேசத் தந்தை' என்று அங்கீகரிக்கப்பட்டுள்ள காந்தியாரின் கொலையை இதுவரை ஆர்.எஸ்.எஸ். அதிகார பூர்வமாகக் கண்டித்ததுஇல்லை; காந்தியாரின் இந்து விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான மக்கள் கோபமே அவரது படுகொலை என்பது ஆர்.எஸ்.எஸ். நிலைப்பாடு.

– இந்த 'சித்தாந்தங்களை' ஏற்றுக் கொண்டிருக்கும் பிரமுகர்கள் – இந்தியாவின் அரசியல் சட்டத்தைக் கட்டிக் காப்பாற்றுவதாகக் கூறப்படும் ஆளுநர் பொறுப்புகளில் அமருவது சட்டப்படி – தார்மீகப்படி சரிதானா?

# தோழர்களுடன் கலந்துரையாடல்

## கழகத் தலைவரின் இரண்டாம் கட்ட சுற்றுப்பயணம்

கழகத் தலைவர் - பொறுப்பாளர்கள் தமிழகம் முழுதும் மாவட்ட வாரியாகக் கழகத் தோழர்களை சந்தித்து, 'பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு சந்தா வசூலித்தல், கழக வெளியீடுகள் விற்பனை; மற்றும் கழக அமைப்புகளில் மாற்றங்கள் தொடர்பாக - கலந்துரையாடி வருகின்றனர். சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, ஒட்டன் சத்திரம் மற்றும் மதுரையில் முதல் கட்ட சுற்றுப்பயணம் நடந்து முடிந்தது. இரண்டாவது கட்ட சுற்றுப்பயணம் ஜூலை 26ம் தேதி நாகை மாவட்டம் மயிலாடு துறையில் தொடங்கியது. கரூர், திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களில் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. வழியில் தஞ்சையில் கழகத் தோழர்கள் தங்கம், இள வரசன், மோகன் மற்றும் கழக ஆதரவாளர்கள் ப.சு. கவுதமன், திமுக பேச்சாளர் தஞ்சை காமராசு, முரளி உட்பட தோழர்கள், கழகத் தலைவரை சந்தித்துப் பேசினர். காங்கேயத்தில் நடந்த ஆட்சிக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் துரைசாமி இல்ல மணவிழா வரவேற்பில் கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர்கள் கலந்து கொண்டு பிற்பகல் கரூர் பயணமானார்கள். கரூர் கழகக் கலந்துரையாடல் கூட்டத்தை முடித்து திருச்சிக்குப் பயணமானார்கள். இரண்டாம் கட்ட சுற்றுப் பயணம் பற்றிய ஓர் செய்தித் தொகுப்பு.

### மயிலாடுதுறையில்

நாகை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறையில் ரோஜா திருமண மண்டபத்தில் 2.7.2004 அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பரசுராமன் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையுரையில், இயக்க வளர்ச்சி குறித்தும், 'பெரியார் முழக்கம்' சந்தா அதிகப்படியாக சேர்ப்பது குறித்தும், கழக நூல்கள் வெளியீடு விற்பனை குறித்தும், தலைமைக் கழக அலுவலகம் அமைப்பதற்கான நிதி நிலை குறித்தும் விரிவாகத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்த கழகத் தோழர் கள் தங்கள் பகுதிகளில் இயக்க வளர்ச்சிக்காக தாங்கள் எந்தவிதமான பிரச்சார முறையில் செயல்பட்டோம் என்பதையும், மேலும் எப்படி செயல்படப் போகின்றோம் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும், மாணவர் துவக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்கிற கருத்தையும் வலியுறுத்திக் கூறினார்கள்.

பேராசிரியர் செயராமன் அவர்களும், ம.தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் மயிலாடுதுறை அழகிரி அவர்களும் கலந்து கொண்டு இயக்க வளர்ச்சிக்காக தங்களுடைய பங்களிப்பை அளிப்பதாகக் கூறினார்கள். அதைத் தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரை யாற்றினார். பெரியார் கொள்கைகளை மக்களிடத்திலே எடுத்துச் செல்வது பற்றியும், கொள்கை ரீதியாக எப்படி செயல்பட வேண்டும் என்பதைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இறுதியாக தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். அதில், இயக்கத் தோழர்கள் சமூக அக்கரையோடு செயல்பட வேண்டும் என்றும், சமூகத்தில் நடக்கும் கொடுமைகளுக்கு எதிராக உள்ளக் குமுறலோடு எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்வும் கொந்தளிப்பும் எப்போதும் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். களப்பணி ஒருங்கிணைப்பாளர் தாமரைக் கண்ணன் மயிலாடு துறைப் பகுதிக்கு நேரில் வந்து புதிய கழக அமைப்புகளை உருவாக்கிட தோழர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராக இருப்பதாகக் கூறினார்.

இறுதியில் மாவட்டத் துணைத் தலைவர் சோம. இராசராசன் நன்றி கூறினார். மாவட்டச் செயலாளர் இரமேசு, மாவட்ட அமைப்புச் செயலாளர் நா. இளையராசா, கல்லூரி மாணவர்கள் கார்த்திக்ராசன், முத்து மற்றும் இரகுபதி, பெரியார் செல்வம், வழக்கறிஞர் குபேந்திரன் ஆகியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

புதிய பொறுப்பாளர்களாக, மாவட்டத் துணைத் தலைவராக சோம. இராசராசன், மயிலாடுதுறை ஒன்றிய செலயாளராக க.கிருட்டிணன் தேர்வு செய்யப்பட்டனர். 'பெரியார் முழக்கம்' ஏட்டுக்குசந்தா 36ம் அதற்கான தொகையும் தரப்பட்டது.

### கரூரில்...

கரூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் கரூர் அரசி விடுதியில் 4.7.04 மாலை 3 மணிக்கு தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொதுச்செயலாளர்கள், விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன் முன்னிலையிலும் நடைபெற்றது.

கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அதில் கழகப் பணிகள் குறித்தும், மேற்கொண்டு இயக்கப் பணி சிறப்பாக நடைபெற எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார். அடுத்து உரையாற்றிய கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், நாட்டில் நடக்கும் பக்தியின் பெயரால் நடைபெறும் மோசடிகளையும், தமிழில் குடமுழக்கு, அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை பற்றிய செய்திகள் குறித்தும் பேசினார். தோழர்கள் எழுப்பிய வினாக்களுக்கு தெளிவு பெறுகிறவகையிலும் பதில் அளித்தார்.

இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழக வளர்ச்சி குறித்தும், 'பெரியார் முழக்கம்' சந்தா சேர்ப்பு, தலைமைக் கழகம் வெளியிடும் நூல்கள் விற்பனை குறித்தும், மேலும் இயக்கம் வலிமை பெற பிரச்சாரத்தை தீவிரமாக நடத்திடுமாறும் தனது உரையில் குறிப்பிட்டார். பெரியார் தாசன் நன்றி கூறினார்.

தொடக்கத்தில் மாவட்டத் தலைவர் தனபால் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க. முருகேசன், வழக்கறிஞர் இராசேந்திரன், திருவள்ளுவர் நூலகம் இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். பள்ளி மாணவர்கள் அதிகமாக கலந்து கொண்டனர்.

புதிய பொறுப்பாளராக கடவூர் ஒன்றிய அமைப்பாளராக ம. இராசகோபால், பி.எஸ்.சி., பி.எட்., தேர்வு செய்யப்பட்டார்.

### திருச்சியில்

திருச்சி சித்ரா விடுதியில் 4.7.2004 அன்று மாலை 6.30 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொதுச்செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன் முன்னிலையிலும் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டச் செயலாளராக க.செகன்னாதன், மாவட்டத் துணைத் தலைவர்: கமலநாதன், மாவட்டப் பொருளாளர்: வே. இராசு, திருவெறும்பூர் ஒன்றிய அமைப்பாளராக சோ. தங்கராசு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டோர் இரா. கிருஷ்ணகுமாரி, இரா. விசயலட்சுமி, செ.ரா.அன்பரசி, செ. அன்புச் செல்வம், செந்தில் குமார், த. கதிர் மற்றும் தோழர்கள் பெரியார் முழக்கத்துக்கு 13 ஆண்டு சந்தாக்கள் வழங்கப்பட்டன.

### மதுரையில்

மதுரை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், மாவட்டத் தலைவர் மாயாண்டி இல்லத்தில் 27.6.04 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையுரையாற்றினார்.

தொடர்ந்து தோழர்கள் தங்களது பகுதியில் இயக்க வளர்ச்சி குறித்தும், தங்களது செயல்பாடுகள் குறித்தும் பெரியார் முழக்கம், தலைமைக் கழகம் வெளியிடும் நூல்களைப் பெற்று விற்பனை செய்வது பற்றியும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று இயக்க வளர்ச்சிப் பற்றி உரையாற்றினர்.

முன்னதாக கூட்டத்திற்கு வருகை தந்தோரை மாவட்டத் தலைவர் மாயாண்டி வரவேற்றார். கூட்டத்தில் மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் சின்ன உடைப்பு பெரியசாமி, மாவட்ட அமைப்பாளர் ஸ்டாலின், மாவட்டப் பொருளாளர் இராசேந்திரன், கை வண்டி கருப்பு, வெண்மணி, கற்பூரம் நாகராசு, பாலகிருட்டிணன், குமரேசன் ஆகியோர் தங்களது கருத்தை தெரிவித்தனர். மாவட்ட செயலாளராக முருகேசன் தேர்வு செய்யப்பட்டார்.

சுற்றுப்பயணம் முழுவதிலும் - கழகத் தலைவரோடு களப்பணி ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி பிரகாஷ் பங்கேற்று வருகிறார்.

**செய்தி: பிரகாஷ்**

# சிக்குபுக்கு ரயிலே...

ஒரு காலத்தில் புகையைக் கக்கிக் கொண்டு ஓடியது ரயில். பிறகு டீசலில் ஓடியது; பிறகு மின்சாரத்தில் ஓடத் துவங்கியது. சமூக மாற்றத்தில் - மக்களை இணைக்கும் இந்த இரயில் களின் பங்கு மகத்தானது என்று கூறலாம். பெருந்துகள் அறிமுகமான போதுகூட அதிலே "தீண்டப்படாத வர்கள்" - பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், ரயில் 'தீண்டாமை'யை எப்போதும் பின் பற்றியதில்லை. 'நல்லதம்பி' படத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடத்தும் 'கிந்தனார்' காலட்சேபத்தில் ரயிலின் பெருமையை அழகாகப் பாடுவார். 'சாதி மத வித்தியாசம் பார்க்காதது மட்டுமல்ல, டிக்கட் வாங்கியவர் - வாங்காதவர் வேறு பாட்டையும் பார்க்காமல் எல்லோரை யும் ஏற்றிக் கொண்டு போகும் ரயில்' என்று பாடினார். மனிதனிடம் இல் லாத சமத்துவ உணர்ச்சி, மரக் கட்டையாக உன்னிடம் இருக்கிறது என்று கலைவாணர் பாடுவதுதான் - பாடலின் 'நறுக்கு'. ஆனாலும் பிரிட்டிஷார் ஆட்சியின் போது - பார்ப்பனர்கள், தங்களுக்காக மட்டும் தனிப் பெட்டி ஒதுக்க வேண்டும் என்று மனு கொடுத்தனர். அந்தக் கோரிக்கை நிறைவேற வில்லை. ஆனால் ரயில் நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்கு தனியே சாப்பிடுமிடம் ஒதுக்கப்பட்டு வந்தது. இதை ஒழிக்கவே போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

இது என்ன ரயில் புராணம் என்று கேட்கிறீர்களா?

சென்னையில் 70 புறநகர்ப் பகுதி களை இணைக்கும் மின்சார ரயில் அறிமுகப்படுத்தப்பட்டு 73 ஆண்டுகள் ஓடிவிட்டன. மீட்டர் வழிப்பாதை யாக இருந்தவைகள் - இப்போது அகல ரயில் பாதையாக மாற்றப்பட்டு வருகின்றன. கடைசியாக சென்னை எழும்பூருக்கும்-தாம்பரத்துக்கு மிடையே மட்டும் மீட்டர் ரயில் பாதையில் ஓடிக் கொண்டிருந்த மின்சார ரயில் ஜூன் 30-ம் தேதி இரவோடு நிறுத்தப்பட்டு விட்டன. அகல ரயில் பாதையாக மாற்றும் பணி துவங்கப் போகிறது. மின்சார ரயில் பயணம் சென்னை நகர மக்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. மீட்டர் ரயில் பாதையில் கடைசியாக ஓடிக் கொண்டிருந்த ரயில் விடை பெறுவதை, பயணிகள் பலரும் உணர்ச்சியுடன் நினைவு கூர்கிறார்கள். அரசு சார்பில் - இதற்காக விடை யனுப்பும் விழா ஒன்றே நடத்தப்பட் டுள்ளது. மத்திய அமைச்சர்கள் அதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். மனித சமூகத்துக்கு இந்த ரயில்கள் தந்த மகத்தான சேவையை நன்றியுடன் நினைவு கூர்கிறார்கள். இந்த நன்றி உணர்வு பாராட்டுக்குரியது.

இப்போது மீட்டர் வழிப்பாதை - அகல வழிப்பாதையாக மாறப் போகிறது; இது அடுத்தக் கட்ட வளர்ச்சி; இப்படி பழமைக்கு நன்றி உணர்வோடு விடை கொடுத்து விட்டோம். இதே போல் நன்றி உணர்வோடு நமது பழைய சம்பிர தாயங்களுக்கு நாம் ஏன் விடை கொடுக்கக் கூடாது? பழகிப் போன சாதியம், பழகிப்போன மூடச் சடங்குகள், பழகிப் போன பெண்ணடிமைச் சிந்தனை, பழகிப் போன வழிபாடுகள், பழகிப் போன பொறாமை, பழகிப் போன தன் முனைப்பு, பழகிப் போன அர்த்தமற்ற போட்டி-பகைமை உணர்வுகள் - இவைகளுக்கு எல்லாம் நன்றி தெரிவித்து விடை கொடுத்துவிட்டு, புதிய சிந்தனைக்கு, புதிய மறு மலர்ச்சிககு, புதிய பாதைக்குப் பயணம் செய்ய தயாராகக் கூடாதா? 'மீட்டர்' ரயில்பாதை அகல ரயில்பாதைகளாக மாறும்போது - நமது சிந்தனைகளும் அகலமாகலாமே!

**- கோடங்குடி மாரிமுத்து**

# கருப்பர்களுக்கு இடஒதுக்கீடு செய்துள்ள உலகின் முன்னணி நிறுவனங்கள்

தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடி யினருக்கு இடஒதுக்கீடு செய்து சட்டம் கொண்டு வரப் படும் என்று மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் அறிவித்திருக்கிறார். ஆனால், இந்திய தொழில் நிறுவனங் களின் கூட்டமைப்பும், 'இன்போசிஸ்' எனும் கம்ப்யூட்டர் நிறுவனத்தை நடத்தி வரும் பெரும் தொழிலதிபரான நாராயணமூர்த்தி என்ற பார்ப்பனரும், இந்த இடஒதுக் கீட்டை அமுல்படுத்தவிட மாட்டோம் என்று மிரட்டு றார்கள். 'இந்துத்துவா'வை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளும் 'இந்து' ஏடு - இந்த இடஒதுக்கீட்டுக்கு எதிரான கடிதங்களை வெளியிட்டு வருகிறது. மத்தியில் அமைந்துள்ள புதிய ஆட்சியின் ஒவ்வொரு அசைவுக்கும், உடனுக்குடன் தலையங்கங்களை எழுதி வரும் 'இந்து' - தனியார் துறை இடஒதுக்கீட்டில் மட்டும் நீண்ட மவுனம் சாதிக்கிறது. தனியார் துறையில் இடஒதுக்கீடு வந்து விட்டால் - 'தகுதி திறமை' கெட்டுப் போய்விடும் என்ற பழைய 'பல்லவி' யையே பார்ப்பனர்கள் பாடுகிறார்கள் நாராயண மூர்த்தி போன்ற முதலாளி பார்ப்பனர்கள் - பொருளாதார அடிப் படையில் இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பேசுகிறார்கள்.

## புள்ளி விவரங்களுடன் இதோ ஆதாரங்கள்

உலகின் முன்னணியில் நிற்கும் பெரும் தொழில் நிறுவனங்களில் கருப்பர்களுக்கு இடஒதுக்கீடு செய்துள்ளன. அதனால் அந்த நிறுவனங்களின் வளர்ச்சி ஒன்றும் குறைந்து போய்விடவில்லை. அவைகள் வளர்ந்து கொடிகட்டிப் பறக்கின்றன. சில உதாரணங்களை புள்ளி விவரங்களோடு இங்கு பட்டியலிடுகிறோம்.

- **எக்சான் மொபைல்** - அமெரிக்கா வின் மிகப் பெரும் நிறுவனம். அமெ ரிக்காவிலே முதலிடத்தில் நிற்கும் இந்நிறுவனத்தில் அதிகாரிகள், நிர்வாகிகள் என்ற உயர் பதவிகளில் மொத்தம் 7460 பேர் இருக்கிறார்கள். இதில் கருப்பர் மற்றும் மைனாரிட்டி சமூகத்தைச் சார்ந் தவர்கள் 1264 பேர் (16.7. சதவீதம்). தொழில் நுட்பப் பிரிவுகளில் வேலை செய்வோர் 14,179. இதில் கருப்பர்கள் 2558 பேர் (18.08 சதவீதம்). இது தவிர, இந்த நிறுவனம், உற்பத்திக்கு வேண்டிய பொருள்களில் ரூ.200 மில்லியன் டாலர் மதிப்புக்கு, கருப்பர்கள் நடத்தும் நிறுவனங்களிடமிருந்தே வாங்குகிறது. அதுவும் கருப்பர் இனப் பெண்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்ற கொள்கை அங்கே அமுலில் இருக்கிறது. எனவே, கருப்பர் இனப் பெண்கள் நடத்தும் நிறுவனங்களிட மிருந்து 150 மில்லியன் டாலர் மதிப்புள்ள பொருள் களை ஒவ்வொரு ஆண்டும் இந்நிறுவனம் வாங்குகிறது.
- **வால்மார்ட் ஸ்டோர்ஸ்** - அமெரிக்காவில் இரண்டாவது இடத்தில் இருக்கும் வர்த்தக நிறுவனம். 9,78,000 பேர் வேலை செய்கிறார்கள். இதில் கருப்பர்கள் மற்றும் மைனாரிட்டிகள் 2,27,000 (23.21 சதவீதம்) மைனா ரிட்டிகள் நடத்தும் நிறுவனங்களிடமிருந்து ஒரு பில்லியன் டாலருக்கு, பொருள்களை வாங்குகிறது இந் நிறுவனம்.
- **ஜெனரல் மோட்டார்ஸ்** -இங்கு மூன்றில் ஒரு பங்கு வேலைகள் - மைனாரிட்டிகளுக்கு தரப்பட்டுள்ளன. இந்தக் கம்பெனி தயாரிக்கும் கார்கள் உலகம் முழுதும் விற்கப்படுகின்றன. கடந்த 30 ஆண்டுகளாக மைனாரிட்டிகளின் தொழில் நிறுவனங்களிடமிருந்து, தங்கள் தயாரிப்புக்கான பொருள்களை 2.5 பில்லியன் டாலர் மதிப்புக்கு, இந் நிறுவனம் வாங்கி வருகிறது. இந் நிறுவனத்தின் கார் விற்பனை உரிமைகள் (டீலர்கள்) 320 'கருப்பர்களுக்கு' வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு பில்லியன் டாலர் மதிப்புக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.
- **போர்டு மோட்டார்** - அமெரிக்காவின் நான்காவது இடத்தில் இருக்கும் இந்தக் கார் தயாரிப்பு நிறுவனத்தில் 3,45,991 கருப்பர்கள் மற்றும் மைனாரிட்டிகள் வேலை செய்கிறார்கள். (18.2 சதவீதம்) 370 மைனாரிட்டி யினருக்கு கார் விற்பனை உரிமைகளை வழங்கியிருக் கிறது. இதே போர்டு நிறுவனம் - சென்னையிலும் கார் உற்பத்தி செய்கிறது. இங்கு தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்ய மறுக்கிறது. தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தின் உயர் பதவிகளில் பார்ப்பனர்களே ஆக்கிரமித்துக் கொண் டிருக்கிறார்கள்.
- **அய்.பி.எம்.** - தகவல் தொழில் நுட்பத் துறையில் இது மிகவும் பிரபலமான நிறுவனம். கம்ப்யூட்டர்கள் அது தொடர்பான கருவிகளைத் தயாரிக்கிறது. தங்களது நிறுவனத்தில் 15 சதவீத கருப்பர்களுக்கு வேலை வாய்ப்பு தந்துள்ளதாக இந்நிறுவனம் பெருமைப்படுகிறது. அதிகாரிகள், நிர்வாகிகள் மட்டத்திலேயே 14.6 சதவீத கருப்பர்களுக்கும், மொத்த தொழிலாளர்களில் 21.56 சதவீத கருப்பர்களுக்கும் இந்நிறுவனம் வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளது.
- **மைக்ரோ சாப்ட்** - மிகப் பெரும் கம்ப்யூட்டர் நிறுவனம். கருப்பர் மற்றும் மைனாரிட்டிகளுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காகவே, இந் நிறுவனம் ஒரு தனிப் பிரிவை நடத்தி வருகிறது. இந்நிறுவனம் கருப்பர்கள் கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். கருப்பர் கள் நடத்தும் தொழில் நிறுவனங் களிடமிருந்து, பல கோடி ரூபாய்க்கு பொருள்களை வாங்குகிறது.

அமெரிக்காவில் பத்திரிகையாளர் கழகம் 1975ல் உருவாக்கப்பட்டபோது, பத்திரிகைத் துறைகளில் 3.95 சதவீத கருப்பர்கள் மட்டுமே இருந்தனர். அது கண்டு அதிர்ச்சி அடைந்த அமைப்பு 1978ம் ஆண்டிலிருந்து 2000க்குள் கருப்பர்கள் மற்றும் மைனாரிட்டி களுக்கு அவர்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப, பத்திரிகைகளில் வேலைவாய்ப்புகளைப் படிப்படியாக தர வேண்டும் என்று அறிவித்தது. இப்போது 'வால்ஸ் டீரிட் ஜர்னல்' பத்திரிகையில் 17.1. சதவீதமும், 'யு.எஸ்.ஏ. டுடே'யில் 18.7 சதவீதமும், 'நியுயார்க் டைம்ஸ்'சில் 16.2 சதவீதமும், 'லாஸ் ஏஞ்செல்ஸ் டைம்'சில் 18.7 சதவீதமும், 'வாஷிங்டன் போஸ்டில்' 19.5 சதவீதமும், ஒட்டு மொத்த பத்திரிகை புகைப்படக் கலைஞர்களில் 16 சதவீதமும், செய்தி சேகரிப்பாளர்களில் 17.7 சதவீதமும், 'சூப்பர்வைசர்' பதவிகளில் 9.1 சதவீதமும், வடிவமைப்பு ஆசிரியர்களில் (லே அவுட் எடிட்டர்) 10.2 சதவீதமும் கருப்பர்கள் மற்றும் மைனாரிட்டியினர் இருக்கிறார்கள்.

இந்தியாவில் பத்திரிகை உலகில் பார்ப்பன ஆதிக்கம் தான் கொடிகட்டிப் பறக்கிறது. சமூக நீதிக் கொள்கைகள் ஓரளவு அமுலில் இருக்கும் தமிழ் நாட்டிலேயே 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற அலுவலகங்களில் பார்ப் பனர்களின் ஆதிக்கம் தான். 'தினத்தந்தி', 'மாலைமுரசு', 'மாலை மலர்', 'தினகரன்' போன்ற நாளேடுகளின் அலுவல கங்களில் பிற்படுத்தப்பட்டோரிலே நாடார்சாதியினர் தான் அதிகம். தலித்துகளோ, முஸ்லீம்களோ கிடையாது. பெண் களையும் இந்நிறுவனங்கள் புறக்கணிக்கவே செய்கின்றன.

தென்னாப்பிரிக்காவில் கருப்பர்களுக்கு உரிய வாய்ப் பைத் தராத நிறுவனங்களுக்கு, அந்நாட்டு அரசாங்கம் அபராதமே விதிக்கிறது. இப்படி உலகின் முன்னணி நிறுவனங்களில் கருப்பர்களுக்கும் மைனாரிடிகளுக்கும் அந்நாட்டு அரசாங்கம் உரிய பிரதிநிதித்துவம் தருவதோடு, கருப்பர்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களிடமிருந்து பொருள்களையும் வாங்கும் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றன. ஆனால் இந்தியாவில் புறக்கணிக்கப்படும் தலித், மைனாரிட்டி, பெண்கள், பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய பிரதிநிதித்துவம் தேவை என்ற கோரிக்கையை எழுப்புவதைக்கூட பார்ப்பன சக்திகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; மிரட்டுகிறார்கள்; நடக்காது என்கிறார்கள். தனியார் துறையில் - தொழில் நிறுவனங்களில் உரிய பிரதிநிதித்துவம் கேட்கும் உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தத் தயாராவோம்! கட்சிகளைக் கடந்து ஒடுக்கப்பட்ட மக்கள் - மைனாரிட்டிகள் அணி திரட்டுவோம்! (நிறைவு)

**தகவல்கள்: 'டெல்காம்'**

# சைவ மடங்கள் - சவமடங்களாகிவிட்டது ஏன்?

21.6.2004 அன்று செந்தமிழ்ப் பேரவை சார்பில், மயிலாடுதுறை வாழ்க்கை திருமண மண்டபத்தில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் 'இருக்கு வேத ரகசியங்கள்' எனும் தலைப்பில் தமிழ் அறிஞர் சத்யவேல் முருகனார் சிறப்புரையாற்றினார். புலவர் புகழேந்தி தலைமை தாங்கினார். பேராசிரியர்கள் க.வே.சுப்ரமணியம், ஜெயராமன், செம்பியன், செல்வ கணபதி உள்ளிட்ட பலரும் கருத் துரையாற்றினர். பேராசிரியர் ஜெய ராமன் தனது உரையில் -

ஒரு இனம் சுதந்திரம் பெற்ற இனமாக இருக்கிறது என்றால் அதற்கான அடையாளங்கள் என்ன? அவர்கள் பேசும் மொழி ஆட்சி மொழியாக, படிப்பு மொழியாக, வீட்டு மொழியாக, சமயத்தின் மொழியாக இருக்கவேண்டும். உலகில் விடுதலை பெற்ற இனங்கள் - இப்படித்தான் இருக்கின்றன. இங்கே என்ன நிலைமை? தமிழன் தனது

(4ம் பக்கம்)

# எங்கே போனது மந்திர சக்தி?

## பேராசிரியர்கள் ஜெயராமன்-செம்பியன் வினாக்கனை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழியில், கடவுளைக் கும்பிடக்கூட உரிமை கிடையாது. கடவுளுக்கு உகந்த மொழி சமஸ்கிருதம் என்கிறார்கள். சமஸ்கிருதம் இங்கே எப்படி இருக்கிறது? பள்ளி மாணவன் 16ம் வாய்ப்பாட்டை மனப்பாடமாக ஒப்பிப்பது போல், ஒப்பிக்கப்படும் மொழியாகவே சமஸ்கிருதம் இருக்கிறது. கடவுளுக்கு சமஸ்கிருதம் மட்டும் தான் புரியும் என்றால், சமஸ்கிருத மொழி தோன்றுவதற்கு முன், கடவுளை எந்த மொழியில் கும்பிட்டார்கள்? ‘தென்னாடுடைய சிவனே போற்றி’ என்று கூறுகிறார்கள். தென்னாட்டு சிவனுக்கு ஏன் தமிழ் புரியவில்லையா? தமிழே புரியாத கடவுள் - எப்படி தமிழ்க் கடவுளாக இருக்க முடியும்? தமிழை நீச பாஷை என்கிறான்; அப்படியானால் தமிழ் பேசுகிறவர்கள் எல்லாம் யார்? தமிழ் நாட்டிலே ஒரு குக்கிராமத்திலே ஒரு கொட்டகையைப் போட்டுக்கொண்டு ‘ஏசு அழைக்கிறார்’ என்று தமிழிலே ஜெபம் செய்கிறார்கள்; எங்கோ பிறந்த ஏசுவுக்கு, தமிழ் புரியும்போது, தமிழ்நாட்டுக் கடவுளுக்கு மட்டும் தமிழ் புரியாதா?

நம்முடைய சைவ மடாதிபதிகள் - தமிழையும், சைவத்தையும் இரண்டு கண்கள் என்கிறார்கள். தமிழ் கோயிலுக்குள் நுழைய முடியவில்லை. தமிழில் குடமுழுக்கு நடத்த சங்கராச்சாரி எதிர்க்கிறார்; சைவ மடாதிபதிகள் எங்கே போனார்கள்? ஏன் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்கள்? இவர்கள் தமிழையும் காப்பாற்ற முன்வரவில்லை; தமிழ்க் கடவுளையாவது காப்பாற்ற முன்வந்தார்களா? பழந்தமிழர்களின் மருத்துவ அறிவியலின் அடையாளமாகத் திகழும், மூலிகையால் ஆன பழனி முருகன் சிலைக்கு போட்டியாக, சங்கராச்சாரி அய்ம்பொன் சிலையைக் கொண்டு போய் கர்ப்பகிரகத்துக்குள் வைத்த போது, இந்த மடாதிபதிகள் ஏன் எதிர்க்கவில்லை? கொந்தளித்து எழ வேண்டிய சைவ மடங்கள் சவ மடங்களாகிப் போனது ஏன்?

உலகில் - மூத்த மொழிகள் பல அழிந்தே போய்விட்டன. ரோம் பேரரசு இன்று இல்லை; லத்தீன் மொழி அழிந்து போய்விட்டது. கிரேக்க மொழி ஒழிந்துவிட்டது. ஏசுநாதர் பேசிய ஹிப்ரு மொழியும் மறைந்து விட்டது. 1945-ல் இஸ்ரேல் நாட்டை உருவாக்கிய யூதர்கள், மீண்டும் ஹிப்ரு மொழிக்கு உயிர் கொடுத்தார்கள். சமஸ்கிருதம் செத்துப் போன மொழி. பல நூறு கோடி ரூபாயை வாரி இறைத்து அதற்கு உயிரூட்ட முயற்சிக்கிறான். சீனமொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அம்மொழியின் எழுத்துக்கள் படங்களாகவே இருக்கும். கருத்துகளைத் துல்லியமாக சொல்லக்கூடிய வளமான சொற்கள் சீனமொழியில் இல்லை. ஆனால் தமிழிலிருந்து மட்டும் 25 மொழிகள் பிரிந்துள்ளன. தமிழிலிருந்து 53 வட்டார மொழிகள் பிறந்துள்ளன. தமிழ் செம்மொழியாகும் என்ற அறிவிப்பு இப்போது தான் வந்திருக்கிறது. அதற்குக்கூட இன்னும் ஆணை வரவில்லை. தமிழ்மொழிக்கு இவ்வளவு சிறப்புகள் இருந்தும், ஒரு சுதந்திரம் பெற்ற இனத்தின் அடையாளங்களில் தமிழ் மொழியைக் காண முடியவில்லை என்றால் என்ன பொருள்? இந்த இனம் இன்னும் சுதந்திரமடையவில்லை என்று பொருள். இந்த இனம் சுதந்திரமடையவேண்டும் என்பது - இதிலிருந்து நாம் பெற வேண்டிய உண்மை” - என்றார் பேராசிரியர் ஜெயராமன்.

பேராசிரியர் செம்பியன் தனது உரையில்:-

சோழர்களும் பாண்டியர்களும் ஆட்சி செய்த காலத்தில் தான் ஆயிரக்கணக்கில் பார்ப்பனர்களை - வடநாட்டிலிருந்து இங்கே இறக்குமதி செய்தார்கள். யாகங்களும், திருமணங்களும், குடமுழுக்குகளும், புதுமனை புகுவிழாக்களும் வடமொழியிலேயே நடத்தப்பட்டன. கடவுள் மொழி சமஸ்கிருத மொழி என்றாக்கி விட்டார்கள். நான் கேட்கிறேன், கடவுளுக்கு சமஸ்கிருதம் மட்டுமே புரியும் என்று எந்த மொழியியல் துறை அறிஞர்களாவது கூறியிருக்கிறார்களா? சரி; இவ்வளவு காலம் சமஸ்கிருதத்திலே கடவுளை வழிபட்டு - கடவுளை திருப்தி செய்திருக்கிறீர்களே அப்படி வடமொழி மந்திரங்களை ஓதியும், இந்தியா பொருளாதாரத்தில் முன்னேறியதா?

வடமொழியில் மந்திரத்தைக் கேட்டு மகிழ்ந்த ஆண்டவன் காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்த்தானா? வடமொழி மந்திரத்தால் நீங்கள் விஞ்ஞானி நியுட்டனைவிட, ஏதாவது சாதனை செய்திருக்கிறீர்களா? வேதத்தைக் கட்டிக் காப்பாற்றிய சோழ-பாண்டிய பரம்பரை ஏன் அழிந்தே போனது? உங்களின் வேத மந்திர சக்திகள் முகம்மதியர்கள் படையெடுப்பைத் தடுத்ததா? ஆங்கிலேயர் நுழைவதைத் தடுத்ததா? ஒரு நாடு அடிமைப்பட்டிருக்கும் போது நாட்டில் உள்ள கடவுள்களும் அடிமைப்பட்டே கிடக்கின்றன என்றார் விவேகானந்தர். உங்கள் மந்திரங்கள் உங்கள் கடவுளின் அடிமைத்தனத்தைப் போக்கியதா? கடவுள் அடிமைத்தனத்தையே ஒழிக்காத உங்களின் வடமொழி மந்திரங்கள், எங்களுக்கு விடிவுகளைத் தந்தவிடுமா? உங்கள் மந்திரசக்தி - தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளாக மழை பெய்ய வைத்ததா? நீர்பிடிப்பு பகுதிகளிலாவது மழை பெய்யச் செய்திருக்கக் கூடாதா? தமிழ்நாட்டுக்குத் தண்ணீரைத் தடுத்து வரும், கருநாடக அணைகளை உங்களின் வடமொழி மந்திர சக்தி உடைத்தெறிந்ததா? இவ்வளவுக்குப் பிறகும் உங்கள் மந்திரங்களின் ஏவல் சக்திகளை நம்ப வேண்டும் என்பதற்கு நாங்கள் என்ன மண்ணாங்கட்டிகளா?” என்று கேட்டார் பேராசிரியர் செம்பியன். ●

### கல்விக் கட்டண மோசடியை எதிர்த்து, மயிலாடுதுறையில் ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் - அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தைவிட - கூடுதல் கட்டணங்களை வசூலித்து வருகின்றன. கட்டண வசூலுக்கு உரிய ரசீதும் தருவதில்லை. இதைக் கண்டித்தும், பள்ளி நிர்வாகம் மீது நடவடிக்கை கோரியும், கடந்த 22.6.2004 காலை 12 மணியளவில், மாவட்டக் கல்வி வளாகம் முன் தமிழர் உரிமை இயக்கமும், தந்தை பெரியார் திராவிடர் கழகமும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தின. தோழர் அப்பு. மகேசு (தமிழர் உரிமை இயக்கம்) தலைமை தாங்கினார். கழக மாவட்ட அமைப்பாளர் இளையராசா, கண்டன உரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரமேசு, நகர கழகத் தலைவர் மகேசு உட்பட கழகத் தோழர்களும், முரளிதரன், சுரேசு, கோபால கண்ணன் உட்பட, தமிழர் உரிமைக் கழகத் தோழர்களும் பங்கேற்றனர்.

# கவுரவ விரிவுரையாளர் பதவிகளில் இடஒதுக்கீட்டை மறுப்பதா?

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள 1200 விரிவுரையாளர் பதவிகளை நிரப்புவதற்கு தமிழக அரசின் கல்லூரிக் கல்வித் துறை கடந்த 15-ம் தேதி ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது. இதில் இடஒதுக்கீடு பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. தகுதி அடிப்படையில் நியமனங்களைச் செய்யுமாறு கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பதவிகளில் இடஒதுக்கீடு பின்பற்றப்படுமேயானால் 250 தாழ்த்தப்பட்டவர்களுக்கும் 220 மிகவும் தாழ்த்தப்பட்டோருக்கும் 500 பிற்படுத்தப்பட்டோருக்கும் வேலை வாய்ப்புகள் உறுதியாகும். எனவே தமிழக அரசு இந்த நியமனங்களில் இடஒதுக்கீட்டை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். - இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**குறிப்பு:** பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

## சட்ட விரோதமாகக் கோயில் கட்ட அரசு அனுமதிக்கலாமா?

சென்னை பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பில் - சட்ட விரோதமாகக் கட்டப்பட்டிருந்த கோயிலை - வீட்டுவசதி வாரியம் அகற்றியுள்ளது. பக்தர்கள் சிலர் முதல்வர் ஜெயலலிதாவிடம் முறையிட்டார்களாம். உடனே, இடிந்த கோயிலை மீண்டும் கட்டித்தர ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. சட்ட விரோத கட்டடங்களைக் கட்டுவதற்கு, முதலமைச்சர் எப்படி ஆணை பிறப்பிக்கலாம்? அயோத்தியில் சட்ட விரோதமாக பாபர் மசூதியை இடித்தார்கள். ஆனால், அங்கே மீண்டும் பாபர் மசூதியைக் கட்டித்தர வேண்டும் என்பதுதானே நியாயம்? முதலமைச்சர் ஜெயலலிதாவோ, அங்கே ராமன் கோயில் கட்ட வேண்டும் என்ற கூட்டத்தோடு சேர்த்து குரல் கொடுக்கிறாரே, இது என்ன நியாயம்? சட்ட விரோதமாக கோயிலைக் கட்ட உத்தரவிடும் ஜெயலலிதாவுக்கு, தி.மு.க. தலைமைக் கழகமான ‘அண்ணா அறிவாலயம்’ முன்புறமுள்ள இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று நோட்டீசு பிறப்பிக்க என்ன தார்மீக உரிமை இருக்கிறது? தமிழ்நாட்டில் வேத புராண கால பார்ப்பனர் ஆட்சியை நடத்தவே ஜெயலலிதா விரும்புகிறாரா?

## சங்கராச்சாரியை நீக்கக் கோரிக்கை

தமிழக அரசு - காஞ்சிபுரம் செயேந்திரனை, அரசு குழுக்களிலிருந்து உடனே நீக்க வேண்டும் என்று பழனி நவபாசாண மூலவர் சிலை பாதுகாப்பு இயக்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

“கடந்த 25.1.04 நள்ளிரவில் காஞ்சி செயேந்திரரால் திருட்டுத்தனமாக பழனி நவபாசாண மூலவர் சிலை முன் வைக்கப்பட்ட உலோக சிலை சித்த மருத்துவர்களின் கடுமையான தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பிறகு 7.6.04 அன்று எடுக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

தொடர்ச்சியாக அவமானங்களை இந்த அரசுக்கு தேடிக் கொடுக்கும் ஜெயேந்திரரை கோயில் கும்பாபிசேகக் குழு, கோயில் சொத்து பாதுகாப்புக் குழு பதவிகளில் இருந்து உடனடியாக நீக்கிட வேண்டும் என தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

### களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவல்லி அன்பு

கழகத்தின் களப்பணி ஒருங்கிணைப்பாளராக சேலம் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டார் தோழர் நங்கவல்லி அன்பு. சேலம், நாமக்கல், தர்மபுரி மாவட்டக் கழகங்களோடு தொடர்பு கொண்டு அவர் கழக வளர்ச்சிக்கு செயல்படுவார்.

### அரூர் சுதாகர்-இளையராணி மணவிழாவில் நன்கொடை

அரூர் தோழர் சுதாகர்-இளையராணி வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 30.6.2004 காலை அரூர் ஏழுமலைக் கவுண்டர் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மணவிழா நினைவாக - கழக ஏட்டுக்கு, மணமக்கள் சார்பில் ரூ.500 நன்கொடையை கழகத் தலைவரிடம் வழங்கினர்.

**● இந்திய வரலாற்றின் பகவத்கீதை - தொடர்**

**●ஒட்டன்சத்திரம் குடும்ப விழா விவாதங்கள்**

**அடுத்த இதழில்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 8th July 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூலை 15, 2004 | புரட்சி 3 | முழக்கம் 27 | விலை : ரூ.2.50

## ‘மால்கோ’ நிர்வாகத்தை எதிர்த்துப் போராட்டம்

# உள்ளூர் மக்களுக்கு வேலை மறுக்காதே!

## மேட்டூரில் கழகத் தோழர்கள் கைது! நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை

மேட்டூர் அலுமினிய தொழிற்சாலையான ‘மால்கோவில்’ - உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டதை எதிர்த்து, தந்தை பெரியார் திராவிடர் கழக சார்பில் கடந்த 9-ம் தேதி காலை ஆர்ப்பாட்டம் நடந்தது. கழக ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, 500 தொழிலாளர்கள், வேலைக்குச் செல்லாமல் புறக்கணித்தனர். அதிர்ச்சியடைந்த நிர்வாகம், 6 கழகத் தோழர்களை நள்ளிரவில், வீடுகளில் கைது செய்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளரிடம் நேரில் பேசினார். மால்கோ நிர்வாகம் உள்ளூர் மக்களுக்கு வேலைகளைத் தரக் கூடாது என்று கொள்கை ரீதியாகவே அமுல்படுத்தி வருவதை சுட்டிக்காட்டினார். இந்த ஆலை செயல்படும் மேட்டூர் ஆர்.எஸ். பகுதியைச் சுற்றி, பல நூற்றுக் கணக்கான தோழர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தினக்கூலியாக வேலைக்குச் சென்று கேட்பதும், அவர்களுக்கு நிர்வாகத்தின் ஒப்பந்தக்காரர்கள் வேலை வாய்ப்பை மறுப்பதும் வழக்கமாகிவிட்டது. உள்ளூர் மக்களை வேலைக்கு எடுக்க வேண்டாம் என்று நிர்வாகம் தங்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஒப்பந்தக்காரர்கள் கூறுகிறார்கள்.

மால்கோ தொழிற்சாலையினால் அன்றாடம் சுற்றுச் சூழல் மாசுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் உள்ளூர் மக்களுக்கு வேலை வழங்க நிர்வாகம் மறுத்துவருவது குறிப்பிடத்தக்கது. வேலை மறுக்கப்படுவதால், இளைஞர்கள் வாழ்க்கையில் திசை மாறிப் போய்விடுகிறார்கள். இந்த நிலையில், அன்றாட தினக்கூலிகளான ‘கலாசி’களாக, 100 சதவீதம் உள்ளூர்ப் பகுதி தொழிலாளர்களுக்கே வேலைகளை வழங்க வேண்டும் என்று, கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து வரும் 20-ம் தேதி வருவாய்த் துறை அதிகாரி முன் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்வதாக மாவட்டக் காவல்துறை அதிகாரி கூறினார். பேச்சு வார்த்தையில் மால்கோ தொழிற்சாலை நிர்வாகத்தினரும், ஒப்பந்தக்காரர்களின் பிரதிநிதிகளும், கழகத்தினரும் பங்கேற்பர். அதுவரை தொழிலாளர்கள் எவரையும் வேலை நீக்கம் செய்யக் கூடாது. அதே போல், உள்ளூர் தொழிலாளர்களுக்கு ஆதரவாக உள்ள ஒப்பந்தக்காரர்களையும் மால்கோ நிர்வாகம் நீக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட கழகத் தோழர்கள் முல்லை வேந்தன், டைகர் பாலன், மார்ட்டின், சக்திவேல், அண்ணாத்துரை, முத்துராஜ் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். ■

## சங்கராச்சாரியை எதிர்த்து நெமிலி தோழர்கள் போர்க்கொடி

வேலூர் மாவட்டம் நெமிலிக்கு வருகைதரவிருந்த காஞ்சி சங்கராச்சாரிக்கு கழகத் தோழர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். சங்கராச்சாரி, தனது பயணத்தை ரத்து செய்துவிட்டார். கடந்த 27ம் தேதி காலை காஞ்சி ஜெயேந்திர சரசுவதி நெமிலிக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபன் தலைமையில், சங்கராச்சாரிக்கு கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்க தோழர்கள் திட்டமிட்டனர். சங்கராச்சாரியைக் கண்டித்து - சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கருப்புக்கொடி காட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நெமிலி முழுதும் கழகத்தினர் சங்கராச்சாரியைக் கண்டித்து, துண்டறிக்கைகள் வழங்கினர். அதில் இவ்வாறு அச்சிடப்பட்டிருந்தது.

- மத்திய அரசு தமிழை செம்மொழியாக அறிவித்த பின்னரும் சங்கராச்சாரியே தமிழை வழிபாட்டு மொழியாக ஏற்க ஏன் மறுக்கிறாய்?
- தமிழை ஏன் நீச மொழி என்று கூறி அர்ச்சனைக்கு தகுதியில்லை என்கிறாய்?
- தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பார்ப்பான் மற்றும் பிற சாதியினரையும் நாம் அனைவரும் இந்துக்கள் என்கிறாய். ஆனால் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக ஏன் மறுக்கிறாய்?
- தமிழ் மண்ணை இழிவுபடுத்தும் சங்கராச்சாரியே வெளியேறு.

- தந்தை பெரியார் திராவிடர் கழகம், நெமிலி ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

- என்று துண்டறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இதனால் நெமிலி முழுதும் பரபரப்பானது. ஆனால் சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதி திட்டமிட்டபடி காலையில் நிகழ்ச்சிக்கே வரவில்லை. எனவே தோழர்கள் திரும்பிவிட்டனர். மாலை 7 மணிக்கு மூன்றாவது சங்கராச்சாரி மட்டும் தனியே வந்து கோயிலில் வழிபாடு செய்துவிட்டு உடன் திரும்பிவிட்டார். ■

சேலத்தில் குட்டிசாமியார் மோசடிகளை அம்பலப் படுத்தி பகுத்தறிவுச் சிறுமி தமிழ்த் தென்றல் பேசியபோது (ஜூன் 29) மேடையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தோழர்கள்

### மகாராஷ்டிராவில் தலித் மாணவர்களுக்கு இலவச மருத்துவக் கல்வி

தனியார் துறைகளில் - தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கு, 51 சதவீத இட ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ள மகாராஷ்டிரா முதலமைச்சர் ஷிண்டே, இப்போது மற்றொரு சிறப்பான ஆணையைப் பிறப்பித்துள்ளார். மகாராஷ்டிராவில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின் மாணவர்களுக்கான முழு கல்விச் செலவையும் அரசே ஏற்கும் என்று அறிவித்துள்ளார்.

### ஆந்திராவில் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு

ஆந்திர மாநில காங்கிரஸ் ஆட்சி, அம் மாநிலத்தில் முஸ்லீம்களுக்கு, கல்வி வேலை வாய்ப்புகளில் 5 சதவீதம் இடஒதுக்கீடு செய்துள்ளது. மாநில முதல்வர் ராஜசேகர் இதைத் தெரிவித்துள்ளார். முஸ்லீம்கள் அனைவரும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

## எந்த மூலையில் தமிழர்க்கு இன்னல் நேர்ந்தாலும் போராடக் கூடியவர்
## கழகத் தலைவருக்கு வை.கோ. பாராட்டு!

ம.தி.மு.க. குறிஞ்சிப்பாடி ஒன்றியச் செயலாளரும், பெரியார் கொள்கைகள் மீது தணியாத பற்றுக் கொண்டவருமான என்.ஆர்.(எ) என். இராமலிங்கம் அவர்களது மகள் இரா. சங்கீதா-இராஜேந்திர பிரசாத் இணையரின் திருமணம் 1.7.2004 அன்று கடலூர் சுப்பராயலு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தலைமை ஏற்று திருமணத்தை நடத்தி வைத்தார். கழகத் தலவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. மணமக்களை வாழ்த்திப் பேசிய போது குறிப்பிட்டதாவது:

“இந்தத் திருமணத்தில் கலந்து கொள்வதில் எனக்கு இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், கொளத்தூர் மணி அவர்களுடன் கலந்து கொள்வது. ஈழ விடுதலைப் போருக்காக இவர் ஆற்றிய பங்கு எத்தனை முக்கியமானது. ஈழத்து இலட்சிய வேங்கைகளுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரவளித்தது எந்நாளும் போற்றக்கூடியது. அடக்குமுறைகள் இவரைப் பார்த்து அஞ்சியது. பூமிப் பந்தில் எந்த முனையில் தமிழர்க்கு இன்னல் நேர்ந்தாலும் அதற்காக போராடக் கூடியவர்தான் கொளத்தூர் மணி. திராவிடர் இயக்கத்துக்கு ஏற்பட்டுள்ள சோதனைகளை வெல்ல அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். பெரியார், அண்ணா, கொள்கைகள் தான் தமிழகத்தை எந்நாளும் வழி நடத்த வேண்டும்” என்று கூறினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசியது: “இந்த திருமணத்தை சுயமரியாதை திருமணமாக நடத்தும் என்.ஆர். அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்க வேண்டும். பணம், புகழ் வந்தால் கொள்கைகளை மறந்துவிடும் காலகட்டத்தில். இதுபோன்ற திருமணங்கள் நடைபெறுவது பெரியார், அண்ணா கொள்கைகளை நினைவில் கொள்வதாகும். சுயமரியாதை திருமணங்கள், பார்ப்பன, சடங்குகளை ஒழித்து மானமுள்ள தமிழர்களை அடையாளம் காட்டும்” என்றார். மணவிழாவில் புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், சங்கொலி திருநாவுக்கரசு, செஞ்சி ராமச்சந்திரன், வடலூர் கழகத் தலைவர் கலியமூர்த்தி, காட்டுச் சாகை குப்புசாமி, அழகிரி உட்படப் பலரும் வாழ்த்திப் பேசினர்.

தலையங்கம்

## நிதி நிலை அறிக்கைகள்

இரயில்வே அமைச்சர் லல்லு பிரசாத் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில் – சாமான்ய மக்களின் உணர்வுகள் பிரதிபலிக்கின்றன. இரயில்வேயில் மூட்டைச் சுமக்கும் தொழிலாளர்கள் பற்றிக் கவலைப்பட்டிருக்கும் முதல் இரயில்வே அமைச்சர் லல்லுதான். அந்தத் தொழிலாளர்களின் குடும்பத்தினர்களுக்கு, இரயில் பயணச் சலுகைகள் வழங்கியிருக்கிறார். இரயில்வே துறையில், கடந்த பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருக்கும், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான வேலை வாய்ப்புகள் நிரப்பப்படும் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம். இரயில்வே புத்தக நிலையங்களில் தாழ்த்தப்பட்டோர், மைனாரிட்டிகளுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு, டிக்கட் பரிசோதகர் பதவிகளில் பெண்கள் நியமனம், பிளாஸ்டிக்கு களுக்கு பதிலாக மண் கலயம், படுக்கை விரிப்புகளுக்கு கதர் அல்லது கைத்தறித் துணி, வெளிநாட்டு குளிர்பானங்களுக்கு பதிலாக மோர் இவைகள் எல்லாம் நிச்சயமாக மக்களின் வரவேற்றைப் பெறும் திட்டங்களாகும். பயணிகள் மற்றும் சரக்குக் கட்டணங்களும் உயர்த்தப்படவில்லை. ஆனாலும் தமிழகத்தின் அகல ரயில் பாதைத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற வருத்தமும் உண்டு. இந்த வருத்ததிற்காக, லல்லு பட்ஜெட்டின் 'மனித நேய' அணுகுமுறையைப் பாராட்டாமல் இருந்துவிட முடியாது.

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஜூலை 8ம் தேதி 2004–2005 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். ஆளும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி முன்வைத்துள்ள குறைந்தபட்ச பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில், இந்த நிதிநிலை தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னையில் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டத்துக்கு, ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி நிலை அறிக்கையிலேயே அதிக முன்னுரிமை பெற்றுள்ள திட்டமாக இது இருக்கிறது. கைத்தறித்துறையை மிகவும் பாதிக்கச் செய்த 'சென்வாட்' வரி விதிப்பு ரத்தாகியிருக்கிறது. தேர்தல் காலத்தில் தமிழக மக்களிடம் கூறப்பட்ட வாக்குறுதியை ஜனநாயக முற்போக்குக் கூட்டணி இதன் மூலம் நிறைவேற்றி இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் நீண்டநாள் கோரிக்கை யான சேது சமுத்திரம் துறைமுகத் திட்டத்தை அமுல்படுத்துவது பற்றிய அறிவிப்பையும் நிதி அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

ஆரம்பக் கல்வியை அடிப்படை உரிமையாக்கி சட்டமியற்றிய தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சி, கல்வி வளர்ச்சிக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இந்த நிலையில், மத்திய அரசுக்கு வரக்கூடிய வரி வருவாய் அனைத்திலும் கல்விக்காக 2 சதவீதம் வரி விதிக்கும் ஒரு நல்ல திட்டத்தை, 'குறைந்தபட்ச வேலைத் திட்டம்' கூறுகிறது. அதற்கு நிதி நிலை அறிக்கையில் செயல்வடிவம் கொடுத்திருக்கிறார் நிதி அமைச்சர். இதன் மூலம் – ஒரு ஆண்டுக்கு ரூ.4000 முதல் 5000 கோடி வரை வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உலக மயமாக்கல் என்னும் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கையினால் கல்வி வர்த்தகமாகி வரும் நிலையில், அதற்கு மாற்றாக, மேற் கொள்ளப் பட்டுள்ள இந்த நடவடிக்கை, சமூகக் கண்ணோட்டத்தில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனாலும், கல்வி – முழுமையாக மாநில அரசின் உரிமைப் பட்டியலில் மீண்டும் இடம்பெறச் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். 1976ல் கல்வி, மாநில உரிமைப் பட்டியலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

நிதிநிலை அறிக்கையில் இராணுவத்துக்காக ஒதுக்கப் பட்ட தொகை மட்டும் ரூ.77,000 கோடி. இராணுவத் துக்கான ஒதுக்கீட்டைக் கணிசமாகக் குறைத்தால், மக்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு தாராளமாக நிதி ஒதுக்கீடுகளை செய்ய முடியும். உலக அளவில் ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் இருக்கிறது என்பது வேதனைக்குரிய செய்தியாகும்.

மைனாரிட்டி சமுதாயத்தினரான முஸ்லிம்கள் கல்வி வேலை வாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் இல்லாததை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், மைனாரிட்டி வளர்ச்சி தேசிய ஆணையத்துக்கு, இந்த நிதி நிலை அறிக்கையில் ரூ.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மைனாரிட்டி சமுகப் பிரதிநிதிகள், இதை மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளனர். கந்துவட்டியால் கடும் பாதிப்புக்குள்ளாகி வரும் விவசாயிகளைக் காப்பாற்ற, ஒரு லட்சம் கோடி விவசாயக் கடனுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதோடு, ஒவ்வொரு வங்கிக் கிளையும் 100 புதிய விவசாயிகளுக்கு கடன் தர வேண்டும் என்று நிதியமைச்சர் இலக்கையும் நிர்ணயித்திருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இந்தத் திட்டங்களை செயல்படுத்தப்படுவது தான் மிகவும் முக்கியம்.

ஆனாலும், தொலை தொடர்புத் துறை, விமானப் போக்குவரத்து மற்றும் இன்சூரன்ஸ் துறைகளில் அன்னிய முதலீட்டை நிதி அமைச்சர் அதிகரித்துள்ளது ஏற்க முடியாததாகும். இது தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சிகள் காட்டும் எதிர்ப்பில் நியாயம் இருக்கிறது என்பது நமது உறுதியான கருத்து. உலகில் எந்த ஒரு நாட்டிலும், தொலைத் தொடர்புத் துறையில் 25 சதவீதத்துக்கு மேல் அன்னிய முதலீடு அனுமதிக்கப்படாதபோது, இங்கே 49 சதவீதத்தி லிருந்து 74 சதவீதத்துக்கு நிதியமைச்சர் அறிவித்திருப்பதில் எந்த நியாயமும் இல்லை. அதேபோல் அரசுக்கு நல்ல வருவாயைத் தந்து கொண்டிருக்கும் இன்சூரன்ஸ் துறையில் அன்னிய முதலீட்டை அனுமதிக்க வேண்டிய 'நிர்ப்பந்தம்' என்ன வந்தது?

லாபம் தரும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்கமாட்டோம் என்ற உறுதிமொழி இதன் மூலம் காற்றில் பறந்து விட்டது; நிதியமைச்சர், இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

## கடவுள் மறுப்பாளனை எரித்த பார்ப்பனர்கள்

**(இந்திய வரலாற்றில் பகவத் கீதை நூல் பற்றிய நூலின் சுருக்கமான உள்ளடக்கம் - ஜூலை 1 தொடர்ச்சி)**

- 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' நூலின் இரண்டாவது பகுதி - பகவத் கீதையின் உள்ளடகத்தை விரிவாக அலசுகிறது. கீதையின் முரண்பாடுகளையும், வர்ணாஸ்ரமக் கோட்பாடுகளையும் ஆதாரங்களோடு எடுத்துக் காட்டுகிறது. கீதை நாத்திகர்களை அழித்தொழிக்க வேண்டும் என்று கூறுகிறது. 'நாத்திகர்களுக்கு எதிரான போர்' என்று - நூலாசிரியர் ஒரு தனி அத்தியாயத்தையே எழுதியிருக்கிறார்.
- "கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்று பெரியார் கூறிய கருத்துகள் - தங்களைப் புண்படுத்துவதாகப் பார்ப்பனர்கள் கூக்குரலிடுவது வாடிக்கையாக இருக்கிறது. ஆனால், கீதையில் "வேதாந்தங்களை"த்தவிர (பார்ப்பனிய கருத்துகள்) மற்றக் கருத்துகளைப் பின்பற்றுகிறவர்களுக்கு, தந்துள்ள பட்டங்கள் - படுமோசமானவை. துஷ்கருமன் (தீம்பு செய்பவன்), நர ஆத்மா (கீழ்மகன்), ஹதஞானம் (செத்த அறிவு), அல்பமேதாவி (அறிவு கெட்டவன்), அபுத்துவன் (அறிவில்லாதவன்), நஷ்டன் (அழிந்து போனவன்), அசேதனன் (மூளையற்றவன்), சத்ய ஆத்மா (சந்தேகப் பிராணி), கடவுள் மறுப்பாளர்களுக்கு - கிருஷ்ணன் வழங்கியுள்ள பட்டங்கள் என்ன தெரியுமா? நஷ்டாத்துமா (அழிந்துபட்ட ஆத்மா), இடம்பமான் (இடம்பம் பேசுபவன்), மதன வித்தன் (அகந்தையானவன்), அசுரன், ராட்சசன், கடவுள் மறுபபாளர்களை விளிக்கும் போதெல்லாம், இதே சொற்களையே கிருஷ்ணன் பயன்படுத்துகிறான்.
- அரசதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள் - ஒரு இயக்கமாக செயல்பட்டதால் தான் பார்ப்பனர்கள், ஆதிக்க நிலை ஆட்டம் கண்டது என்பதை 'கிருஷ்ணன்' நன்றாகவே உணர்ந்திருந்தான். எனவே பார்ப்பனியம் பாதுகாப்புடன் நீடிக்க வேண்டுமானால் சத்திரியர்கள் ஒற்றுமைக்கு முடிவு கட்ட வேண்டும், என்றும், அவர்களின் போரிடும் ஆற்றலை மழுங்கடிக்க வேண்டும் என்றும் திட்டமிட்டான். இதற்கு நல்வாய்ப்பாக கிருஷ்ணன் மகாபாரதப் போரைப் பயன்படுத்திக் கொண்டான் என்கிறார் நூலாசிரியர்.
- போரில் வெற்றி பெற்று, பாண்டவர்கள் தலைநகருக்குத் திரும்பும்போது அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றது பார்ப்பனர்கள் தான். பாண்டவர்களின் குலத்தினரோ, போரில் உயிரிழந்த குடும்பத்தைச் சார்ந்தவர்களோ அல்ல; பார்ப்பனக் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு சார்வாகன் (கடவுள் மறுப்பாளன்) யுதிஷ்டிரனைப் பார்த்து, "உற்றார் உறவினரைக் கொன்று அழித்து என்ன பயன் கண்டாய்?" என்று கோபத்துடன் கேட்கிறான் யுதிஷ்டிரன், தலைகுனிந்து நின்றான்; உடனே உயிரை மாய்த்துக் கொள்ளவும் துணிந்தான். உடனே கூடியிருந்த பார்ப்பனர்கள், "அவன் ஒரு அசுரன், கவலைப் படாதீர்கள்" என்று யுதிஷ்டிரனுக்கு ஆறுதல் கூறினர்; உடனே சார்வாகனைப் பார்ப்பனர்கள் பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டார்கள் என்று மகாபாரதம் கூறுகிறது.
- பாரதப் போரினால் கிருஷ்ணனின் வஞ்சகத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறின. பார்ப்பனர்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்றார்கள். மரணப் படுக்கையிலிருந்த பீஷ்மன், வெற்றி வேந்தனாகிய யுதிஷ்டிரனுக்கு, கூறும் அறிவுரையே இதற்கு சரியான சான்று:

  "பார்ப்பனர்களுக்கு பிரம்மதானம் கொடுப்பதே வேந்தனுக்கு அழகு. பார்ப்பனர்களுக்கு அளிக்கும் தானம் அசுவமேத யாகத்தைவிட சிறந்தது. பார்ப்பனர்களுக்கு இவ்வாறு தானம் செய்வதன் மூலம் - சத்திரியன் சொர்க்கத்தை அடைகிறான். பார்ப்பனர்களுக்கும், கடவுள்களுக்கும் மட்டுமே நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும். பார்ப்பனர்களிடமிருந்து நிலங்களைப் பறிப்பது மன்னிக்க முடியாத குற்றம். தவறிக்கூடப் பார்ப்பனரைத் தண்டிக்காதே. பார்ப்பனர்கள்தான் மனிதரில் உயர்ந்தவர்கள். நீரிலிருந்து நெருப்பு பிறக்கிறது. பார்ப்பனரிலிருந்து சத்திரியன் பிறக்கிறான். பாறையிலிருந்து இரும்பு உண்டாகிறது. இரும்பு பாறையை வெட்டும் போதும், நீர் நெருப்பை அணைக்கும் போதும் பார்ப்பனனுக்கு சத்திரியன் பகைவன் ஆகிறான். அதன் பின் அவர்கள் முகமிழந்து அழிந்து போகிறார்கள். பார்ப்பனர்களுக்குச் சமமாகத் தங்களைக் கூறிக் கொள்கிறவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசனனது கடமை." (மேற்கோள் ஆதாரம்: எம்.என்.ராய் எழுதிய மெட்டிரியலிசம்)
- "ஆத்மா அழிவற்றது; எனவே கொலை செய்வது பாவமல்ல" என்று படுகொலையை நியாயப்படுத்துகிறான் கிருஷ்ணன். (காந்தியைக் கொன்ற பார்ப்பான் கோட்சே, நீதிமன்றத்தில் தந்த வாக்கு மூலத்தில், தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க, கீதையின் இந்தக் கருத்தைத்தான் எடுத்துக்காட்டினான்). கிருஷ்ணனின் இந்தக் கருத்துக்கு, திலகர், டாக்டர் ராதாகிருஷ்ணன், சித்பவானந்தர் போன்ற பார்ப்பன விளக்க உரையாளர்கள் முட்டுக் கொடுக்கும் விளக்கங்களை முன் வைத்து நியாயப்படுத்துகிறார்கள்.
- கீதைக்கு உரை எழுதியதில் - கேரளத்தில் பிறந்த நம்பூதிரிப் பார்ப்பனரான சங்கரரும் ஒருவர். அவர் நிறுவியவை தான் சங்கர மடங்கள். சங்கரர் 32வது வயதில் இறந்து விட்டார். அவர் வாழ்ந்த காலத்தில் பவுத்தம் முழுமையாக அழிந்துவிடவும் இல்லை; இந்தியாவை விட்டு வெளியேறவும் இல்லை. அந்த நிலையில், பவுத்தத்தை முற்றிலுமாக துடைத்தெறிய வேண்டும் என்பதே பார்ப்பனர் சங்கரன் நோக்கமாக இருந்தது.

(தொடரும்)

## கலந்துரையாடல் கூட்டங்களின் எழுச்சி

**பெரம்பலூர்**

பெரம்பலூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 5.7.2004 மாலை 3.30 மணிக்கு பெரம்பலூர் சோழா அரங்கத்தில், கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி தலைமையிலும், மாவட்ட அமைப்பாளர் தோழர் இலட்சுமணன் முன்னிலையிலும் நடைபெற்றது.

களப்பணி ஒருங்கிணைப்பாளர் தோழர் தாமரைக் கண்ணன் சுற்றுப்பயண நோக்ங்களை விளக்கினார். தொடர்ந்து தோழர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இறுதியாக கழகத் தலைவர் உரையாற்றினார். பெரியாரின் முழுமையான கருத்துக்கள் அடங்கிய தொகுப்புக்கள் வெளியே வராமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அவரது பேச்சுக்கள், எழுத்துக்கள் வெளியே கொண்டு வர வேண்டிய அவசியம் பற்றி விரிவாக உரையாற்றினார்.

ஆர்.எஸ்.எஸ். பற்றிய பார்ப்பனிய வரலாற்றை முதன் முதலாக தமிழில் அம்பலப் படுத்திய நூல் - விடுதலை இராசேந்திரன் எழுதிய ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்; அதனைத் தொடர்ந்து, ஆர்.எஸ்.எஸ். கிளை அமைப்புகளை அம்பலப்படுத்தி - சங்பரிவாரின் சதி வரலாறு எனும் நூலை அவர் எழுதியுள்ளார்; கழகச் சார்பில் அதை வெளியிட்டுள்ளோம். அந் நூலை மக்களிடத்திலே கொண்டு செல்ல தோழர்களின் ஒத்துழைப்பு தேவை என்பதையும் கூறி மிகச்சிறப்பானதொரு உரை நிகழ்த்தினார். தோழர் சங்கர் நன்றி கூறினார். கூட்டத்தில் தாமோதரன், பன்னீர் செல்வம், கற்பனை பித்தன், ஆசிரியர் வரதராசன், கார்த்திகேயன், வேல் முருகன், மணிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**பொள்ளாச்சி**

கோவை தெற்கு மாவட்டக் கழக உறுப்பினர்கள், பொறுப்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# ‘கோட்’ போடுகிறார் ‘கோபால்ஜி’

ஜெயலலிதா - மதமாற்றத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெற்றதை எதிர்த்து, இராம.கோபாலன் கோயில் கோயிலாகப் போய்க் கொண்டிருக்கிறாராம். கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் - இந்த சட்டத்துக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்கிறாராம். அவர் போட்டிருக்கும் சட்டைக்கு மேலே மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுல்படுத்து என்று வாசகங்கள் எழுதிய ‘கோட்’ ஒன்றை அணிந்து கொண்டு,பிரச்சாரம் செய்கிறார். இந்துக்கள் மதம் மாறுவதைச் சட்டம் போட்டு, தண்டனை கொடுத்துத் தடுக்க வேண்டும் என்று ஊர் ஊராக ‘பிரச்சார யாத்திரை’ போகும் ராமகோபாலன் அப்படியே கண்டதேவிக்கும் போனால் என்ன? அங்கே நீதிமன்றத் தீர்ப்புகளையும் மதிக்காமல், ஆதிக்க சாதி ‘இந்து’ - ‘தலித் இந்து’வைத் தேர்வடம் பிடிக்கக் கூடாது என்று, கலவரத்தில் இறங்குவதைக் கண்டித்தால் என்ன? காஞ்சி ‘ஏகாம்பர நாதர்’ கோயில் கர்ப்பகிரகத்தில் ஒரு ‘சூத்திர’ இளைஞர் நுழைந்துவிட்டார் என்பதால், அவரை நய்யப்புடைத்து, பார்ப்பன அர்ச்சகர்கள் ‘சூத்திரத் தீட்டை’ விரட்டி, ‘பரிகாரங்களை’ச் செய்துள்ளார்களே! இது ‘கோபால்ஜி’க்குத் தெரியாதா?

இந்துக்கள், இந்துமதத்தை விட்டு வெளியேறக் கூடாது என்று கூறும் ‘ஜி’, ‘இந்துக்களை’ தேர்வடம் பிடிப்பதிலிருந்தும், கர்ப்பக் கிரகத்துக்குள்ளிருந்தும் வெளியேற்றக் கூடாது என்று வலியுறுத்தாமல் பதுங்குவது ஏன்? ‘கிடுக்கிப் பிடி’ போட்டால், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவதை நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்று கூறும் ‘கோபால்ஜி’கள், அதற்காக தந்தை பெரியார் திராவிடர் கழகம் காஞ்சிபுரத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய போது, வாயில் பிளாஸ்திரியைப் போட்டு ஒட்டிக் கொண்டது ஏன்? அண்மையில் வீரமணியார் தலைமையிலான திராவிடர் கழகம்கூட இதே கோரிக்கையை வலியுறுத்தி, அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது. வரவேற்கத்தக்க நடவடிக்கை. திராவிடர் கழகத்தின் சுவரெழுத்துக்கள் இந்த “ஆர்ப்பாட்டத்தை” ‘தமிழர் தன்மான மீட்புப் போர்’ எனறு வர்ணிக்கின்றன. கோயில் கோயிலாகப் போகும் இராமகோபாலன் - இந்தப் ‘போரைப்’ பற்றி வாயை மூடிக் கொண்டிருப்பது ஏன்?

இவைகளோடு இன்னும் சில கேள்விகளையும் ‘கோபால்ஜி’யிடம் நாம் கேட்க வேண்டியிருக்கிறது. மதப்பிரச்சினைகளில் அரசின் தலையீடு கூடவே கூடாது என்று ‘முழங்கி’ வரும் ‘இராமகோபால்ஜி’, இப்போது, மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு அரசிடம் ஏன் கோரிக்கை வைக்கிறார்?

வேதங்களை நடத்தி - யாகங்களை நடத்தினால், ‘வறட்சி போகும்’, ‘உலக அமைதி தழைக்கும்’ என்றெல்லாம் வேதத்தின் சக்தியைப் பீற்றிக் கொள்ளும் இவர்கள் - மதமாற்றத் தடைச் சட்டத்தை யாகம் நடத்தி கொண்டுவர முயற்சிக் காதது ஏன்? கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் வேண்டுகோள் வைக்கும் கோபால்ஜி, கோயிலுக்குள் ‘கர்ப்பக்கிரகத்துக்குள்’ வேதமந்திர சக்தியோடு ‘தீட்டுப்படாமல்’ காப்பாற்றப்பட்டு வரும் ‘பகவான்களிடம்’ கோரிக்கை வைத்து, அர்ச்சனை செய்யாதது ஏன்?

இதைக் கேட்டால், “இதெல்லாம், நடக்கக் கூடியதா, என்ன விவரம் தெரியாமல் பேசுறீங்க. இதற்கெல்லாம் ஆண்டவனையும் யாகத்தையும் நம்புவதற்கு, நாங்கள் ஏமாளிகளா, என்ன?” என்று ‘கோபால்ஜி’ பளிச்சென்று பதில் சொல்லிவிடுவார். ‘ஆண்டவனையும் யாகங்களையும் நீங்களே அவமதிக்கலாமா?’ என்று கேட்டால், “நாங்கள் எதையும் செய்வோம்; இவைகள் எல்லாம் எங்களின் கண்டுபிடிப்புகள் என்பது உமக்குத் தெரியாதோ?” என்று அதற்கும் கோபால்ஜி - கோபம் கொப்பளிக்கப் பதிலளித்து விடுவார். இந்த வாதங்களில் எல்லாம், நாம் ‘கோபால்ஜி’யிடம் வெற்றி பெற முடியாது என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனாலும்கூட கடைசியாக, ‘அண்ணா கோபால்ஜிக்கு’ அடியேனின் ஒரு அன்பான விண்ணப்பம். உங்களின் கோட்டு சட்டை இரண்டுக்கும் கீழே உடலோடு ஒட்டிக் கிடக்கும் ‘பூணூலை’யும் கோட்டுக்கு மேல் இழுத்துப் போட்டுக் கொள்ளலாமே! “நாம் எல்லோரும் இந்துக்கள்; ஆனாலும் நாங்கள் மட்டும் ‘பிராமணர்கள்’; நீங்கள் எல்லாம் சூத்திரர்கள் தான். இதுவே இந்து தர்மம்; இதைக் காப்பாற்ற ஓடி வாருங்கள்” என்று ‘சூத்திர’ பக்தர்களுக்கு அழைப்பு விடுத்துப் பாருங்களேன்! பெரிதாக, என்ன நடந்துவிடப் போகிறது?

‘வீரத் துறவி’ - வீரத்துடன் களமிறங்கவேண்டும் அல்லவா? என்ன, கோபால்ஜி?

**- கோடங்குடி மாரிமுத்து**

# உரத்த சிந்தனைகளை எழுப்பிய ஒட்டன்சத்திரம் குடும்ப விழா

திண்டுக்கல் மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்களின் குடும்பத்தினர் பங்கேற்கும் குடும்ப விழா ஜூன் 26ம் தேதி ஒட்டன் சத்திரத்தில் பிற்பகல் 2 மணியளவில் துவங்கியது. கழகத் தோழர்கள் தங்கள் துணைவியார் குழந்தைகளுடன் வந்திருந்தனர். இந்தக் குடும்ப விழாக்களை இனி எப்படி நடத்தலாம் என்பது குறித்து தோழர்கள் பலரும் கருத்து தெரிவித்தனர். கழகக் குடும்பங்களுக்குள் ஒருங்கிணைப்பை உருவாக்கி - சாதி ஒழிப்பு எனும் இலக்கை நோக்கி பயணமாவதற்கும், இதில், பெரியாரிய சிந்தனையை ஏற்றுள்ள பிற இயக்கத்தினரை பங்கெடுக்கச் செய்வதற்கும் இந்தக் குடும்ப விழாவைப் பயன்படுத்த வேண்டும் என்று தோழர்கள் தாமரைக் கண்ணன், ஜவஹர், முருகானந்தம் ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர். தி.மு.க.வைச் சார்ந்த தோழர்கள் மோகன், வெள்ளைச்சாமி, ஜனதா தளம் கட்சியைத் சார்ந்த சுப்ரமணி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பெருமாள்சாமி, மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் சின்ன கருப்பன், தோழர்கள் விஜி, ஜாக்குலின், சேசு மேரி, ஆல்பர்ட், திருமூர்த்தி, வழக்கறிஞர் ஜெயராஜ், சக்களப்பட்டி சக்திவேலு, புரட்சிக் கொடி, நிர்மலா உட்படப் பலரும், பகுத்தறிவு சிந்தனையில் குழந்தை வளர்ப்பு - குடும்பச் சிக்கல்களை எதிர் கொள்வது - சாதி மறுப்பு - பகுத்தறிவு - தாலி போன்ற பிரச்சினைகள் பற்றி கருத்துகளை எடுத்துரைத்தனர்.

மதுரை தோழர் ஓவியா சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் சில முக்கிய விவாதஙகளைத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சி - ஒரு சொற்பொழிவு நிகழ்ச்சியாக மாறிவிடாமல், நாம் அனைவரும் பங்கேற்கும் கலந்துரையாடலாக மாற வேண்டும். அதற்கான தேவை இருக்கிறது. நம்முடைய வாழ்க்கை பற்றிய சுயவிமர்சனங்கள் கட்டாயமாக வேண்டும் என்று கூறிய ஓவியா, சில கேள்விகளை முன் வைத்தார். பெரியார் உருவாக்கிய திராவிடர் இயக்கத்தின் மரபுகளில் தமிழ்ப் பெயர் சூட்டுவது முக்கிய இடம் பெற்றிருந்தது. தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தாலே, அது திராவிடர் இயக்கத்தின் அடையாளமாக இருந்தது. அத்தகைய தமிழ்ப் பெயரை சூட்டிக் கொண்டவர்கள். இன்று திராவிடர் இயக்கக் கொள்கைகளுக்கு எதிரான முகாம்களில் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த முரண்பாட்டுக்கு என்ன காரணம்?

தனி வாழ்க்கையில் சில தோல்விகளை சந்தித்த பிறகு, கொள்கை ரீதியான இயக்க வாழ்விலிருந்து விலகிப் போகும் போக்கு அதிகரிப்பது ஏன்? இவைகளைப் பற்றி எல்லாம் நாம் கலந்துரையாடி விவாதிக்க வேண்டும் என்றார் ஓவியா. சாதியத்தையும், சம்பிரதாயங்களையும் ஏற்றுக் கொண்டவர்கள் என்ன தவறை செய்தாலும் இந்த சமூகம் ஏற்றுக் கொள்ளும் நிலையில், இதையும் மீறி சாதியை விட்டு வெளியே வர நாம் என்ன செய்யப் போகிறோம்; நாம் நமது இயக்கத்தையே சமூகமாக்கிக் கொள்ளும் வாழ்க்கை முறைக்கு வரவேண்டும் என்று கருதுகிறேன். அதே நேரத்தில், இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நீங்கள் வாழும் வாழ்க்கை உங்களுக்கு அர்த்தமுள்ள வாழ்க்கையாக இருக்கிறதா? பெண்களாகிய நீங்கள், எங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறீர்கள் என்ற கேள்விகளை தோழர் ஓவியா முன் வைத்தார்; இதற்கு பதிலளித்துப் பேசிய பெண் தோழர்கள் - பலரும் இந்தக் கொள்கை வாழ்க்கை தங்களுக்கு மன நிறைவைத் தருவதாகச் சான்றுகளுடன் எடுத்துரைத்தனர்.

தாலியைப் பற்றியும், கடவுள் நம்பிக்கைப் பற்றியும் விவாதங்கள் எழுந்தன. தாலி அணிய மறுத்ததால், குடும்பத்திலும், உறவினர்களிடையேயும் சந்தித்த எதிர்ப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். “திருமணத்துக்கு முன் - நான் கடவுள் நம்பிக்கையாளராகவே இருந்தேன். எனது கணவர், பெரியாரியல்வாதி; ஆனாலும் என்னை அவர் கட்டாயப்படுத்தவில்லை. கருத்துகளை எடுத்துச் சொல்வார். பிறகு எனக்கே இவைகளில் நம்பிக்கை போய்விட்டது; முன்பெல்லாம் கோயிலுக்குப் போனால் கையைக் கும்பிட்டு நிற்கும் நான், இப்போது உறவினர்களுடன் கோயிலுக்குப் போனால், கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டுதான் நிற்கிறேன். இயற்கையாகவே எனக்கு இந்த சிந்தனை வந்துவிட்டது” என்றார் தோழர் நிர்மலா.

“நான் இப்போதும் தாலியை அணிந்து கொண்டிருக்கிறேன்; இதை அகற்றிவிடலாம். ஆனால், சுற்றி இருக்கும் பழமைவாதிகளுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமே என்பதால், அணிந்து கொண்டிருக்கிறேன்” என்று தன்னிலையை விளக்கினார் ஒரு தோழர். தாலி இல்லாத திருமணம் செய்து கொண்டு, வாழ்க்கையில் பெண்களை அடிமையாக நடத்தும் இரட்டை வாழ்க்கை முறைகள் பற்றியும் விவாதங்கள் எழுந்தன. பெண்ணுரிமைக்கு ஆதரவாக இருக்கும் ஆண்கள்கூட, இந்த உரிமை

(4ம் பக்கம்)

# கட்டை விரலையல்ல.. கடைசி...

- உதய சங்கர் -

எங்கள் கட்டைவிரலை
மட்டுமல்ல
கையையே வேண்டுமானாலும்
வெட்டிக் கொள்ளுங்கள் அய்யா.
ஆனால் ஒரு வேண்டுகோள்.
வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும்
கண்ணி வெடிகளைப்
புதைத்து வைத்த
உங்கள் மனுவை
ஒரேயொருநாள் மட்டும்
எங்களிடம் தாருங்கள் அய்யா
ஒரேயொரு தடவை மட்டும்
ஈயத்தைக் காய்ச்சி
அவன் காதில் ஊற்றிவிட்டு
வேதபாராயணம்
செய்யும்படி சொல்ல வேண்டும்.

ஒரேயொரு தடவை மட்டும்
நந்தனை எரித்த
தீயின் மிச்சத்தில்
அவனைக் கருகவிட்டு
கடவுளுடன்
ஜோதியில் ஐக்கியமாகச்
சொல்ல வேண்டும்.

ஒரேயொரு தடவை மட்டும்
இறந்த மாட்டின் தோலை
உரித்ததற்காய்
கற்களின் கருணைமிக்க
வேதனையில் அவன்
துடித்து இறந்த மாட்டுடன்
சொர்க்கம் ஏகச் சொல்ல வேண்டும்.

ஒரேயொருநாள் மட்டும்
உங்கள் மனுவை
எங்களிடம் தாருங்கள் அய்யா.
கண்களில் ஊசியேற்றி
காதுகளை அறுத்து
நாவைத் துண்டித்து
மூக்கை நறுக்கி
பீயைத் தின்னவைத்து
மூத்திரத்தைக் குடிக்க வைத்து
கல்லிலும் முள்ளிலும்
செருப்பின்றி நடக்க வைத்து
சிரட்டையில்
தண்ணீரும் டீயும் குடிக்கவைத்து
மானிடனாய்
இவ்வுலகில் பிறந்ததின்
பெரும்பயனை
அவன் அடைய வேண்டும்.

ஒரேயொருநாள் மட்டும்
உங்கள் மனுவை
எங்களிடம் தாருங்கள் அய்யா.
நீங்கள் தரமாட்டீர்கள்
அதிகார வெறியின்
கடைசித் துளிச் சுவை
உங்கள் இரத்தத்தில் ஓடும்வரை
ஒருபோதும்
நீங்கள் உங்கள் ‘மனு’வைத்
தொலைக்க மாட்டீர்கள்.
இப்போது
இதையும் கூடத் தெரிந்து
கொள்ளுங்கள்
இனி நீங்கள்
எங்கள் கட்டை விரலையல்ல
கடைசி மயிரைக்கூடப்
பிடுங்க முடியாதென்றும்
தெரிந்து கொள்ளுங்கள்.

**நன்றி: ‘வண்ணக் கதிர்’**

*(2 பக்கம் தொடர்ச்சி)*

*பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 26.6.04 சனியன்று மாலை 3 மணிக்கு பொள்ளாச்சி நேரு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை ஏற்று கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்தின் வளர்ச்சி பற்றியும், கழகத்தின் வெளியீடுகளின் விற்பனை குறித்தும், கழக அமைப்புகள் உருவாக்குதல் குறித்தும், கழக தலைமை நிலையத்திற்கான நிதி பற்றியும், தோழர் பத்ரி நாராயணன் குடும்ப நிதி பற்றியும் விரிவாகப் பேசினார். தொடர்ந்து தோழர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஆட்சிக் குழு உறுப்பினர் இரா. மனோகரன் முன்னிலையில் நடந்த கூட்டத்தில் கழக மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன் வரவேற்புப் பேசினார். தோழர்களின் கருத்துரைகளுக்குப் பின்னர் கழகத் தலைவர் நிறைவுரையாற்றினார். இறுதியில் கழக மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் தோழர் பிரகாசு நன்றி கூறினார்.*

*கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் 50 பெரியார் முழக்கத்திற்கான சந்தா ரூ.7500/-, 25 'குடிஅரசு' நூலுக்கான தொகை ரூ.2500 மும் கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொள்ளாச்சி நகர கழகச் செயலாளர் வெள்ளிங்கிரி உள்ளிட்ட தோழர்கள் சிறந்த முறையில் செய்திருந்தார்கள்.*

*கலந்துரையாடல் கூட்டத்தில், பொள்ளாச்சி நகரச் செயலாளர் வெ. வெள்ளிங்கிரி, பொள்ளாச்சி வட்ட கழகச் செயலாளர் கா.சு.நாகராசன், உடுமலை நகரத் தலைவர் யாழ் நடராசன், உடுமலை நகரச்செயலாளர் இரா. பாக்கிய நாதன்,உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசு, மடத்துக்குளம் ஒன்றிய செயலாளர் சு. சிவானந்தம், மடத்துகுளம் ஒன்றியப் பொருளாளர் நா.ப. கதிரவன், பொள்ளாச்சி நகர துணைச் செயலாளர் இராசேந்திரன், பகுத்தறிவாளர் கழக பொள்ளாச்சி நகர அமைப்பாளர் சி. விசயராகவன், பகுத்தறிவாளர் பேரவையின் மடத்துக்குளம் இரா.மோகன், மாவட்ட அமைப்பாளர் சின்னச்சாமி, கோட்டூர் ஆதித்தன், பெரிய போது சபரீசுவரன், கொமரலிங்கம் பீட்டர், கொழுமம் நாத்திகன் பாலு, மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் துரை. இராசேந்திரன், குடிமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் ம. முருகன், ருத்திராபாளையம் மயில்ராசு, காரத் தொழுவு மயில்சாமி, ஆனைமலை முருகானந்தம், ருக்மணி, மணிமொழி, கா.க. புதூர் சம்பத், குடிமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் ம. முருகன ஆகியோர் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.*

*தோழர்கள் பத்ரி நாராயணன் மேட்டூர் சரவணன் ஆகியோரின் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.*

*நிகழ்ச்சியில் மாவட்டத்திலிருந்து 50 தோழர்கள் கலந்து கொண்டனர்.*

# இயக்கத்தை சமூக உறவாக்குவோம்!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு எல்லைக்கு மேல் பெண்களுக்கு இருக்கக் கூடாது என்ற மனோபாவம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர் என்றும், ஆண்களைச் சார்ந்து வாழாத ஒரு நிலை உருவாகும் போதுதான், உண்மையான பெண் விடுதலையை எட்ட முடியும் என்றும் தோழர் ஓவியா குறிப்பிட்டார். சமையலறையில் ஆண்கள் பங்கெடுப்பு அதிகரிக்க வேண்டும் என்றும், குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைத் தடுக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் தவிர்க்க வேண்டும் என்றும், கருத்துகள் முன் வைக்கப்பட்டன.. பெரியாரிய சிந்தனைகளில் கடவுள் மறுப்பை மட்டும் தன்னால் ஏற்க முடியாமல் இருக்கிறது என்று ஒரு பெண் தோழர் குறிப்பிட்டார்.

"முதலில் மூன்று மாத காலம் - கடவுள் மத நம்பிக்கைகளுக்கு விடை கொடுத்துவிட்டு வாழ்ந்து பாருங்கள்; அதற்குப் பிறகு, நீங்கள் விரும்புகிற கொள்கையைத் தேர்வு செய்யுங்கள்" என்ற மாற்று யோசனையை விடுதலை இராசேந்திரன் முன் வைத்தார்.

பெரியாரியலை தனது வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்ந்து வருபவரும், கழகத்துக்கு பலவகையிலும் தொடர்ந்து உதவி வருபவருமான தி.மு.க.வைத் சார்ந்த தோழர் மோகன், தனது பகுத்தறிவு வாழ்க்கையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். கடவுள், மதம் பற்றிய சிந்தனைகளைத் திணிக்காமல், குழந்தைகளை வளர்ந்தேன்; அவர்கள் இயற்கையாகவே பகுத்தறிவாளர்களாக - தன்னம்பிக்கையாளராக வளர்ந்தனர்; எனது மகன் இப்போது ஒரு பொறியாளராக நல்ல பணியில் இருக்கிறார் என்று குறிப்பிட்ட மோகன், நமது குழந்தைகளை வைதீகத்தில் ஊறிப் போன மூத்த தலைமுறையினரின் பொறுப்பில் விடாமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம் என்றார்.

சடங்கு சம்பிரதாயங்கள் இல்லாத வாழ்க்கையைத் துவங்கிய பெண்கள் - பிறகு ஒரு கட்டத்தில் பொருள் வசதி பெருகிய பிறகு, நகைகளை அணிய வேண்டும், மேலும் வசதியான வாழ்க்கைக்குப் போக வேண்டும் என்ற சிந்தனைக்கு மாறி விடுவதையும், அப்போது பெரியார் கொள்கைகள், இயக்கம் என்றால் வேப்பங்காயாக அவர்களுக்கு கசக்கிறது என்றும் ஓவியா சுட்டிக் காட்டினார். பெரியாரியலை ஏற்றுக் கொண்டவர்கள் சொல் ஒன்று, செயல் ஒன்று என்ற இரட்டை வாழ்க்கை வாழக் கூடாது என்று வலியுறுத்தினார் தோழர் மோகன். விடுதலை இராசேந்திரன் - பெரியாரியலை வாழ்க்கை நெறியாக வளர்த்தெடுப்பது பற்றியும் எதிர் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் பற்றியும் பேசினார். தோழர் பெரியார் நம்பி, நிகழ்ச்சியின் தொகுப்பாளராக கலகலப்பான அறிமுகத்தை ஒவ்வொருவருக்கும் வழங்கினார். தோழர்கள் பலரும் ஆர்வத்துடன் விவாதங்களில் பங்கேற்று தங்களது கருத்துக்களை முன் வைத்துப் பேசினார். உளம் திறந்த கருத்துப் பரிமாற்றங்களாக அவைகள் இருந்தன.

மாவட்டத் தலைவர் சக்திவேல், மதிய உணவு மற்றும் இரவு உணவுடன் நிகழ்ச்சிக்கு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

**- நமது செய்தியாளர்**

## நெல்லை மாவட்டக் கழகத் தலைவர் இல்ல மணவிழா

6.6.04 நெல்லை மாவட்டக் கழகத் தலைவர் தோழர் அரியமுத்துவின் மகன் அ. குணசேகர்- மா. சைலஜா ஆகியோரின் இல்வாழ்க்கை ஏற்பு விழா திருச்சி என்.செல்வேந்திரன் தலைமையில் கோவை இராமகிருட்டிணன், பம்பாய் மாநிலம் தி.க. தலைவர் ஆர்.ஏ. சுப்பையா ஆகியோரின் வாழ்த்துகளோடு இனிதே நடைபெற்றது.

## அயன்புரத்தில் தெருமுனைக் கூட்டம்

*16.7.2004 வெள்ளி மாலை 6 மணிக்கு சென்னை, அயன்புரம், ஞானாம்பாள் தோட்டம் 1வது தெருவில், அயன்புரம் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில், 'தனியார் துறையில் இட ஒதுக்கீடு' என்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டம் நடைபெறுகிறது. கழக ஆட்சிக்குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் தமிழினியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*சேத்துப்பட்டு ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கருங்குழி கண்ணன், எ.கேசவன், சு. சண்முகம், சீ.மணிவண்ணன், நா.தினகரன், நா.பாஸ்கரன், சேத்துப்பட்டு ராஜன் பேச வீ.நாராயணன் நன்றி கூறுகிறார்.*

## பெரம்பலூர் கழகம் பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள்

*தந்தை பெரியார், பச்சைத் தமிழன் காமராசர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 5.7.04 மாலை 7 மணிக்கு பெரம்பலூர் மாவட்டம் கிருட்டிணாபுரத்தில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் தோழர் இரா. இலட்சுமணன் தலைமை தாங்கினார். தோழர்கள் துரை தாமோதரன், இரா. பன்னீர்செல்வம், இரா. சங்கர் முன்னிலை வகித்தனர். பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் மற்றும் குறிப்பேடு வழங்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை யாற்றினார். காமராசர் நிகழ்த்திய கல்விப் புரட்சி பற்றியும், அதற்கு அய்யா உறுதுணையாக இருந்த வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக் கூறி ஒரு மணிநேரத்திற்கு மேல் சிறப்பாக உரையாற்றினார்.*

*தாமோதரன் நன்றி கூறினார். கூட்டத்தில் பேராசிரியர் வேல்முருகன், கற்பனைப் பித்தன், இராஜ்குமார், முருகானந்தம், ரமேசு, மணிவேல், குமார், பிரபாகரன் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.*

## 'மனித குலமும் தமிழ்த் தேசியமும்' நூல் வெளியீடு

பொடாவில் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் இருந்த போது தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் எழுதிய புத்தகம் புதுவையில் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

பழ. நெடுமாறன் எழுதிய 'மனிதகுலமும் தமிழ்த் தேசியமும்' என்ற அந்த நூல் வெளியீட்டு விழாவில் அவர் கலந்து கொண்டார். நீதிமன்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர் விழாவில் பேசவில்லை.

இந்த நூலை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன் வெளியிட்டார். தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி பெற்றுக் கொண்டார்.

புதுவை மக்கள் உரிமை கூட்டமைப்பின் செயலர் கோ. சுகுமாரன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் புதுவைத் தலைவர் லோகு. அய்யப்பன், புதுவை தமிழ் வளர்ச்சி நடவடிக்கை குழுவின் சிறப்புத் தலைவர் முனைவர் இரா. திருமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
**தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. தொலைபேசி: 2451 2857, 2847 4830**

## மேட்டூரில் கழகம் வழங்கிய துண்டறிக்கைகள்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் கருவறைக்குள் நுழைந்த இளைஞரை பார்ப்பனர்கள் தாக்கி, கோயில் தீட்டுப்பட்டுவிட்டதாகக் கூறி தீட்டுக் கழித்ததைக் கண்டித்து 'பெரியார் முழக்கத்தில்' வெளிவந்த தலையங்கத்தை, மேட்டூர் ஆர்.எஸ். பகுதி கழகத் தோழர்கள், ஆயிரக்கணக்கில் துண்டறிக்கைகளாக அச்சிட்டு, பொது மக்களிடம் வழங்கினர்.

## தாசப்ப கவுண்டன் புதூரில் கழகத் தலைவர் பேசுகிறார்

*ஈரோடு மாவட்டம் - தாசப்ப கவுண்டன்புதூரில் வரும் 15-ம் தேதி - கழகப் பொதுக்கூட்டம் நடைபெற இருக்கிறது. தா.சி. தேவராசன் தலைமையில், வெங்கட்ராமன் முன்னிலையில் நடக்கும் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றுகிறார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் பங்கேற்கின்றனர்.*

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 15th July 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூலை 22, 2004 | புரட்சி 3 | முழக்கம் 28 | விலை : ரூ.2.50

# "குடந்தைக் கொடுமை"கள் தொடராதிருக்க கல்வி வணிகத்தைத் தடுத்து நிறுத்து!

# ஜூலை 24-ல் கழக சார்பில் ஆர்ப்பாட்டம்

# தோழர்களுக்கு கழகத் தலைவர் வேண்டுகோள்

**தோழர்களுக்கு - கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை**

*கழகத் தோழர்களுக்கு வணக்கம்!*

*குடந்தையில் - ஜூலை 16-ம் தேதி - 90 பள்ளிக் குழந்தைகள் தீயில் கருகி இறந்த செய்தி, நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. தாங்க முடியாத துயரம். எவ்வளவு வறுமை வாட்டினாலும், குழந்தைகளைப் படிக்க வைத்துவிட வேண்டும் என்ற உந்துதலோடு, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிய, சாதாரண ஏழைக் குடும்பத்தின் குழந்தைகள் அவர்கள். அரசு நிதி உதவி பெற்று நடந்து வந்த குடந்தை சரசுவதி பள்ளி - பாதுகாப்பு வசதிகள் ஏதுவுமின்றி மிக மோசமாக நடந்து வந்திருக்கிறது. கல்வித் துறையும், இதை அனுமதித்துள்ளது கடும் கண்டனத்துக்குரியது. அரசு கல்விக்காக செலவிடுவதை படிப்படியாக நிறுத்திக் கொண்டுவிட்டதால், கல்வியை வியாபாரிகள் கைப்பற்றிக் கொண்டு, வியாபாரம் நடத்த ஆரம்பித்துவிட்டனர். அதன் விளைவுகளைத்தான் குடந்தையில் பார்க்கிறோம். நடந்து கொண்டிருக்கும் அரசுப் பள்ளிகளிலும், அவலமான நிலைதான் நீடிக்கிறது. தமிழ்நாட்டில் பல ஆரம்பப் பள்ளிகள் மூடப்பட்டுவிட்டன. அடிப்படை வசதிகளே இல்லாமல் பல பள்ளிக்கூடங்கள் உள்ளன. இப்போது 14 குழந்தைகள் இறந்து போன நத்தம் கிராமத்திலே, ஒரு ஆரம்பப்பள்ளி இல்லை. அதனால்தான், அவர்கள் குடந்தைக்கு வேன் மூலம் தங்கள் குழந்தைகளை அனுப்பி படிக்க வைத்துள்ளனர்.*

*அதே நேரத்தில் கோயில்களைப் புதுப்பிக்கவும், குடமுழுக்குகள் நடத்தவும், அரசு ஆர்வம் காட்டுகிறது. எனவே அடிப்படைக் கல்வியையாவது, அரசாங்கமே முழு வசதிகளோடு, வழங்கவேண்டும். இது ஒரு அரசின் கட்டாயமான சமுதாயக் கடமை!*

*ஆரம்பக் கல்வியை அடிப்படை உரிமையாக்கி - மத்திய அரசு சட்டம் இயற்றியிருக்கிறது. அது ஏட்டுச்சுரைக் காயாக இருந்துவிடாமல் அமுலாக்க வேண்டிய பொறுப்பு மத்திய மாநில அரசுகளுக்கு இருக்கிறது!*

*90 குழந்தைகளைப் பலிக் கொடுத்த பிறகாவது இனியும் இந்தக் கொடுமைகள் தொடரக் கூடாது என்றால், அடிப்படைக் கல்வியை அரசே ஏற்று நடத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.*

*இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, கழக சார்பில் எதிர்வரும் 24ம் தேதி கீழ்க்கண்ட முழக்கங்களை முன் வைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு, கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.*

- *குடந்தைக் கொடுமைகள் தொடராதிருக்க - கல்வி வணிகத்தைத் தடுத்து நிறுத்து.*
- *அடிப்படைக் கல்வியை அரசே ஏற்றிடு.*
- *அரசுப் பள்ளிகளோ கீற்றுக் கொட்டகைகளில்!<br>ஆலயங்களுக்கு 'தங்கக் கூரையா?'<br>அடுக்கடுக்காகக் கும்பாபிஷேகமா?*
- *ஆரம்பக் கல்வி நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து*
- *மறுக்காதே; மறுக்காதே!<br>கிராமப் பள்ளிகளுக்கு அடிப் படை வசதியை மறுக்காதே!*
- *ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை பள்ளிகளில் குறைக்காதே!*
- *தரம் உயர்த்து தரம் உயர்த்து;<br>அரசுப் பள்ளிகளின் தரம் உயர்த்து!*

*- என்ற முழக்கங்களை முன் வைத்து அரசின் கவனத்தை ஈர்க்கவும் மக்களிடையே இந்தக் கருத்தைக் கொண்டு செல்வதுவுமே இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கம்.*

*இரங்கல் தெரிவித்து அமைதி ஊர்வலம் நடத்துவதைவிட - இனியும் இதுபோன்ற அவலங்கள் தொடராமல் தடுப்பதே முக்கியம் என்ற நோக்கத்துடனே இந்த ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்துகிறோம். இடையில் நாட்கள் குறைவு தான். சமுதாயக் கடமையாற்றத் தோழர்கள் உடன் செயலில் இறங்கிட வேண்டுகிறோம்.*

தோழமையுடன்

*சென்னை*<br>*19.7.2004*

*தா.செ. மணி.*

**குறிப்பு: ஒத்த கருத்துடைய அமைப்புகளையும் - மாணவர்களையும் - ஆசிரியர்களையும் தோழர்கள் இதில் இணைத்துக் கொள்ளலாம். முழக்கங்களை தட்டிகளில் எழுதி, துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து வழங்கலாம். ஊர்வலமாகச் சென்று, மாநில அலுவலகம் முன்போ அல்லது மக்கள் கவனத்தை ஈர்க்கும் இடத்திலோ ஆர்ப்பாட்டத்தை நடத்துங்கள். சுவரொட்டிகள் அடித்து, தட்டிகளில் எழுதி வைத்து விளம்பரப்படுத்துங்கள்.**

# தாரணிகாவின் இறுதி வேண்டுகோள்!

- *தீ விபத்தில் 90 குழந்தைகள் இறந்த பள்ளியில் - 13 ஆசிரியைகளும், தங்களை மட்டும் காப்பாற்றிக் கொண்டனர். அவர்கள் - காவல் துறையில் சரணடைந்துள்ளனர்.*
- *ஒரு கட்டிடத் தொழிலாளி - அய்ந்து குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளார். ஒரு கூலித் தொழிலாளி தனது குழந்தை இறந்துவிட்டது என்பதை அறிந்தும், ஏழு குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளார்.*
- *14 குழந்தைகளை இழந்து தவிக்கும் நத்தம் கிராமத்தைச் சார்ந்த மக்கள் மிகவும் ஏழைகள், கூலித் தொழிலாளிகள்; பல ஆண்டுகளாகக் கேட்டும், இக்கிராமத்தில், ஒரு ஆரம்பப்பள்ளிக் கூடத்தை தமிழக அரசு கட்டித்தரவில்லை. தினக்கூலித் தொழிலாளிகளான இக் கிராமத்தினர் மாதம் ரூ.30 பணம் கொடுத்து, வேன்களில் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பினர்.*
- *900 குழந்தைகளுக்கு 3 கழிப்பறைகள், பள்ளியில் ஒரே வழி; விளையாடுவதற்கு 100 மீட்டர் இடம் கூட கிடையாது; கல்வித் துறை அதிகாரிகள் - இந்த முறைகேடுகளை எல்லாம் அனுமதித்துள்ளார்கள்.*
- *தீயில் பாதிக்கப்பட்ட 9 வயது தாரணிகா என்ற பெண்ணை அவளின் சித்தப்பா, பள்ளிக்குள் புகுந்து வெளியே மீட்டு வந்து மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லும்போது, அந்தப் பெண் கூறினாள், "சித்தப்பா, என் தோழிகள் உள்ளே இருக்கிறார்கள்; அவர்களையும் காப்பாற்றுங்கள்". இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, தாரணிகா உயிரிழந்துவிட்டாள். ஆனாலும், தாரணிகாவின் கடைசி வேண்டுகோளை ஏற்று, ஓடிப் போய், சில மாணவிகளைக் காப்பாற்றியிருக்கிறார், அவள் சித்தப்பா.*
- *சென்ற ஆண்டு முதல் மார்க் வாங்கி, பரிசு பெற்ற புகைப்படத்தை, தனது குழந்தை ஐஸ்வர்யாவின் சடலத்தின் காலில் வைத்து அழுதார், அவரது தாய்.*
- *தம்பியைக் காப்பாற்றச் சென்ற அக்கா, தீயில் சிக்கி இறந்து விட்டாள். உயிர் பிழைத்துவிட்ட தம்பி, ஏதும் பேச இயலாதவனாய் அழுது கொண்டிருக்கிறான்.*
- *ஏராளமான ஆலயங்களை நமது மூதாதையர்கள் கட்டி வைத்துள்ளனர். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை அக் கோயில்களில் ஊர் கூடி குடமுழுக்கு நடத்தப்படுகிறது. பஞ்சம் ஏற்பட்டாலும் குடமுழுக்கை நிறுத்துவதுஇல்லை.*

(4ம் பக்கம்)

## கண்ணீர் வணக்கங்கள்

**பள்ளிக்கு அனுப்பிய பிள்ளைகளை**<br>**'கொள்ளி'க்கு அனுப்பிய கொள்ளைக்காரர்களே!**<br>**பெற்றோர்களிடம் பிடுங்கிய பணத்தில்**<br>**மாடி வீடு கட்டுகிறவர்களே!**<br>**குழந்தைக்கு கூரைவீடு கட்டி**<br>**இனியும் பாடைகட்ட வைக்காதீர்கள்!**<br>**கண்திறக்க வேண்டிய இடத்தில்**<br>**கண்மூடிய கண்மணிகளே!**<br>**உங்களுக்கு எங்கள் கண்ணீர் வணக்கங்கள்!**

**~ கவிஞர் அறிவுமதி**

தலையங்கம்

## ‘கோயில்’ நகரத்தில்...

‘மனுதர்மம்’ சுமத்திய மனித இழிவுகளிலிருந்து மானுடத்தை விடுவிக்க அனைவருக்கும் கல்வி என்ற சமூக நீதி முழக்கத்தை முழங்கியவர் தந்தை பெரியார். அந்த முழக்கம், வாழ்வியலின் அங்கமாகி, சமூகத்தின் முழு அங்கீகாரத்தையும் பெற்றுத் திகழுகிறது. அதனால்தான் சமூகத்தின் கடைக்கோடி நிலையில் வாழும் குடும்பம்கூட – தனது பிள்ளைகளுக்குக் கல்வித் தரவேண்டும் என்பதற்கே முன்னுரிமை தரும் மனப்போக்கை வரித்துக் கொண்டிருக்கிறது. பொருட்செல்வம் இல்லாத வறிய நிலையில் உழன்றாலும், குழந்தைகளுக்கு அறிவுச் செல்வத்தைப் புகட்டுவதை, வாழ்வின் தலையாயக் கடமையாகப் பேணும் பொதுப் பண்பு, தமிழ்ச் சமூகத்தின் பண்பாக மாறியிருக்கிறது.

அடக்கப்பட்ட மக்கள் – தங்களின் அடங்காத கல்வித் தாகத்தோடு, எதிர்காலக் கனவுகள் நிழலாட, சீருடை அணிவித்து, அன்பு முத்தமிட்டு, விடை கொடுத்து ஒவ்வொரு நாளும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வருகிறார்கள். மகிழ்ச்சியோடு விடைபெற்று துள்ளி ஓடிய அக்குழந்தைகள் தீயில் கருகி மடிந்து பிணங்களாக திரும்பி வரும் என்றால், யாரால் தான் சகிக்க முடியும்? குடந்தைக் கொடூரங்கள், மனித இதயங்களில் ரத்தத்தைக் கசிய வைத்து விட்டது!

ஒரு சமூகத்தின் நாகரீகத்துக்கு சரியான அளவுகோல், கல்வி தான்! எந்த ஒரு அரசும் அது மக்களுக்கானதாக இருக்குமானால், முன்னுரிமை தரப்பட வேண்டியது கல்விக்குத்தான்! ஆனால், ஒரு காலத்தில் கல்விப் புரட்சிக்கு வித்திட்ட தமிழ் நாட்டில் இன்று என்ன நிலை? அரசு, கல்விக்காக செலவிடுவதைக் கை கழுவிவிட்டது. பள்ளிக் கூடங்களுக்கு, தீப்பிடிக்காத கூறைகளைப் போடுவதைவிட கோயில் கோபுரங்களைப் பழுது பார்த்து, குடமுழுக்குகளை நடத்திப் பார்ப்பதற்குத்தான் இவர்கள் முனைப்போடு நிற்கிறார்கள். இப்படிக் கல்வியைத் தரவேண்டிய கடமையிலிருந்து அரசு விலகிக் கொண்டதால், வர்த்தகர்கள் கல்வியைத் தங்களின் வணிகப் பொருளாக்கிக் கொண்டனர். ஒரு காசும் செலவிடாமல், கல்வியைப் பெறமுடியும் என்ற காலம் மறைந்து போய், இப்போது ஒவ்வொரு குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில், பற்றாக்குறைக்கு வித்திட்டு வருகிறது, கூடுதல் கல்விச் செலவு! கல்வியை வர்த்தகமாக்கும் வியாபாரிகளோ, அடிப்படை வசதிகளைச் செய்வது இல்லை. அங்கே சரியான நூலகம் இல்லை; சோதனைச்சாலை இல்லை; ஆசிரியர்கள் இல்லை என்ற நிலை எல்லாம் கடந்து, இப்போது பாதுகாப்பே இல்லை என்ற நிலை வந்துவிட்டது. குடந்தைப் பள்ளிகளை விட மோசமான நிலையில் தமிழகம் முழுதும் ஏராளமான பள்ளிகள் இருக்கின்றன. கல்வித்துறையோ பெற வேண்டியதைப் பெற்றுக் கெண்டு, பச்சைக் கொடி காட்டுகிறது. தனியார் பள்ளிகள் மட்டுமல்ல, அரசுப் பள்ளிகளின் லட்சணமும் அப்படித்தான்!

பள்ளிகளுக்கு “சரசுவதி”, “கிருஷ்ணன்” என்று பெயர் சூட்டிக் கொண்டு ‘இந்து தர்மத்தின்’ காவலர்களாக வேடம் தரிப்பவர்கள், ‘அதர்மத்தின்’ புரவலர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் இரட்டை வேடத்தையும், வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது ‘கும்பகோணம்’ கொடுமை!

800 குழந்தைகளை கிடங்குகளில் அடைத்துக் கொண்டு, அதற்கு கல்விக் கடவுள் பெயரைச் சூட்டி விட்டால் மட்டும் போதுமா?

இந்த 90 கருகிய மொட்டுகளின் மீது – இந்த நாடு ஒரு சபதம் ஏற்கவேண்டும்! குறைந்தது – அடிப்படைக் கல்வியையாவது அனைவருக்கும் – ஆபத்தில்லாத, தரமான கல்வியைத் தர இந்த அரசுகள் முன் வரட்டும்!

ஒரு மூத்த சிந்தனையாளர் கூறியதுபோல் – இந்த விபத்து, சமுதாய உணர்வுக்கு, நாகரீக வளர்ச்சிக்கு, மனிதாபிமானப் பண்பாட்டுக்கு நிகழ்ந்துள்ள ஆபத்து! நாட்டின் தன்மானம் தலைகுனிந்து விட்டது!

செல்வங்களை இழந்து தவிக்கும் 90 குடும்பங்களின் துயரத்தை – தமிழ்ச் சமூகமே பகிர்ந்து கொள்வதாகவே உணருகிறோம்!

துயரங்களை வெளிப்படுத்த வார்த்தைகளின்றி தவிக்கிறோம்!

# மூடநம்பிக்கை மோசடிகளைத்தடுக்க மகாராஷ்டிராவில் தனிச் சட்டம்!

மத மூடநம்பிக்கைகளைக் கொண்டு, மக்களை ஏமாற்றுவோர் மீது, கடும் நடவடிக்கை எடுக்கத் தனிச்சட்டம் ஒன்று கொண்டுவரப்பட வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. இது தொடர்பாக - இப்போதுள்ள கிரிமினல் சட்டங்கள் போதுமானவையாக இல்லை. அதோடு, பக்தி மோசடிப் பேர்வழிகள் மீது, இந்தக் கிரிமினல் சட்டங்களைப் பயன்படுத்தி, ஆட்சியாளர்கள் நடவடிக்கையும் எடுப்பது இல்லை.

மகாராஷ்டிரா ஆட்சி, கடந்த 2003-ம் ஆண்டு ஜூலை மாதம் இது தொடர்பாக, மசோதா ஒன்றை சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியது. மதம் மற்றும் மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்தி, மக்களை ஏமாற்றும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்த தனிச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் பெயர் ‘மூடநம்பிக்கைத் தடுப்புச் சட்டம்’. இந்தத் தனிச்சட்டத்தை உருவாக்கித்தரும் பொறுப்பை மகாராஷ்டிராவின் மூடநம்பிக்கை ஒழிப்புக்குழுவிடம் (அந்தாஷ்ரதா நிர்மூலன் சமிதி) மாநில அரசு ஒப்படைத்திருந்தது.

இந்த அமைப்பின் தலைவராக இருக்கும் டாக்டர் நரேந்திரநாதபோல்கார் இப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை, நீண்டகாலமாக தமது அமைப்பு சார்பில் வலியுறுத்தி வருகிறார். ஆனால், மகாராஷ்டிரா மாநில சட்டமன்றம் நிறைவேற்றிய இந்த ‘மூடநம்பிக்கை எதிர்ப்பு மசோதாவுக்கு’ மத்தியில் ஆட்சியிலிருந்த தேசிய ஜனநாயக முன்னணி, ஒப்புதல் தராமல் கிடப்பில் போட்டு விட்டது. இந்த நிலையில் - இந்த மசோதாவில், சில திருத்தங்களை செய்து, மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியமின்றி, மாநில அரசே அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் கோவிந்தராவ் ஆதிக் கூறியுள்ளார்.

மூடநம்பிக்கை ஒழிப்புக் கமிட்டி, மாநில அரசின் வேண்டுகோளின்படி, மசோதாவில் அதற்கேற்ற திருத்தங்களையும் செய்து, மாநில அரசிடம் அளித்துள்ளது என்றும் சட்ட அமைச்சர் கூறியுள்ளார். ஆனாலும், மகாராஷ்டிராவில் தேர்தல் முடிந்து மீண்டும், சட்டமன்றம் கூடும் போதுதான், இந்த மசோதா மீண்டும் நிறைவேற்றப்படும் என்கிறார் சட்ட அமைச்சர். அதுவரை காத்திருக்க முடியாது, மகராஷ்டிராவில் அதிகரித்து வரும் சாமியார் மோசடிகளைத் தடுத்து நிறுத்த உடனடியாக சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நரேந்திநாத போல்கர் வலியுறுத்தியுள்ளார். ■

### டெல்லி தீர்ப்பாயத்தில் - நடுவர்கள் பரிந்துரை:

# பொடாவுக்கு மாற்றாக வேறு சட்டத்தைக் கொணரக் கூடாது

‘பொடா’ சட்டம் கொண்டு வரக் காரணமாக இருந்த அன்றைய சட்டத்துறை அமைச்சர் ராம்ஜெத்மலானி, இந்த சட்டம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதோடு, பொடாவைக் கொண்டு வரக் காரணமாக இருந்தமைக்காக மன்னிப்பைக் கோரியுள்ளார். மார்ச் 13, 14-2004ல், புதுடில்லியில் ‘பொடா’வால் பாதிக்கப்பட்டவர்கள் பங்கேற்ற மக்கள் நீதிமன்ற விசாரணை நடந்தது. முன்னாள் நீதிபதிகள், சிந்தனையாளர்கள், நடுவர்களாக இருந்தனர். இந்த மக்கள் மன்றத்தில் பாதிக்கப்பட்டோர் தந்த வாக்கு மூலங்கள் மற்றும் நடுவர்கள் கருத்துரைகளைத் தொகுத்து, மிகச் சிறந்த ஆவணமாக 629 பக்கங்களுடன் இப்போது நூலாக வெளி வந்துள்ளது. இந்த மக்கள் விசாரணை நிகழ்வில் கழகச் சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டார்.

கடந்த ஜூலை 15ம் தேதி புதுடில்லியில் இந்த நூலை வெளியிட்டார் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் ராம்ஜெத்மலானி. மக்கள் மன்ற விசாரணையில் நீதிபதிகளில் ஒருவராக அவரும் செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நாளில், இந்த ஆவணத்தை சென்னையில் மூத்த வழக்கறிஞர் சந்துரு வெளியிட, பழ. நெடுமாறன் ஏற்றுக் கொண்டார். சென்னை பத்திரிகையாளர் சங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு பொடாவில் கைதான சுப.வீரபாண்டியன், சாகுல் அமீது மற்றும் வழக்கறிஞர் கீதா, தேவா (பிப்பிள்ஸ் வாட்ச்), கி.தா. பச்சையப்பன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். புதுடில்லியில் செயல்படும் மனித உரிமை சட்ட ஒருங்கிணைப்புக்குழு; மதுரையில் செயல்படும் மக்கள் கண்காணிப்பகம் ஆகிய இரண்டு அமைப்புகளும் இந்த நூலை வெளியிட்டுள்ளன. ‘பொடா’ பற்றிய முழுமையான தகவல் களஞ்சியமாக மிளிர்கிறது, இந்த ஆவணம்.

பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தத் தீர்ப்பாய நடுவர்கள் பரிந்துரைத்துள்ளதோடு, பொடாவில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களை, சாதாரண சட்டத்தின் கீழ் நடைபெறும் எந்த விசாரணைக்கும் பயன்படுத்தாமல் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். நடுவர் குழுவினரின் வேறு சில பரிந்துரைகள்: அய்.நாவின் சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தை, இந்தியா ஏற்று, செயல்படவேண்டும். காவல்துறையினர் மீதான புகார்களை விசாரிக்க, குடிமக்களைக் கொண்ட உயர்மட்டக்குழு அமைக்கப்பட வேண்டும். வடகிழக்கு மாநிலங்களுக்கான இராணுவச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும். பொடாவில் கைதானவர்கள் பிணையில் வெளி வந்துள்ளபோது அவர்கள் பேச்சுரிமைக்கு உயர்நீதிமன்றங்கள் வாய்ப்பூட்டுப் போடுவது, சட்டப்படி செல்லத் தக்கதல்ல, தீவிரவாதம் தடுக்கப்பட, காவல்துறை சீர்திருத்தப்பட வேண்டும்.

பொடாவைத் திரும்பப் பெறும்போது, அதற்கு மாற்றாக வேறு சட்டம் இடம்பெறக் கூடாது. 55 ஆண்டுகளுக்குப் பிறகும் காஷ்மீர் பிரச்சினை ராணுவத்தால் தீர்க்க முடியாததால், அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும். இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்று நடுவர்கள் பரிந்துரைத்துள்ளனர். ராம்ஜெத்மாலனி (முன்னாள் சட்ட அமைச்சர்), கே.ஜி.கண்ணபிரான் (மூத்த வழக்கறிஞர்), எச்.சுரேஷ் (முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி), டி.கே.பாசு (முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி), மோகினிகிரி (தேசிய பெண்கள் ஆணைய முன்னாள் தலைவர்), சையது அமீது (மனித உரிமையாளர்), அருந்ததிராய் (எழுத்தாளர்), பிரபுல்பித்வாய் (பத்திரிகையாளர்) ஆகியோர் நடுவர் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

# சட்டவிரோத கோயிலை அகற்றக்கோரி கழக வழக்கறிஞர் இளங்கோ வழக்கு

சென்னை பட்டினப்பாக்கம் - அரசு ஊழியர் குடியிருப்பில், சட்டவிரோதமாகக் கட்டப்பட்டிருந்த பிள்ளையார் கோயிலை, வீட்டுவசதிவாரியம் அகற்றியது. கோயிலை மீண்டும் கட்டித்தரவேண்டும் என்று சில இந்துத்துவவாதிகள், முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கோரிக்கை வைத்தனர். உடனே ஜெயலலிதா அதே இடத்தில் கோயிலை கட்டித் தருவதாக கூறினார். சட்ட விரோதமாகக் கோயிலை இடித்த வீட்டு வசதித் துறையே, மீண்டும், அறநிலையத் துறையுடன் இணைந்து, அடுத்த நாளே, கோயிலைக் கட்டி முடித்தது. இதை எதிர்த்து, அதே குடியிருப்பில் வசிப்பவர் என்ற முறையில், கழக வழக்கறிஞர் இளங்கோ, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடந்துள்ளார். பல்வேறு மதத்தினரும், பகுத்தறிவாளர்களும் வாழும் குடியிருப்பில், வினாயகர் கோயிலை சட்டவிரோதமாகக் கட்டுவது, சமூக நல்லிணக்கத்தைக் குலைத்துவிடும் என்றும், எனவே கோயிலை அகற்ற வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இதே பகுதியில், வீட்டு வசதி வாரியத்தின் அனுமதியோடு, பழ-காய்கறிக் கடை ஒன்று கட்டப்பட்டபோது, அதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளதையும், மனுவில், வழக்கறிஞர் இளங்கோ சுட்டிக் காட்டியுள்ளார். ■

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. தொலைபேசி: 2451 2857, 2847 4830

# திருப்பூரில் கழக ஆதரவாளர் துரைசாமி கட்டித் தந்த "பெரியார் படிப்பகம்"

## கொளத்தூர் மணி – கோவை இராமகிருட்டிணன் பாராட்டு

**திருப்பூரில் - கழக ஆதரவாளர் தோழர் துரைசாமி தனது சொந்த செலவில் பெரியார் படிப்பகத்தை அமைத்துத் தந்துள்ளார்; படிப்பகத்தின் திறப்பு விழாவில் பங்கேற்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி - பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன், தோழர் துரைசாமியின் பகுத்தறிவுக் தொண்டைப் பாராட்டினார்கள்.**

திருப்பூர் வீரபாண்டி பிரிவு பாரதி நகரில் 11.7.2004 ஞாயிறு மாலை 6 மணி அளவில் தந்தை பெரியார் படிப்பகத்தை கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். அதே பகுதியில் கழகக் கொடியையும் தலைவர் ஏற்றி வைத்தார்கள்.

வீரபாண்டி பிரிவு நான்கு சாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு கே.எஸ்.துரைசாமி தலைமையேற்றார். எம். சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். டி.ஆர்.வி. மணிவண்ணன் வரவேற்புரையாற்றினார். கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில், "பெரியார் படிப்பகம் இப்பகுதியில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் இங்கு ஒரு மருத்துவமனை அமைந்திருக்கிறது என்று பொருள். இங்கு ஒரு பல்கலைக் கழகம் கிடைத்திருக்கின்றது என்று பொருள். இப்படிப்பகம் அமைவதற்கு இடம் தந்து, அதை அமைப்பதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட அண்ணன் துரைசாமி அவர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். அண்ணன் துரைசாமி அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார். ஒரு கோயில் கட்ட இடம் தந்தால் அடுத்த ஜென்மத்திலே சொர்க்கம் கிடைக்கும் என்று பக்தர்கள் சொல்வார்கள். ஆனால் இப்பொழுது வாழ்கின்ற மக்கள் மானமும் அறிவும் உள்ள மக்களாக, முற்போக்கு சிந்தனையுள்ள மக்களாக, அவர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கு, மூடநம்பிக்கை கருத்துக்களை ஒழிப்பதற்கு அடித்தளம் அமைத்துத் தந்திருக்கிறார், அண்ணன் துரைசாமி.

திறப்பு விழாவில் கோவை இராமக்கிருட்டிணன் பேசுகிறார்

இந்தியாவிலே கேரளாவிற்கு அடுத்த நிலையிலே கல்வி அறிவில் தமிழகம் தான் இருக்கிறது. கேரளா தான் கல்வி அறிவில் இந்தியாவின் முதன்மை மாநிலம். அடுத்த நிலையிலே நாம் இருக்கிறோம் என்று சொன்னால், இது சாதாரணமாக கிடைத்துவிடவில்லை. இது பெரியாராலும், பெரியார் இயக்கத்தின் தொண்டர்கள் உயிரை இழந்து, இரத்தம் சிந்தி பெற்றுத் தந்தது. இன்றைக்கு பச்சை மையில் கையெழுத்துப் போடுகின்ற அதிகாரம் படைத்தவர்களாக தமிழர்கள் உயர் நிலை அடைந்திருக்கிறார்கள் என்றால் அது பெரியார் இயக்கம் பெற்றுத் தந்த உரிமை. இப்பகுதியில் உள்ள பெண்கள் இப்படிப்பகத்தை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமையலறையும், கற்பப்பையும் இருக்கிற வரையில் பெண்களுக்கு விடுதலை இல்லை என்று சொன்னவர் பெரியார். இப்படிப்பகத்தின் வாயிலாக பெண் விடுதலைச் சிந்தனைப் புத்தகங்களைப் படித்து பயன் பெறுங்கள்.

கழகப் பொறுப்பாளர்களுடன் தோழர் துரைசாமி (தோழர் கொளத்தூர் மணி அருகில் நிற்பவர்)

நம் மக்களுக்கு விஞ்ஞான அறிவு வளராமல் பார்த்துக் கொண்டனர் பார்ப்பனர்கள். மேலை நாடுகளில் 80 ஆண்டுகளுக்கு முன்பே தொலைக் காட்சிகள், 50 ஆண்டுகளுக்கு முன்பே செல்போன்களை கண்டுபிடித்து அவர்கள் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். ஆனால், நமக்கு இப்பொழுதுதான் அது கிடைத்திருக்கிறது. நாமும் விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொண்டு நாமும் புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்திருந்தால், நாமும் அதுபோன்ற அறிவியல் கண்டுபிடிப்புகளை 50, 100 ஆண்டுகளுக்கு முன்னரே பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். ஆனால், நாம் பக்தியின் பெயராலும், மூடக் கருத்துக்களாலும் மூழ்கடிக்கப்பட்டுவிட்டோம். ஆனால் பக்தியாக இருந்தாலும் பார்ப்பான் தனது இன நலனில் உறுதியாக இருப்பான். பங்காரு அடிகளாரின் காலில் எந்த பார்ப்பானும் விழுவதில்லை. காரணம் அவர் பார்ப்பனரல்லாதவர். ஆனால் பார்ப்பன குட்டிச் சாமியாரின் காலில் நம் மக்கள் போய் விழுந்து கிடக்கிறார்கள், தமிழர்கள். சிந்திக்க வேண்டும்.

அய்யா அவர்கள் ஒரு திருமண விழாவிலே பேசினார், 'இனிவரும் உலகம் எப்படியெல்லாம் இருக்கும் என்று, இனிவரும் காலங்களில் தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி பற்றியும், ஆணும் பெண்ணும் சேர்ந்து குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது' என்றெல்லாம் பேசினார்கள். அந்தப் பேச்சை அண்ணா அவர்கள் அப்பொழுதே எழுதி திராவிட நாடு பத்திரிகையிலே வெளியிட்டார்கள். அது பின்னால் 'இனி வரும் உலகம்' என்கிற தலைப்பிலே புத்தகமாக வெளிவந்தது. அய்யா இருந்த காலத்திலேயே டெஸ்ட் ட்யூப் பேபி பிறந்தது. அந்த செய்தியை எல்லாம் பார்த்து அய்யா மகிழ்ச்சி அடைந்தார். அய்யா இந்த மக்களின் மூடப் பழக்கத்திலிருந்து விடுபட உழைத்தார். அப்படிப்பட்ட பெரியாரின் பெயராலே அமைந்திருக்கிற இந்தப் படிப்பகத்தை இப்பகுதி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று பேசினார்.

### கொளத்தூர் மணி

அடுத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். அவரது உரையிலிருந்து, "மக்களை அரசியல் படுத்த வேண்டும் என்றால், மக்களை நாமே படிக்க வைக்க வேண்டும். நல்ல மனித ஆற்றலை உற்பத்தி செய்யக் கூடிய களம் படிப்பகம் ஆகும். உன்னுடைய பெயர் நிலைத்திருக்க வேண்டும் என்றால், உன் சொத்துக்களைப் பொதுவாக்கி விடு என்று பெரியார் அவர்கள் சேலம் இரத்தினசாமி பில்டிங் திறப்பு விழாவில் குறிப்பிட்டார்கள். மக்களுக்காக படிப்பகத்தைத் தன் சொந்த இடத்தில் அமைத்து தந்ததன் மூலம் தோழர் துரைசாமி அவர்கள் பெயர் வரலாற்றில் இருக்கும், இந்த மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும். இலக்கியம் படைத்தவர்கள் தான் தமிழர்கள். ஆனால் பிற்காலத்தில் படிப்பறிவு இல்லாமல் ஏன் போனார்கள்? என்று பெரியார் அவர்கள் சிந்தித்தார்கள். ஆங்கிலேயன் அடிமைப்படுத்தியதாலா? அல்லது வேறு என்ன காரணங்கள் என்று பெரியார் சிந்தித்து அதற்கான தீர்வை நோக்கிப் பணியாற்றினார். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கல்வி, வேலை வாய்ப்புகளில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் தர காங்கிரஸ் செயல்படும் என்று அறிவித்தது; அதனால் காங்கிரசில் இணைந்தார் பெரியார். பின்னால் பார்ப்பனரல்லாத மக்களுக்கு இந்த காங்கிரசால் எந்தப் பயனும் கிட்டாது என்ற தெரிந்தவுடன் காங்கிரசை விட்டு வெளியேறினார் பெரியார்.

அரசியல் மேடையை பஜனை மேடையாக்கியவர் காந்தி. அந்தக் காலத்தில் காங்கிரஸ் பொதுக்கூட்டம் விக்டோரியா ஹாலில் தான் நடக்கும் காங்கிரஸ் மாநாடும் விக்டோரியா ஹாலில்தான் நடக்கும். அதுவும் ஆங்கிலத்தில்தான் பேசிக் கொள்வார்கள். ஆனால் பெரியார், திருவிக போன்றோர் மக்களிடத்திலே சென்று மக்கள் மொழியிலே பேசி காங்கிரசை வளர்த்தனர். 1884-ல் காங்கிரசை தொடங்கியதன் நோக்கமே பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியர்களுக்கு வேலை கேட்டுத்தான். ரிப்பன் பிரபுவிற்கு விடை கொடுப்பதற்கான நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்கிறார்கள். அனை

(4ம் பக்கம்)

## சென்னையில் பொடியன் சாமியார்

குட்டிச்சாமியாரை 'தினமணி', 'தினமலர்' போன்ற பார்ப்பன ஏடுகள் 'இளம் துறவி' என்று 'பயபக்தியுடன்' எழுதுகின்றன. கடந்தவாரம் சென்னையில் உத்ராட்சக் கண்காட்சியைத் (சாமியார்கள் கழுத்தில் அணியும் உத்ராட்ச மாலைகள்) திறந்து வைக்க இந்தப் பொடியன் வந்தான். தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும், வெட்கப்படுமளவுக்கு அதற்கு முக்கியத்துவம் தந்தன. கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த உத்ராட்ச மாலைகளின் விலை ரூ.6லட்சத்திலிருந்து ரூ.25 லட்சம் வரையாம்! பொடியன் சாமியாரோடு, மதுரை ஆதினமும் வந்து, விளம்பரங்களைப் பகிர்ந்து கொண்டார். இந்தப் பொடியன் பற்றி காஞ்சிபுரம் ஜெயேந்திரனிடம் 'இந்தியா டுடே' கருத்து கேட்டபோது, "இப்படிப்பட்டவர்களுக்கு பத்திரிகைகள் விளம்பரம் தராமல் இருந்தாலே போதும்" என்றாராம். 'மழைவர பிரார்த்தனை செய்யுங்கோ; அதோடு மரங்களையும் நடுங்கோ' என்கிறான் பொடியன். பொடியன் அப்படி என்ன எவருக்கும் தெரியாத வாழ்க்கைத் தத்துவங்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறான்?

இப்படித்தான் ஞானசம்பந்தன் எனும் பார்ப்பனச் சிறுவன் - தாய்ப் பாலை குடித்துவிட்டு, பதிகம் பாடிய தாகக் கதை கட்டினார்கள். அந்த ஞான சம்பந்தனை 'திராவிட சிசு' என்று கூறி சமணத்தோடு மோதவிட்டார்கள். அதே 'ஞானசம்பந்த'னைப்போல் இப்போது மற்றொரு பார்ப்பனப் பொடியனைக் களம் இறக்கி விட்டிருக்கிறார்கள்.

## காமராசர் சிலைக்கு கழக சார்பில் மாலை

காமராசர் பிறந்த நாளான ஜூலை 17-ம் தேதி, காலை 9.30 மணியளவில் சென்னை அண்ணாசிலையில் உள்ள காமராசர் சிலைக்கு கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. களப்பணி ஒருங்கிணைப்பாளர் கேசவன் மற்றும் கழகத் தோழர்கள் சீ.மணிவண்ணன், சொ. அன்பு, சேத்துப்பட்டு இராசேந்திரன், இராசன், கோ.உத்தமன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். காமராசரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைத் தொகுத்து, துண்டுப் பிரசுரமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## கோவையில் நடந்த இல்லத் திறப்பு

கழக ஆதரவாளர் கி.வேலுசாமி, கோவை ஆவாரம்பாளையம் பால சுந்தரம் லே-அவுட் முதல் வீதியில் புதிதாகக் கட்டியுள்ள தென்றல்-தமிழருவி என்ற இரட்டை இல்லங்களின் திறப்பு விழா ஜூலை 11-ம் தேதி கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் பொன்முடி, பொங்கலூர் பழனிச் சாமி, மு. இராம நாதன் மற்றும் தோழர்கள் வாழ்த்துரையாற்றினர். வெ.ஆறுச்சாமி வரவேற்புரையாற்ற, தந்தை பெரியார் படத்தை கவிஞர் உமாமகேசுவரி திறந்து வைத்தார்.

## பாவாணர் கோட்டத்தில் புரட்சிக் கவிஞர் விழா

விருதுநகர் மாவட்டம் சியோன் மலையில் உள்ள பாவாணர் கோட்டத்தில் புரட்சிக்கவிஞர் விழா 1.5.2004 அன்று நடைபெற்றது. நெடுஞ்சேரலாதன், சிவகாசி மணியம், குறிஞ்சிக் கபிலன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர். குறள்நெறி வாழ்க்கை, உலோகச் சிற்பக்கலை பற்றிய குறும்படங்கள் ஒளிபரப்பப்பட்டன.

## பெரியார் பயிலரங்கம்

கோவையில் ஜூலை 18, ஞாயிறு காலை, காஞ்சிபுரம் பெரியார் படிப்பகத்தில் பெரியார் பயிலரங்கம், பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின் இந்துத்துவவாதிகள் எனும் தலைப்பில் பேராசிரியர் ஜெயராமன் பேசினார்.

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆனால் அந்த கோயிலுக்கு அருகில் இருக்கும், கல்விக்கூடங்களை யாரும் கண்டு கொள்வது இல்லை. கோயிலை ஊர் கூடி புனரமைப்பது போல், கல்விக் கூடத்தையும் புனரமைக்க வேண்டாமா?

**– குடந்தை சம்பவம் பற்றி குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் (‘தினமணி’ ஜூலை 19)**

- தாய்த் தமிழ்ப் பள்ளிகளை - கடும் பொருள் இழப்புகளோடு - தமிழ் உணர்வாளர்கள் நடத்தி வருகிறார்கள். இந்தப் பள்ளிகளுக்கு, கல்வித்துறை எளிதில் அங்கீகாரம் தருவது இல்லை. கடுமையாக விதிகளைப் பேசுவார்கள். ஆனால் நர்சரிப் பள்ளிகளுக்காக, அரசின் தனித்துறையே செயல்படுகிறது. எவ்வளவு மோசமாகப் பள்ளிகள் இருந்தாலும், கல்வித் துறை கண்டு கொள்வது இல்லை. அதற்கு நிர்ணயிக்கப்பட்ட “லஞ்சத்தை”த் தந்தால் போதும்!
- “ஆங்கிலக் கல்வி தருகிறேன் என்ற பெயரில் எப்படி வேண்டுமானாலும் கட்டிடங்களை வைத்துக் கொண்டு வசதிகள் இல்லாமல் பாடம் நடத்துகிறார்கள். இதை அனுமதிப்பது பொது மக்களாகிய நாம்தான். நாம் விழிப்பாக இருந்திருந்தால் இது போன்ற பள்ளிகள் இருக்காது?”

**– நடிகர் விஜய்காந்த், குடந்தை பேட்டி.**


- கும்பகோணம் கோயில்கள் நிறைந்த நகரம். இதே கும்பகோணத்தில் தான் மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. பக்தர்கள் “பாவங்களை” எல்லாம் குடந்தையில் உள்ள “மகாமகக் குளம்” புனிதப்படுத்திவிடுகிறதாம். அந்தப் ‘புனித’ நகரில்தான் ஒருமுறை “மகாமகத்தில்” 50க்கும் மேற்பட்ட மக்கள் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். அதே குடந்தையில் தான் இப்போது 90 குழந்தைகள் மடிந்துள்ளனர்.
- காஞ்சிபுரம் சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதி - குடந்தை சம்வத்துக்குப் பிறகு, காஞ்சிபுரம் மடத்தில் பேட்டி அளித்தார். அப்போது, ஆத்திரத்தில் உள்ள அகாபிலம் நரசிம்ம சாமிக்கு ரூ.70 லட்சத்தில் தங்கமண்டபம் கட்டப் போவதாகவும், பகவான் சந்திர மவுலிசுவருக்கு தங்க விமானம் செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்றும் கூறினார். இறந்து போன குடந்தை குழந்தைகளுக்கு வருத்தம் மட்டும் தெரிவித்து, ‘ஆன்மா சாந்தி’ அடைய ஆசீர்வதிப்பதாகக் கூறினார்.
- சைவ மடாதிபதிகள், இறந்து போன குழந்தைகள் ‘ஆன்மா சாந்தி’ அடைய குடந்தை கோயிலில் ‘மோட்ச தீபம்’ ஏற்றினார்கள். திருவரங்கத்தில் திருமண வீட்டில் தீ விபத்து ஏற்பட்டு ஒரு பார்ப்பன புரோகிதக் குடும்பத்தின் உறவினர்கள் பரிதாபமாக இறந்தபோது, காஞ்சி சங்கராச்சாரி அவர்களுக்காக அப்போது ‘மோட்சதீபம்’ ஏற்றினார். ஆனால் சங்கராச்சாரியின் ‘மோட்ச தீபம்’ ‘சூத்திரக்’ குழந்தைகளுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. ■

**● ஈழத்தில் சமரசத்தை சீர் குலைக்க நடக்கும் திட்டமிட்ட சதி.**

**● இந்திய வரலாற்றில் பகவத் கீதை தொடர்**

**அடுத்த இதழில்**

# இப்போது விற்பனையில்...




“இந்திய நாட்டை மதவெறிக் காடாக்கத் துடித்துக் கொண்டிருக்கும் ஃபாசிசக் கும்பலை படம் பிடித்துக் காட்டும் சிறப்பான நூல். புறத்தை மட்டும் காட்டும் புகைப்படமாக இல்லாமல் முகமூடிகளுக்குள் ஒளிந்திருக்கும் மதவெறியின் பயங்கர முகத்தையும் அம்பலப்படுத்தும் ஊடுகதிர்ப் படமாய் இந்நூல் அமைந்திருக்கிறது.

‘ஒற்றுமை’ மாதமிருமுறை இதழில் தொடராக வெளிவந்து வாசகர்களின் மாபெரும் வரவேற்பைப் பெற்ற வரலாற்று ஆவணம் சில சேர்ப்புகளுடன் நூல் வடிவம் பெற்றுள்ளது. கட்டுரைகளில் இடம் பெற்றுள்ள வரலாற்றுத் தகவல்களுக்காகவும், அழுத்தமான - வாதங்களுக்கு அடர்த்தி சேர்க்கும் வகையில் ஆதாரங்களை அணி வகுத்துத் தந்திருக்கும் முறைமைக்காகவும் நூலைப் பலமுறை படிக்கலாம். சங்பரிவாரத்தின் பல்வேறு முகங்களான இந்து மகாசபை, பஜ்ரங் தள், விஹெச்பி, சிவசேனா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் வரலாறைத் துல்லியமாகத் தொகுத்துத் தந்திருப்பது நூலாசிரியரின் கடும் உழைப்பைக் காட்டுகிறது. இனிய தமிழும், எளிய நடையும் நூலின் கூடுதல் சிறப்புகள்.

எதிர்கால அபாயங்களைத் தவிர்க்க இறந்த காலத்திலிருந்துபெற்ற பாடங்களை சமகாலத் தலைமுறைக்குச் சொல்லும் சரித்திர ஆவணமாய்த் திகழும் இந்நூல். எல்லோர் கையிலும் இருப்பது சிறப்பு.” - த.மு.மு.க. வார ஏடு **‘மக்கள் உரிமை’**

**கிடைக்குமிடம்: பெரியார் படிப்பகம், கோவை. (திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில்);**
**கோவை பெரியார் படிப்பகம், மேட்டூர் (பேருந்து நிலையம் அருகில்);**
**தந்தை பெரியார் திராவிடர் கழகம், 5 சைவமுத்தையா தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.**
**இராவணன் படிப்பகம், அரியாங்குப்பம், புதுவை.**

## கணவரை மதவெறிக்கு பலிக்கொடுத்த கிளாடிஸ் விடை பெற்றார்

ஒரிசாவில் பழங்குடி மக்களுக்கு மருத்துவத் தொண்டாற்றி வந்த ஆங்கிலேய மருத்துவர் கிரகாம், மற்றும் அவரது இரண்டு மகன்களை சங்பரிவார் கூட்டம், 1999 ஜன.23 அன்று உயிரோடு எரித்துக் கொன்றது. அவரது துணைவியார் கிளாடிஸ் ஸ்டெயின், தனது குடும்பத்தில் எஞ்சியிருந்த ஒரே மகள் ஈஸ்தருடன், தொடர்ந்து, பழங்குடி மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வந்தார். மதவெறியர்களால் கொல்லப்பட்ட தனது கணவர் நினைவாக, தொழுநோய் மருத்துவமனை ஒன்றையும், அப்பகுதியில் நிறுவியுள்ளார். இப்போது, தனது மகளுடன் கடந்த 15ம் தேதி ஆஸ்ரேலியாவுக்குத் திரும்பிவிட்டார் கிளாடிஸ். மகளின் மருத்துவப் படிப்புக்காக தாம் ஆஸ்திரேலியா புறப்பட்டுள்ளதாகக் கூறிய கிளேடிஸ், “நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன்; எனக்கு ஆறுதல் தேவைப்படுகிறது; சொந்தப் பிரச்சினைகளுக்காக ஆஸ்திரேலியா போகிறேன்; மீண்டும் இந்தியா வருவேன்; ஆனால் எப்போது என்பதைக் கூற முடியாது” என்று விமான நிலையத்தில் கூறியுள்ளார்.

## கோபியில் மாவட்ட கலந்துரையாடல்

ஈரோடு மாவட்ட மாதாந்திர கூட்டம் 4.7.2004 அன்று மாவட்டச் செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையில் கோபியில் நடைபெற்றது. தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி, ப.க. மாவட்டச்செயலாளர் நேதா. ஆசைத் தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

செப்டம்பர் 17 அன்று பெரியார் பிறந்தநாளில் அனைத்துக் கிளைகளிலும் அய்யா படத்தை அலங்கரித்து வைத்து, புதிய கொடிகளை ஏற்றி சிறப்பாகக் கொண்டாடுவது. கிளைக் கழகங்களை சிறப்பாகக் கட்டமைக்கும் திட்டத்தில் வரும் 11.7.04 அன்று எலத்தூர் கிளைக் கழகக்கலந்துரையாடல்கூட்டம்நடத்துவது.

மற்றும் பெரியார் முழக்கம் சந்தா சேர்த்தல்; தாராபுரம் தமிழர் உரிமை முழக்க மாநாட்டை வெற்றிகரமாக நடத்துதல் பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கோபி: துரை சண்முகம், பரசுராமன், ஆறுமுகம், செல்வக்குமார், பொன்ராஜ், இரகுநாதன். ஈரோடு : தமிழ்ச்செல்வன். பெருந்துறை : செல்வக் குமார். புதுரோடு: சிதம்பரம், சந்திர சேகரன், இராசேந்திரன். கொளப்பளூர் முருகேசன். கள்ளிப்பட்டி : நடத்துனர் நாகப்பன். தாசப்ப கவுண்டன் புதூர் : தேவராசன். காசிபாளையம்: மாவட்ட ப.க. தலைவர், ஆசிரியர் இரா.காளியண்ணன். சதுமுகை : பழனிச்சாமி. விசயமங்கலம்: விச, வெங்கடாசலம். காந்தி நகர்: சின்னத்தம்பி. - உள்ளிட்ட 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

15 நாட்கள் இடைவெளியில் நடத்தப்பட்ட இரண்டாவது மாவட்டக் கலந்துரையாடல் கூட்டமாக இருந்த போதிலும் தோழர்கள் ஆர்வமுடன் திரளாகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

**தகவல்: நேதா. ஆசைத்தம்பி**

(3 பக்கம் தொடர்ச்சி)

# பெரியார் எதிர்த்த மூன்று பேதங்கள்!

வருமே பார்ப்பனர்கள். ஆண்டு தோறும் கூடி சந்திப்பது என்று அப்பொழுது முடிவு செய்கிறார்கள். 1885 டிசம்பரில் சென்னையில் கூடுகிறார்கள். அப்போது இவர்கள் ஆங்கிலேய அரசுக்கு கோரிக்கை வைக்கிறார்கள். அரசுத் துறையில் இந்தியர்களுக்கு வேலை வேண்டும் என்பது கோரிக்கை. உடனே ரிப்பன் பிரபு உள்ளாட்சி நிர்வாகங்களில் மட்டும் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும் என்று அறிவிக்கிறார். அப்படி இந்தியர்களுக்கு என்று வாங்கிய வேலைகள் அனைத்தும் பார்ப்பனர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு, சீக்கியர்களுக்கு மற்ற எவருக்கும் கிடைக்காமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சி தான் இடஒதுக்கீட்டை அமுல்படுத்தியது. தமிழ்நாட்டில் தான் தனியார் துறையிலும் இடஒதுக்கீடு இருந்தது. தனியார் நடத்திய அஞ்சல் துறை, இரயில்வே துறையில் எல்லாம் இடஒதுக்கீடு இருந்தது. இந்திய விடுதலைக்குப் பின் மத்திய அரசாங்கத்தின் வேலை வாய்ப்புகளிடம் இடஒதுக்கீடு இல்லாமல் செய்து விட்டனர். அதை எதிர்த்து பெரியார் போராடினார். உடல் உழைப்பு, உற்பத்தி போன்ற வேலைகளில் எந்தப் பார்ப்பானும் கிடையாது. சாதி ஒழிப்பு என்றும், இந்துமத எதிர்ப்பு என்றும், உழைக்கும் மக்கள் மேம்படவேண்டும் என்றும் பெரியார் உழைத்தார். இதற்குத் தடையாக உள்ள அனைத்தையும் எதிர்த்தார். பிற்காலத்தில் இராமனாலும், விநாயகனாலும் பிரச்சினை வரும் என்று தெரிந்துதான் இராமன் பட எரிப்பு, விநாயகர் சிலை உடைப்பு போன்ற போராட்டங்களை நடத்தினார். இது ஒன்றுதான் ஆத்திகத்திற்கு எதிரான போராட்டம். மற்ற அனைத்தும், அனைத்து மக்களுக்கான போராட்டம். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்பது ஆத்திக மக்களுக்கான போராட்டம். பெரியார் அவர்கள் நாட்டில் இருக்கும் மூன்று வேறுபாடுகள் ஒழிய வேண்டும் என்று போராடியவர். ஒன்று ஏழை, பணக்காரன் பேதம்; இரண்டு - மேல்சாதி, கீழ்சாதி. மூன்று - ஆண் பெண் பேதம் இந்த மூன்றில் இருக்கும் வேறுபாடுகளைக் கலைந்து சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் என்று போராடியவர் பெரியார். பெரியாா தான் மனித வாழ்க்கையைப் பற்றி கவலைப்பட்டவர். மதம் மனிதன் பிறப்பிற்கு முன்னும், மனிதன் இறப்பிற்கு பின்னும் சிந்தித்தது. ஆனால் பெரியார் மனிதன் பிறப்பிற்குப் பின்னும்,மனித இறப்பிற்கு முன்னும் மனித வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்தார்” என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தனது உரையில் - பார்ப்பன சங்கராச்சாரிகளிடம் அரசுப் பிரதிநிதிகள் மண்டியிடுவதைச் சுட்டிக் காட்டிக் கண்டித்தார். அமெரிக்காவின் அதிபராக இருந்த கென்னடி உலக நாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, போப் ஆட்சி நடத்தும் வாட்டிகன் நகருக்கும் சென்றுவரத் திட்டம் இருந்தது. போப் ஆண்டவரின் முன் மண்டியிட்டு ஆசி வாங்க வேண்டி யிருக்கும் என்பதால், அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றால் அமெரிக்க அரசே மண்டியிட்டதாகப் பொருள் படும் என்று கூறி அங்கு செல்வதை இரத்து செய்தார். ஆனால் இங்கு நிலைமையே வேறாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் இறுதியில் இராமசாமி நன்றி கூறினார். நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் தோழர் தியாகு பகுத்தறிவுப் பாடல்கள் பாடினார். காவை இளவரசன் ‘மந்திரமா? தந்திரமா?’ நிகழ்ச்சி நடத்தினார். தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி. வேலுச்சாமி, தி.மு.க. ஒன்றிய செயலாளர் க.ரத்தினசாமி, வீரபாண்டி ஊராட்சித் தலைவர் ஆர்.குமார், ஈசுவரமூர்த்தி (திமுக), கோகுலம் பரமசிவம் (ம.தி.மு.க.), பெருமாள் (காங்கிரஸ்), அருணாசலம் (சி.பி.ஐ.), சேலம் மாவட்டக் கழகத் தலைவர் முல்லை வேந்தன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் வீ. அங்ககுமார், பொள்ளாச்சி நாகராசு, கழக் ஒன்றிய செயலாளர் வீ.குமார் ஆகியோர் உரையாற்றினர்.

**செய்தி : பொள்ளாச்சி பிரகாஷ்**

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 22nd July 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஜூலை 29, 2004 | புரட்சி 3 | முழக்கம் 29 | விலை : ரூ.2.50

# கற்சிலைகளுக்கு செலவிடுவதை நிறுத்து; கல்விச் சாலைகளை அரசே சீர்படுத்து!

# கழகத்தின் ஆர்ப்பாட்டங்கள்!

**கழகத் தலைவர் அறிக்கையில் விடுத்த வேண்டுகோளை ஏற்று - குடந்தைக் கொடுமைகள் தொடராமல் இருக்க அடிப்படைக் கல்வியை அரசே வழங்கு என்ற முழக்கத்தை முன் வைத்து, பல்வேறு ஊர்களில் கழகத்தினர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். குறுகிய இடைவெளியில் தோழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் பற்றிய ஓர் செய்தித் தொகுப்பு.**

## கோவை

கோவையில் 23.7.04 வெள்ளியன்று மாலை 5 மணிக்கு, செஞ்சிலுவை சங்க கட்டிடம் முன்பு ஆட்சிக்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, கோவை மாநகரத் தலைவர் ம.ரே.ராசுக்குமார், மாநகர செயலாளர் வே.கோபால் ஆகியோர் முன்னிலையில் கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கழகப்பொறுப்பாளர்கள் களப் பணி ஒருங்கிணைப்பாளர் ந.பிரகாசு, மாநகர பொருளாளர் இரா.மணிமாறன், மாநகர அமைப்பாளர் கா.சோமசுந்தரம், அலுவலக பொறுப்பாளர் சா.கதிரவன், கழக வழக்கறிஞர்கள் லெனின், சம்பத், மாணவரணி அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், சட்டக்கல்லூரி மாணவர்கள், மேட்டுப்பாளையம் நகர செயலாளர் த.சந்திரசேகர், விஜயகுமார், பரமசிவம், கோவை பகுதி செயலாளர்கள் ம. சண்முகசுந்தரம், ப.மாணிக்கம், தி.க. சம்பத், சேகர், ஈசுவரன், இராசன், பீளமேடு நடராசன், தி.க. சண்முகம், சாந்தகுமார், நீலம்பூர் சசிக்குமார், உமேசு, ஆரோக்கியராசு, முத்துரத்தினம், அண்ணாமலை சரவணன், தி.மு.க. பிரமுகர்கள் பூபால், இம்மானுவேல் மற்றும் தோழர்கள், ஆதரவாளர்கள் உட்பட 100 பேர் பங்கேற்றார்கள்.

பெரியார் பிஞ்சுகள் தமிழ்மொழி, கயல், எழில் ஆகியோர் முழக்க அட்டைகள் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டது பொதுமக்களை ஈர்த்தது.

முன்னதாக ‘பெரியார் முழக்க’த்தில் வெளியான கவிஞர் அறிவுமதியின் கவிதையை துண்டறிக்கையாக பொது மக்களிடம் விநியோகம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய கழகப் பொதுச்செயலாளர் “தனியார் பள்ளிகளின் வியாபார நோக்கையும், அரசு ஆரம்பக் கல்வியை, அடிப்படைக் கல்வியை தரக் கடமைப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி பேசியதோடு குடந்தை சம்பவத்தின் எதிரொலியாக அரசால் நியமிக்கப்பட்ட 23 ஆயிரம் ஆசிரியர்களும் தங்களது ஒரு மாதசம்பளத்தை இறந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டும்” என்றார்.

## கோபியில்

கோபி பேருந்து நிலையம் அருகில் 23.7.04 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மாவட்ட தந்தை பெரியார் தி.க. தலைவர் நாத்திகசோதி தலைமை தாங்கினார்.

கோபி சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரும், தி.மு.க.வைச் சார்ந்த சீரிய பகுத்தறிவாளருமான கோ.ப. வெங்கிடு, ம.தி.மு.க. மாவட்டத் துணைச் செயலாளரும், பகுத்தறிவாளர் கழக நெறியாளருமான மா.கந்தசாமி, தந்தை பெரியார் கொள்கைகள் மீது என்றென்றும் பெரும் பற்று வைத்துவரும், காங்கிரஸ் மாநில அரசியல் விவகாரக் குழுவின் உறுப்பினர் கே.எஸ். பச்சியப்பன், கழக மாநில நிதிக்குழு உறுப்பினர் பொன்னுசாமி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த பரமேசுவரன் ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது “தரம் உயர்த்து தரம் உயர்த்து - அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்து”, “ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை பள்ளிகளில் குறைக்காதே, “ஆரம்பக் கல்வி நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து”, “குடந்தைக் கொடுமை தொடராதிருக்க - கல்வி வணிகத்தைத் தடுத்து நிறுத்து” - போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

வாசகங்கள் அடங்கிய பல அட்டைகளையும் தோழர்கள் கரங்களில் ஏந்தியிருந்தனர்.

மாவட்ட இளைஞரணி செயலாளர் புதுரோடு சிதம்பரம், சதுமுகை பழனிச்சாமி, (மா. அமைப்பாளர்) சத்தி, ஒன்றியச் செயலாளர் இராசேந்திரன், நால்ரோடு தேவராசு, இளைஞரணி செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் மற்றும் கூடக்கரை, கொளப்பளூர், நால்ரோடு, கோபி, குருவரெட்டியூர், ஈரோடு கழகக் கிளைகளைலிருந்து திரளாகத் தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.

(4ம் பக்கம்)

## தனியார் பள்ளிகளா? தந்தூரி அடுப்புகளா?

**கோவையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் எழுப்பிய முழக்கங்கள்**

- *தமிழக அரசே!*
  *கல்வி வணிகத்தை தடுத்து நிறுத்து!!*
  *ஆரம்பக் கல்வியை உடனே வழங்கு!!*
- *வீர வணக்கம்... வீர வணக்கம்!*
  *தீயில் கருகிய குழந்தைகளுக்கு*
  *வீரவணக்கம்!!*
- *வீர வணக்கம்... வீர வணக்கம்!*
  *ஓலைக்கூரை பள்ளிகளை*
  *தன்னுயிர் கொடுத்து மாற்றிய*
  *குழந்தைகளுக்கு வீர வணக்கம்!!*
- *வீர வணக்கம்... வீர வணக்கம்!*
  *23 ஆயிரம் ஆசிரியர்களை*
  *நியமிக்க வைத்த பிஞ்சுகளுக்கு*
  *வீர வணக்கம்!*
- *கருணை இல்லையா?*
  *கருணை இல்லையா?*
  *கல்வி வியாபாரிகளே...*
  *கருணை இல்லையா?*
- *பேராசை பிடித்த தனியார் பள்ளி*
  *நிர்வாகமே!*
  *வதைக்காதே! வதைக்காதே!*
  *குழந்தைகளை வதைக்காதே!*
- *தடை செய்! தடை செய்!*
  *தனியார் பள்ளிகளை தடை செய்!*
- *தடுத்து நிறுத்து! தடுத்து நிறுத்து!*
  *கல்வி வியாபாரத்தை தடுத்துநிறுத்து!!*
- *தமிழக அரசே! தமிழக அரசே!!*
  *கல்வி கொடு! கல்வி கொடு!!*
  *அடிப்படைக் கல்வி கொடு!*
- *எடுத்து நடத்து! எடுத்து நடத்து!!*
  *தனியார் பள்ளிகளை எடுத்துநடத்து!!*
- *வதைக்காதே.. வதைக்காதே!*
  *கட்டணம், நன்கொடை பெயராலே*
  *குழந்தைகளை வதைக்காதே!!*
- *கல்வியை வணிகமாக்காதே!*
  *பிஞ்சுகளை வதைக்காதே!!*
- *தனியார் பள்ளிகளா?*
  *தந்தூரி அடுப்புகளா?*
- *கல்வியை காசாக்க நினைப்போரே!*
  *பணம் சம்பாதிக்க பல வழி இருக்கு!!*
  *பிஞ்சு குழந்தைகளை வதைப்பதை*
  *நிறுத்து!!*
- *அய்.ஏ.எஸ். ஆகும் குழந்தைகளின்*
  *ஆயுளை முடிப்பது சரிதானா?*
- *மருத்துவர் ஆகும் மழலைகளை*
  *மரணக் குழிக்குள் தள்ளலாமா?*
- *கற்சிலைகளுக்கு செலவிடுவதை நிறுத்து!*
  *கல்விச் சாலைகளை அரசே சீர்படுத்து!!*
- *கல்வி வழங்க கான்வெண்டா?*
  *காவு வாங்க கான்வெண்டா?*

தலையங்கம்

## மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை

தடைக்கற்களைத் தகர்த்து - சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் ஜூலை 24ம் தேதி திறக்கப்பட்டுள்ளது. முதன்முதலாக, கன்யாகுமரி மாவட்டத்தில்தான் இதற்கான முதல் குரல் எழுந்தது. 1968-ல் மதுரை-ராமநாதபுர மாவட்ட வர்த்தக சபையினர் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் இந்தக் கோரிக்கையை வைத்தனர். இதற்கு ஒப்புதல் அளித்து 1973-ல் மத்திய அரசு தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியது. மத்திய அரசு இதற்காக நியமித்த ஜஸ்வந்த்சிங் குழு, தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, பலதரப்பினரின் கருத்துகளையும் கேட்டு, உயர்நீதிமன்றக் கிளையைத் துவக்கலாம் என்று 1965-ல் அரசுக்குப் பரிந்துரைத்தது. ஆனாலும், உயர்நீதிமன்றக் கிளையைத் திறப்பதில் தொடர்ந்து முட்டுக்கட்டையே நீடித்தது. 1992-ல் நீதிபதி ரத்தினம் தலைமையில் மூவர் குழு, இடத்தைத் தேர்வு செய்ய மதுரை வந்தது; ஆனால் எந்த முடிவும் எடுக்கவில்லை; பொறுத்துப் பார்த்த தென்மாவட்ட வழக்கறிஞர்கள் போர்க்கொடி உயர்த்தினர். அதற்குப் பிறகு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஏ.சுவாமி தலைமை யிலான குழு மதுரை வந்து, தற்போது நீதிமன்றக் கட்டிடம் அமைந்துள்ள இடத்தைத் தேர்வு செய்தது. 1996-ல் தி.மு.க. ஆட்சியில் நிலத்தை கையகப்படுத்த நிதி ஒதுக்கியது. 2000ம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது. 2001-ல் அ.தி.மு.க. ஆட்சியில், கட்டிடம் கட்ட ரூ.56 கோடி ஒதுக்கப்பட்டது. பிறகு கட்டுமானப் பணிகளில் ஊழல் நடந்ததாகக் கூறி, கட்டிடம் கட்டுவது தாமதமானது. 2003-ல் மீண்டும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன்பிறகு திறப்புவிழாக்களுக்கான தேதிகள் மூன்று முறை அறிவிக்கப்பட்டு தள்ளி போடப் பட்டன.

மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையைத் திறக்கவிடாமல் தடுக்கும் பல்வேறு முயற்சிகளை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் மேற்கொண்டது. மத்தியில் மன்மோகன் சிங் தலைமையில் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி பதவி ஏற்ற பிறகு, இதற்கான குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 14 மாவட்ட வழக்குகளை, மதுரைக் கிளை விசாரிக்கும் என்று முடிவெடுத்தபோது, அதையும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் எதிர்த்தனர். கடைசியாக ‘ரிட்’ மனுக்களை விசாரிக்கும் உரிமையை - மதுரைக்கிளைக்கு வழங்கக் கூடாது என்று போரா டினார்கள். அந்த முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளது. சென்னை வழக்கறிஞர்களின் போராட்டத்தை நடுநிலையாளர்கள் எவரும் ஏற்கமாட்டார்கள்.

தென் மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடத்திட பெரும் பொருட்செலவையும் நேரச் செலவையும் தென்மாவட்ட மக்கள் சந்திக்க வேண்டியிருந்தது. மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை உருவானதின் மூலம் தென் மாவட்ட மக்கள் நிம்மதியும், மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர். உயர்நீதி மன்றத்தின் வரவால் - தென் மாவட்டங்கள் பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இந்தியாவில் ஏற்கனவே உ.பி., ம.பி., ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் உயர்நீதி மன்றத்தின் கிளைகள் உள்ளன. இந்தியாவின் 15வது உயர்நீதிமன்றக்கிளை தான் இப்போது மதுரையில் திறக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தைப் போலவே உச்சநீதி மன்றத்தின் கிளைகளும் வரவேண்டும். ஏழை எளிய மக்களுக்கும், நீதி கிடைக்க வேண்டுமானால், நீதிமன்றத்தின் கடுமையான விதிமுறைகள் எளிமையாக்கப்படவேண்டும். நீதிமன்ற வாதங்கள் - மாநில மொழிகளிலே நடக்க வேண்டும். நீதிபதிகளாக - ஒடுக்கப்பட்ட சிறுபான்மை, மற்றும் பெண்கள் சமூகத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்பட்டு, சமூகநீதிக் கண்ணோட்டம் பேணப்பட வேண்டும். நீதிமன்றம் அருகாமையில் வந்து விட்டால் மட்டும் போதாது, சமூகத்தின் அடக்கப்பட்ட மக்களின் மனசாட்சியாகவும் நீதிமன்றங்கள் மாற வேண்டும்!

## சந்திரிகாவின் சதித் திட்டம் வெற்றி பெறுமா?

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு துரோகம் செய்த கருணாவின் ஆதரவாளர்கள் ஏழுபேர் கொழும்பு புறநகர்ப் பகுதியில் ஒரு வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 27ம் தேதி காலை நார்வே வெளிநாட்டுத் துறை துணை அமைச்சர் விதார் ஹெல்கிசென் கொழும்பு வர இருந்த நிலையில், அதற்கு முதல் நாள் இந்த சம்பவம் நடந்துள்ளது. இலங்கை உளவுப் பிரிவு போலீஸ் ஒருவரும், இவர்களோடு சுடப்பட்டு இறந்திருக்கிறார்; உடன் தங்கியிருந்த கருணாவின் ஆதரவாளர்களே, இதை செய்து விட்டு, கிழக்கு அம்பாறைப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் - கருணாவுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கருணா ஆதரவாளர்களின் வீட்டுக்கு ராணுவப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. கருணாவுக்கு அடுத்த நிலையிலிருந்த, நிதிப் பொறுப்பைக் கவனித்து வந்த குகனேசன், இராணுவப் பிரிவுத் தலைவர் காஸ்ட்ரோ ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். தற்போது, கருணா தனிமைப்படுத்தப் பட்டு விட்டார்.

### பகடைக் காயாகிறார் கருணா!

அதிபர் சந்திரிகா, கருணாவைப் பயன்படுத்தி, சமரசப் பேச்சு வார்த்தைகளைக் குலைக்கும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். அந்தக் குற்றச்சாட்டுக்கு வலுவூட்டக்கூடிய ஆதாரங்கள் ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கருணா புலிகளின் திடீர் தாக்குதலிருந்து தப்பி ஓடியபோது அவருடன் சென்ற நிலாவினி, லாவண்யா, தந்தமிழ், பிரேமினரி ஆகிய நான்கு பெண் விடுதலைப்புலிகள் பிறகு கருணாவிடமிருந்து தப்பி, விடுதலைப்புலிகளிடம் அடைக்கலம் புகுந்தனர். இவர்களில் பெண் புலி நிலாவினி பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் - இலங்கை ராணுவம் தான், கருணாவுக்கு அடைக்கலம் தந்து, பாதுகாப்பு அளித்து வருகிறது என்ற உண்மையை அம்பலப்படுத்தினார். அவர் தனது பேட்டியில், பல அதிர்ச்சியான தகவல்களைத் தெரிவித்தார். மட்டக்களப்பிலிருந்து தப்பிச் சென்றவுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு அலுவலகத்தில் கருணாவும், வேறு ஒரு வீட்டில் பெண் புலிகளும் தங்கியிருந்தனர். கருணா, சந்திரிகா அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள டக்ளஸ் மற்றும் சிங்கள புலனாய்வுத் துறையினருடன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். ரணில் விக்ரமசிங்கே கட்சியைச் சார்ந்த அலி சாகிர் மவுலானா என்ற மட்டக் களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்தான், கருணாவும், அவரது ஆதரவாளர்களும், கொழும்புக்கு தப்பிச் செல்ல அனைத்து உதவிகளையும் செய்திருக்கிறார். கருணா கொழும்பிற்கு வந்தவுடன், மலேசியாவிலிருந்த அவரது மனைவியும், கொழும்புக்கு வந்துவிட்டார். சந்திரிகாவின் கை பொம்மையாகவே கருணா செயல்பட்டு வருவதை, உடனிருந்த பெண் புலிகளே அம்பலப்படுத்தியதால், சந்திரிகாவின் சமாதான முகத்திரை கிழிந்துவிட்டது. வேறு வழியின்றி, தனிப்பட்ட முறையில் சில ராணுவத்தினர், கருணாவுக்கு உதவியிருக்கலாம் என்று சமாதானம் கூறுகிறார் சந்திரிகா.

சந்திரிகா அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள டக்ளஸ் - கருணாவுடன் தொடர்பு கொண்டு செயல்படுவது அம்பலமாகிவிட்டதால், சந்திரிகாவின் சமாதான முயற்சி ஒரு நாடகம் என்பது அம்பலமாகிவிட்டது. எனவே, டக்ளசை, சந்திரிகா அமைச்சரவையிலிருந்து நீக்கிவிடக்கூடும் என்று கருதியே, தன்னை வெடிகுண்டுகளுடன் புலிகள் கொல்ல வந்ததாக, டக்ளசே ஒரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என்று கூறப்படுகிறது. அதன் பிறகு சென்னை வந்த டக்ளஸ், கருணாவுடன் சேர்ந்து தனி அரசியல் கட்சி ஒன்றை துவக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், அது குறித்து கருணாவுடன் பேசி வருவதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். தம்மை சந்தித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன்புவி ஹோவடேவிடம் கருணாவிடமிருந்து தப்பி வந்த பெண்புலிகள் தந்துள்ள வாக்கு மூலங்களை புலிகள் ஆதாரமாகத் தந்துள்ளனர். இலங்கை ராணுவம், கருணாவுக்கு பாதுகாப்பு தந்துகொண்டு, கிழக்கு மாநிலத்தில் விடுதலைப்புலிகளுக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும் எதிராக நடத்தி வரும் படுகொலைகளையும் பட்டியலிட்டு தந்துள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, கருணா செயல்பட்டு வந்த கிழக்கு மாவட்டங்களில் மட்டும் 40 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். இவை அனைத்தும் கருணாவும், இலங்கை இராணுவமும் சேர்ந்து நடத்திய படுகொலைகள். சமாதான முயற்சிகள் தொடர்ந்து நீடிப்பது - அரசின் கைகளில்தான் உள்ளது என்று, புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார். கருணா பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், சமரச முயற்சிகளில் பங்கேற்க இயலாது என்று விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக நார்வே தூதுக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கொழும்பில் பல கோடி முதலீட்டில் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் ஒன்றை, கருணா தனது மனைவி பெயரில் பதிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. 2004 மார்ச் 8 ஆம் தேதி, இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், பதிவு எண், ‘N(PVS)36846’ என்று; வித்யாபதி முரளிதரன் எனும் பெயரில், பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆதாரங்களுடன் செய்திகள் வந்துள்ளன. கருணா மனைவி நிராவின் சொந்தப் பெயர் வித்யாவதியாகும். வெள்ளவத்தையில் உள்ள ஒரு தனியார் வங்கியில் கருணா இரண்டரை கோடிப் பணம் போட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. ●

## தமிழர் ஒற்றுமையை தடைப்படுத்தும் சக்திகள்

‘ஈழவேந்தன் - சென்னை விமான நிலையத்திலிருந்து, மீண்டும் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்’ என்ற செய்தி கேட்டு தமிழர் ஒவ்வொருவரும் கொதிப்படைந்தனர். அந்த ஆவேச உணர்வுடன், பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில், 25.7.2004 அன்று துவங்கியது, உலகத் தமிழர் பேரமைப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மாநாடு அரங்கத்துக்குள்ளும் அரங்கத்துக்கு வெளியேயும் மாநாடு துவங்கிய - காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை நிரம்பி வழிந்தது கூட்டம். 60 பேச்சாளர்கள்; 20 தலைவர்களின் படத்திறப்புகள்; கவியரங்கம்; கருத்தரங்குகள்; இசை அரங்கு; நாடகம் என்று அடர்த்தியான நிகழ்ச்சிகள்.

“ஈழவேந்தன் மாநாட்டில் பங்கேற்காமல் திருப்பி அனுப்பியது - உலகத் தமிழர்களையே அவமதித்த செயல். மத்தியில் ஆட்சிகள் மாறினாலும், ஆட்சியை இயக்கும் அதிகாரிகளின் மனநிலை அப்படியே நீடிக்கிறது” என்றார், உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன். தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளின் தூதுவர்களாக - தமிழர்களையே நியமிக்க வேண்டும்; ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் இந்திய அரசு எடுக்கும் முடிவுகளில், தமிழகத் தமிழர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்; இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் போடத் துடிக்கும் இலங்கை அரசின் முயற்சிகளுக்கு இந்தியா துணை போகக் கூடாது என்ற கருத்துகளை அழுத்தமாகப் பதிவு செய்தார் பழ. நெடுமாறன். இலங்கையைச் சுற்றி அண்டை நாடுகள் எதுவுமில்லை. எனவே அண்டை நாடுகளின் அச்சுறுத்தல் எதுவுமில்லாத இலங்கை, ஏன் இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் போட துடிக்கிறது? தமிழர்களை ஒடுக்குவதற்குத் தானே என்ற கேள்வியை எழுப்பினார் பழ.நெடுமாறன்.

“கருநாடகத்தில் வாழும் தமிழர்கள் தங்களின் உரிமை பறிக்கப்படும்போது அதற்காகப் போராடுவதும் குரல் கொடுப்பதும் நியாயம் தான். அதே நேரத்தில் பெரும்பான்மை மக்களாகிய கன்னடர்களுடன் அவர்கள் இணைந்து வாழ வேண்டும்; தமிழ் நாட்டில் உள்ள தமிழர் அமைப்புகளின் கிளைகளாகத் தங்களைக் கருதி செயல்படக் கூடாது” என்ற கருத்தை முன் வைத்தார். தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சியின் பொதுச் செயலாளர் பெ. மணியரசன்.

தமிழர்களை எப்படி நாம் ஒன்றுபடுத்தப் போகிறோம்? அவர்களைப் பிரித்து வைக்கும் ஆரியப் பார்ப்பன கருத்தியல்களான சாதியை நாம் ஒழிக்க வேண்டாமா? அதற்கு என்ன செய்யப் போகிறோம்? தமிழர்களை இழிவுபடுத்தும் கருத்தியல்களை நிலைநிறுத்தும் பார்ப்பனர்கள் அர்ச்சகர்களாக உள்ள கோயில்களுக்கு, வழிபடச் செல்ல மாட்டோம் என்ற உறுதியை - தமிழர்களின் வீட்டு நிகழ்ச்சிகளில் பார்ப்பனர்களை அழைக்க மாட்டோம் என்ற உறுதியை, இந்த மாநாட்டுக்குப்

(4ம் பக்கம்)

# ‘ஆர்யபட்டரை’ வெறுத்து ஒதுக்கிய பார்ப்பனர்கள்

*(‘இந்திய வரலாற்றில் பகவத்கீதை’ நூலின் சுருக்கமான உள்ளடக்கம் – சென்ற இதழ் தொடர்ச்சி)*

- *பார்ப்பனியத்தின் உயிர்நாடி, வேத மதத்தின் அடிப்படைக் கருத்தியல்கள், உபநிடதங்களின் உள்ளுறை, தர்ம சாத்திரங்களின் தகிடுதத்தங்கள் ஆகிய அனைத்தும் கீதையில் உள்ளடங்கியிருப்பதை உணர்ந்து கொண்ட பார்ப்பனர்கள், எதிரிகளை சிதறடிப்பதற்கான ஆயுதமாக கீதையைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்கிறார் நூலாசிரியர் பிரேம்நாத் பசாஸ்.*
- *கீதை - புரட்சிகரமாக தோற்றம் காட்டக் கூடிய வெற்று முழக்கங்களை மிக சாமர்த்தியமாக முன்னிறுத்துகிறது. எனவே கீதைக்கு விளக்க உரை எழுதியவர்களும், இந்த முழக்கங்களை முன்னிறுத்துவதையே கலாச்சாரமாக்கிக் கொண்டார்கள். பிறகு இந்துத்துவமே முழக்கங்களில் உயிர்வாழும் ஒரு இயக்கமாகி விட்டது.*
- *“கதம்பக் குவியலான கீதைத் தத்துவம், புதிது புதிதான விளக்கங்களை நுழைப்பதற்கு இடமளிக்கும் வகையில்தான் அமைந்துள்ளது. ஆனால் சமூகத் தடைகளைக் கடந்து புதுவழியில் செல்வதற்கு அது வழிகாட்டவில்லை” என்கிறார் வரலாற்று ஆய்வாளர் கோசாம்பி.*
- *கீதையின் முரண்பாடுகளைப் போலவே - இந்துக்களின் பண்பு நலனும் சொல் ஒன்று, செயலொன்றாகியது. உயர்ந்த தத்துவங்களைப் பேசும் அறிவுஜீவியாகத் திகழும் இந்து, பிறரிடம் உறவாடுதல் என்று வரும்போது சாஸ்திரங்களையும், விதிகளையும் பின்பற்றுகிறான் என்று இந்துப் பண்பாட்டை மதிப்பிடுகிறார் நூலாசிரியர்.*
- *குழப்பங்கள் நிறைந்திருந்தாலும், கீதையின் கருத்துகளுக்கு தெய்வீகம் சாயம் பூசப்பட்டதால், பல்வேறு ‘இந்து’ சிந்தனை மரபைச் சார்ந்தவர்கள், கீதையின் பக்கமே சாய்ந்தனர். சீதை சாங்கியக் கோட்பாடுகளையும் ஓரளவு பேசுவதால், பார்ப்பன மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்திவிடும் என்று, பகுத்தறிவாளர்களும் நம்பினார்கள். கீதையின் பொய்யான முழக்கங்கள், இப்படி அனைத்துத் தரப்பினரையும் ஏமாற்றியது.*
- *பல்வேறு சிந்தனைகளைக் கொண்டிருந்த மக்களின் மனநிலை மாறத் தொடங்கிய நிலையில், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி.319-ம் ஆண்டில் சந்திரகுப்தன் என்ற உள்ளூர் படைத் தலைவன், பாடலிபுத்திரத்தில் ஒரு பேரரசை உருவாக்கினான். கோசலம், மகதம் ஆகிய பகுதிகளிலும் தனது ஆட்சியைப் பரவச் செய்து 16 ஆண்டுகாலம் ஆட்சி செலுத்தினான். தொடர்ந்து அவனது மகன் சமுத்தரகுப்தன் தனது எல்லைகளை மேலும் விரிவுபடுத்தினான். சந்திரகுப்தனுக்குப் பிறகு அவனது மகன் இரண்டாம் சந்திரகுப்தன் பதவிக்கு வந்து, தனது பெயரை விக்கிரமாதித்தன் என்று மாற்றிக் கொண்டான்.*
- *குப்தர்கள் தங்கள் ஆட்சி எல்லைப் பகுதிகளை விரிவாக்கி, ஒரு பேரரசை நிறுவினார்கள். அதற்கு வழிமுறைகளைக் காட்டியது கீதையின் கற்பிதங்களே என்கிறார் நூலாசிரியர். குப்தர்கள் ஆட்சியில், பார்ப்பன ஆதிக்கம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது. இந்த ஆட்சியில் மக்களின் சமூகப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது உண்மை தான் என்று கூறும் நூலாசிரியர், அதற்கு, நாட்டு நிர்வாக அமைப்பில் பவுத்த புரட்சி நிறுவி இருந்த நல்ல அடித்தளங்கள் தான் காரணமே தவிர, குப்தர்களது திறமையல்ல என்று நூலாசிரியர் கூறுகிறார்.*
- *இதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்பு, குப்தர்களைப் போலவே மவுரியர்களும் பேரரசைக் கட்டி ஆண்டார்கள். அசோகரும் மவுரியப் பேரரசர் தான்; அவர்கள் புத்தரின் அறநெறிக் கோட்பாடுகளைப் பரப்பி நல்லாட்சி நடத்தினார்கள். ஆனால் குப்தர்களோ, அறநெறியை கைவிட்டு, போரை நாடினார்கள் என்கிறார் ஆய்வாளர் கோசாம்பி. அசோகர் நிறுவிய கல்வெட்டுத் தூண்களில், சமுத்திரகுப்தன், தனது போராட்ட வெற்றிகளையும், தனது புகழையும் பொறித்துக் கொண்டான்.*
- *பவுத்தப் புரட்சியின்போது அமுலில் இருந்த சமூக நடைமுறைகள் அனைத்தும், குப்தர்கள் ஆட்சியில் மாற்றியமைக்கப்பட்டன. பார்ப்பன புரோகிதங்களும், சாதியமும், யாகங்களும், சடங்குகளும் முக்கியத்துவம் பெற்றதோடு, பார்ப்பனர்களுக்கு, குப்தர்கள் ஏராளமாக நிலங்களையும் வழங்கினார்கள். பசுக்கள் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்டன. மக்கள் மொழியான ‘பிராகிருதம்’ ஒழிந்து, சமஸ்கிருதம் அரசு மொழியாகியது.*
- *குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர் (கி.பி.476) கிரேக்க, எகிப்திய, பாபிலோனிய மொழிகளிலிருந்த வானவியல், கணிதம் பற்றிய குறிப்புகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார். அந்த அடிப்படையில் கோப்பர்நிக்கஸ் காலத்துக்கு முன்பே, கி.பி.499-ல் சூரிய மண்டலம் பற்றிய கருத்துகளை வெளியிட்டார். பூமி தனது அச்சில் சுழன்று வரும் கோளம் என்றும், பூமி மற்றும் சந்திரன் நிழல்களே கிரகணங்கள் என்றும், ஆண்டுக்கு 365.3586805 நாட்கள் என்றும் அவர் கூறினார். ஆரியபட்டர், சோதிடம், சாகதகம் ஆகியவற்றை அறிவியல் அல்ல என்று புறக்கணித்தார். ஆனால், ஆரியபட்டரின் புரட்சிகர கருத்துககளை, பார்ப்பனர்களும், குப்த ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அதே காலத்தில் வாழ்ந்த வராக மிகிரர் என்ற பிற்போக்குவாதி, வானவியலை சோதிடம், சாதகம், கணிதம் என்று மூன்றாகப் பிரித்து, சோதிடத்துக்கும், சாதகத்துக்கும் முக்கியத்துவம் அளித்தார்.*

  *பார்ப்பனர்கள் ஆர்யபட்டரைப் புறக்கணித்து வராகமிகிரரை ஏற்றுக் கொண்டனர். வானவியல், கணிதம் ஆகியன வளர்ச்சி அடையாமல் தடுத்தனர். (இந்தியாவின் செயற்கைக்கோள் ஒன்றுக்கு ‘ஆர்யபட்டா’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.)*
- *குப்தர்கள் ஆட்சியில் சட்ட நூல்கள், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை பற்றிய நூல்கள் எழுதப்பட்டன. ஏராளமான புராணக் கதைகளும் அப்போதுதான் உற்பத்தியாயின. ஆனாலும் கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய அனைத்திலும் பார்ப்பனிய உற்பத்திகள் கீழ்த்தரமானவையாகவும், சொந்த முயற்சியின்றி திருடப்பட்டதாகவும் இருந்தன என்கிறார் நூலாசிரியர் பசாஸ்.*
- *பவுத்தம் உருவாக்கிய மக்களாட்சி தத்துவத்தை ஒழித்தது குப்தர்களே என்கிறார் வரலாற்று ஆய்வாளர் ஆர்.சி.மஜீம்தார் புதிய கலை இலக்கியங்களை உற்பத்தி செய்த பார்ப்பனர்கள், பழைய சாத்திரங்களில் மாற்றம் செய்வது, இடைச் செருகுவது, புதிதாக சேர்ப்பது என்ற அனைத்து கபட வேலைகளையும் செய்தனர். பார்ப்பனர்களின் முக்கிய எதிரியான கவுதம புத்தர் - இந்துக் கடவுளான விஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரமாக குப்தர்கள் காலத்தில் அறிவிக்கப்பட்டார்.*

*(தொடரும்)*

# உலகத் தமிழர் மாநாடு; பார்ப்பன ஏட்டின் திமிர்

*‘புலி ஆதரவாளர்கள் ஜெயாவுக்கு எச்சரிக்கை’ - இது, உலகத் தமிழர் பேரமைப்பு பெங்களூரில் நடத்திய மாநாடு பற்றி பார்ப்பன ‘தினமலர்’ ஏடு வெளியிட்டுள்ள தலைப்பு.*

*உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் - ஒரு அமைப்பாகத் திரண்டு, தமிழர்களின் பண்பாடு, அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்கும், உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பு தான் உலகத் தமிழர் பேரமைப்பு. ஆனால், தமிழிலே பத்திரிகை நடத்திக் கொண்டு, தமிழர்களிடையே அதை விற்று கோடிகோடியாகக் கொள்ளை அடிக்கும் ‘தினமலர்’, உலகத் தமிழர் அமைப்பையே கேலி செய்கிறது! என்ன திமிர்!*

*உலகத் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பை தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதற்காக மட்டும் உருவாக்கப்பட்ட அமைப்பு என்று எழுதுகிறது. அந்த ஏடு இப்படி எல்லாம் எழுதி உலகத் தமிழர் அமைப்பையும் தடை செய்துவிட முடியுமா என்று, ஏங்கி நிற்கிறது, இந்தப் பார்ப்பனக் கூட்டம்.*

*பழ. நெடுமாறன், வை.கோ., சுப.வீ. உட்பட பலரையும் ஓராண்டுக்கு மேல் ‘பொடா’ சட்டத்தில் சிறையிலடைத்த போதும், அவர்கள் உறுதியோடு அதை சந்தித்துத் தீரமுடன் பட்டைத் தீட்டிய கொள்கை வைரங்களாக வெளி வந்துள்ளார்கள். அதற்குப் பிறகும்கூட பார்ப்பனர்களின் பழி வாங்கும் வெறி அடங்கியபாடில்லை. மீண்டும் ஜெயலலிதாவையும், மத்திய அரசையும் உசுப்பிவிடுகிறார்கள்.*

*உலகத் தமிழர் பேரமைப்பு மாநாட்டில் பங்கேற்க வந்த, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார். சார்க் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்நாடுகளுக்குள் தங்குதடையின்றி பயணம் செய்யலாம் என்ற ஒப்பந்தங்கள் இருந்தாலும், அது தமிழன் என்றால் பொருந்தாது என்று ‘இன ஒதுக்கல்’ செய்கிறது. இந்தியாவை ஆட்டிப் படைக்கும் பார்ப்பன ஆளும் வர்க்கம்; ஆட்சிகள் மாறினாலும், அதிகார மய்யம் பார்ப்பனர்களிடமே இருக்கிறது என்பதை, இதற்குப் பிறகாவது தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*திராவிட மொழிகளுக்கு எல்லாம் தாய் மொழியாக இருந்து, இலக்கிய வளங்களைக் கொண்ட தமிழைச் செம்மொழியாக்கினால், அது பார்ப்பனர்களுக்கு கசக்கிறது; தமிழை செம்மொழியாக்கினால், மக்கள் பிரச்சினை தீர்ந்து விடுமா என்று கிண்டல் செய்கிறார்கள். ஆனால், பேசுவதற்கு ஆளில்லாத - சமஸ்கிருதத்தைத் தெய்வமொழி என்கிறார்கள். பைத்தியம் பிடித்த பார்ப்பான்கூட சமஸ்கிருதத்தையோ, பார்ப்பனர்கள் நடத்தும், யாக, யக்ஞ கூத்துக்களையோ கேலி பேசுவது இல்லை. உலகத் தமிழர் கூட்டமைப்பு என்றாலும், “இவாளுக்கு” குமட்டும்; தமிழ் செம்மொழி என்றாலும் கசக்கும்; சூடு சொரணையில்லாத இனமாக தமிழினம் இருக்கிறது என்ற ‘திமிரில்’ - பார்ப்பனக் கொழுப்பு, இவர்களை இப்படி எழுதவும், பேசவும் வைக்கிறது.*

*பார்ப்பான் இப்படி நஞ்சைக் கக்கினாலும் - தமிழ் அமைப்புகள் பெரியாரை ஒதுக்க முயற்சிப்பதுதான் வேதனைக்குரியது!*

*ஆனாலும் - தமிழின உணர்வாளர்கள் - ‘தினமலர்’, ‘துக்ளக்’ போன்ற பார்ப்பன ஏடுகளைப் புறக்கணித்தால் - இவர்கள் கொட்டம் அடங்கிப் போகும். இந்தப் பார்ப்பனர்களின் தமிழினப் பகைமையை ஊர்தோறும் விளக்குவோம்! திண்ணை தோறும் பேசுவோம்; தமிழை வைத்துப் பிழைக்கிற இந்தக் கூட்டம் - தமிழர்களையே அவமதிப்பதை எத்தனை காலம் பொறுத்திருப்பது?* ●

# கூரைகளை மாற்றுவது மட்டும் பிரச்சினைக்கு தீர்வல்ல!

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

மாலை நேரத்தில் பேருந்து நிலையம் அருகில் இந்த ஆர்ப்பாட்டம் ஒருமணி நேரத்திற்கும் மேல் நடைபெற்றதால் ஏராளமான பொது மக்கள் நின்று ஆர்ப்பாட்டத்தைக் கவனித்தனர். பேருந்துகளில் பயணம் செய்த நூற்றுக்கணக்கான பயணிகளும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியைப் பார்த்தனர்.

### திருப்பூர்

23.7.04 அன்று மாலை 4 மணிக்கு திருப்பூர் குமரன் நினைவுப் பூங்கா முன்பு மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் இல.அங்ககுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பாடகர் தியாகு கும்பகோணத்தில் பலியான குழந்தைகள் நினைவாக பாடல் பாடினார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி, இல. அங்ககுமார், கோட்ட அமைப்பாளர் சி.இராவணன், கே.எசு. துரைசாமி, இளைஞரணி அமைப்பாளர் ப.விசயகுமார், இளஞாயிறு ஆகியோர் உரையாற்றினர். கோரிக்கை முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் 1 மணி நேரம் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பாளர் வீ.குமார், நல்லூர் நகர அமைப்பாளர் மலர் ஆறுமுகம், நகரத் தலைவர் முகில் இராசு, செயலாளர் க. அகிலன், கோட்ட அமைப்பாளர் செந்தில் குமார், இளைஞரணி அமைப்பாளர் ந.இராசேசு கண்ணா, மாணவரணி அமைப்பாளர் ஞா.கார்த்திகேயன், ஒன்றிய அமைப்பாளர் த. முத்து, ஒன்றிய செயலாளர் ம.இராமசாமி, இளைஞரணி அமைப்பாளர் லட்சுமி காந்தன் மற்றும் 4 பெண்கள் உள்பட 65 தோழர்கள் கலந்து கொண்டனர்.

### பொள்ளாச்சி

குழந்தைகளை வதைக்கும் கல்வி வியாபாரத்தை தடுத்து நிறுத்திடவும், தனியார் பள்ளிகளை அரசே ஏற்று அடிப்படைக் கல்வியை வழங்கிடக் கோரியும் 23.7.2004 வெள்ளி காலை 11 மணிக்கு பொள்ளாச்சி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழக ஆட்சிக் குழு உறுப்பினர் இரா. மனோகரன் தலைமை தாங்கிட, மாவட்ட கழகத் தலைவர் கு.நாச்சி முத்து, மாவட்ட கழக செயலாளர் கா.கரு மலையப்பன் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பொள்ளாச்சி நகர தி.மு.க. துணைச் செயலாளர் சி.ரங்கநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, கி.கண்ணப்பன், ம.தி.மு.க. ராஜ்குமார், மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந.பிரகாசு, பொள்ளாச்சி வட்ட செயலாளர் கா.சு.நாகராசு, நகர கழகத் துணைசெயலாளர்கள் தராஜேந்திரன், கு.வெங்கடேசு, கலை ராஜேந்திரன், உடுமலை நகர தலைவர் யாழ் நடராசன், ஒன்றிய கழகச் செயலாளர் விசு, பொருளாளர் கதிவரன், பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் சி.விசயராகவன், நகர இளைஞரணி செயலாளர் இளையராஜா, க.கா.புதூர் ஆதி, சம்பத், உதயகிரி உட்பட 70-க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் கழக பொறுப்பாளர்கள் உரையாற்றியபின் நகர கழக செயலாளர் வே. வெள்ளியங்கிரி நன்றி கூறினார்.

குடந்தைக் கொடுமைகள் தொடராதிருக்க அடிப்படைக் கல்வியை அரசே யேற்று வழங்கிட வேண்டியதன் அவசியத்தை விளக்கி ஆயிரக்கணக்கான துண்டறிக்கை பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

### சென்னை

சென்னையில் ஜூலை 26-ம் தேதி மாலை 4 மணியளவில், சென்ட்ரல் இரயில் நிலையம் அருகே, விக்டோரியா அரங்கின் முன், கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆட்சிக்குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன் தலைமை தாங்கினார். குடந்தையில் - தீயில் கருகி மாண்ட குழந்தைகளுக்கு வீரவணக்கம் செலுத்தியும், அடிப்படைக் கல்வியை அரசே ஏற்று நடத்தக் கோரியும், ஒரு மணி நேரம் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், கழகப் பொறுப்பாளர்கள் கேசவன், கருங்குழி கண்ணன், சைதை அன்பு (திமுக), விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, ஆனூர் ஜெகதீசன் நிறைவுரையாற்றினார்.

"குடந்தை கொடுமைகள் தொடராதிருக்க, ஓலைக் கூரைகளை மாற்றுவது பிரச்சினைகளைத் தீர்த்துவிடாது. பள்ளிக்கூடங்கள், முழுமையான உள் கட்டமைப்பு வசதிகளோடும், பாதுகாப்போடும் செயல்பட வேண்டும்; அதைச் செய்துதர வேண்டியது அரசின் கடமை. அண்ணாமலை அரசர், அழகப்பா செட்டியார், பச்சையப்ப முதலியார் போன்ற வசதி படைத்தவர்கள், ஒரு காலத்தில் உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்கினார்கள். அவர்கள், சமுதாய உணர்வோடும், சமூகப் பொறுப்போடும் கல்வி நிலையங்களை நடத்தினார்கள். ஆனால் சமூகப் பொறுப்பற்ற வியாபாரிகள், கல்வித் துறையில் நுழைந்து, பணம் சம்பாதிப்பதே லட்சியம் என்றாக்கி விட்டதால், இத்தகைய விபரீதங்கள் நடக்கின்றன. இவர்கள் மீது அரசு கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அடிப்படைக் கல்வியை, அரசே வழங்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். தோழர் சைதை அன்பு பேசுகையில், "அரசு, பிராந்தி கடைகளை நடத்திக் கொண்டு, பள்ளிக்கூடங்களைத் தனியாரிடம் விட்டுவிட்டது; இது என்ன நியாயம்?" என்று கேட்டார்.

ஆர்ப்பாட்டத்தில் தோழியர்கள் ஜாங்குலின், கவிதா, மண்டோதரி, அன்பு, சேத்துப்பட்டு இராசேந்திரன், தபசி குமரன், உமாபதி, குமரன், அண்ணாமலை, டிங்கர் குமரன், தமிழ், நீலகண்டன், உட்பட 70 தோழர்கள் கலந்து கொண்டனர். மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சார்ந்த தோழர்களும் பங்கேற்றனர். உமாபதி நன்றி கூற, 5.15 மணியளவில் ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. ●

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறகாவது தமிழர்கள் ஏற்பார்களா?" என்ற அர்த்தமுள்ள கேள்வியை எழுப்பினார், தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

"தமிழர்களின் அரசியல் உரிமைக்கு, தமிழன் என்ற அடையாளத்தை வலியுறுத்தினார் பெரியார். அதே நேரத்தில் தமிழர்களின் பண்பாட்டு உரிமைக்கு திராவிடர் என்ற அடையாளத்தை அவர் முன் வைத்தார்" என்று தெளிவாக விளக்கமளித்தார் தோழர் கொளத்தூர் மணி.

"உலகத் தமிழர் பேரமைப்புக்கு என்றும் ஆதரவாக இருப்பேன்; பொடா அடக்குமுறைகளை சந்தித்தோம்; அடக்குமுறைகளால் ஒரு போதும் நமது உறுதியைக் குலைத்து விட முடியாது" என்று பிரகடனப்படுத்தினார், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

காலை நிகழ்ச்சியில் சில சிங்கள வெறியர்கள், மாநாட்டு அரங்கிற்குள் கூச்சல் போட்டனர். தமிழர்கள், கவனம் சிதறாமல் கட்டுப்பாடாக, அந்தக் கூச்சலைப் புறக்கணித்து, மாநாட்டை வெற்றிகரமாக்கினர்.

எழுச்சியுடன் இசை நிகழ்ச்சி நடத்திய தேனிசை செல்லப்பா - பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகளைக் கூறியபோது, அரங்கமே கரவொலியால் அதிர்ந்தது. மாநாட்டில் 20 தமிழ்ச் சான்றோர்கள் படங்கள் திறக்கப்பட்டன. அதில் பெரியாரும் அண்ணாவும் இடம்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

**– நமது செய்தியாளர்**

## டாக்டர் கிருஷ்ணசாமி மீது கொலை வெறித் தாக்குதல் கழகம் கடும் கண்டனம்

புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமியை கொலை செய்யும் நோக்கத்தோடு, பாளையங்கோட்டையில் அவர் கார் மீது, சாதி வெறியர் கூட்டம் ஒன்று, வெடிகுண்டுகளை வீசியுள்ளதை, வன்மையாகக் கண்டிக்கிறோம். கார் ஓட்டுநரின் திறமையால் டாக்டர் கிருஷ்ணசாமி உயிர் பிழைத்துள்ளார். தென் மாவட்டங்களில் அடக்கப்பட்டுக் கிடந்த தலித் மக்களிடையே விழிப்புணர்வையூட்டி, தீண்டாமைக்கும், சாதி வெறிக்கும் எதிராக போராடி வருபவர் டாக்டர் கிருஷ்ணசாமி. மீண்டும் கலவரத்தை உருவாக்கும் நோக்கத்தோடு, ஒரு கும்பல் திட்டமிட்ட சதியில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. காவல்துறை, குற்றவாளிகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துகிறது.

## பொடியன் சாமி பற்றி சத்யராஜ்

நடிகர் சத்யராஜ் 'ஆனந்த விகடன்' பத்திரிகைக்கு ஒரு பேட்டி அளித்துள்ளார். அதில் கூறி இருப்பதாவது:-

**கேள்வி:** அரசியலில் உங்களுக்கு ரோல் மாடல் யார்?

**பதில்:** தமிழர்களின் அடையாளமான தந்தை பெரியார்தான். அவரைவிட பெரிய சமுதாய சிந்தனைவாதி யாருமில்லை. அரசியலில் என்னை கவர்ந்தது, சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீ க்வான் யூ. அப்போது சிங்கப்பூரில் ஒன்றுமே கிடையாது. எதை வெச்சு முன்னுக்கு வரலாம்னு யோசிச்சு வியாபார சந்தையாக மாத்தலாமேன்னு அவர்தான் முடிவு செய்தார்.

**கேள்வி:** குட்டிச் சாமியார் விஷயம் பரபரப்பாகிட்டிருக்கு பார்த்தீங்களா?

**பதில்:** எல்லாச் சாமியார்களும் காமெடியன்கள்தான். அதில் குட்டிச் சாமி பெரிய காமெடியன். கடவுள் நம்பிக்கை குறைஞ்சுகிட்டே போகுது. ஆனா சாமியார்களின் எண்ணிக்கை அதிகமாயிட்டே போகுதுன்னா என்ன அர்த்தம். கடவுளை நம்பாமல் மனுஷனை நம்புறாங்க. அதானே! நம்ம ஊர்ல முட்டாள்தனம் ஏதாவது ஒரு வடிவத்துல நடந்துகிட்டே தான் இருக்கு.

### சந்தாதாரர்களுக்கு

பெரியார் முழக்கத்துக்கு காசோலை, கேட்பு ஓலை மூலம் சந்தா அனுப்புவோர்:

**"PURATCHI PERIYAR MUZHAKKAM"** என்ற பெயரில் அனுப்பவும்

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 29th July 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.